மலிவு விற்பனை
மக்கள் கடை
(சுவிஸ் - சொலத்தூண்)
எதிர்வரும் 27 (வெள்ளி), 28 (சனி) ஆகிய இரு தினங்களில்
அனைத்துப் பொருட்களும் 10% கழிவில்

France: 10FFrs. GB: 90P Germany: 2.50DM Suisse: 2.50SFrs.

ஈழமுரசு
Eelamurasu Weekly

முரசு: 2 | 26 செப்டெம்பர் - 02 ஒக்டோபர் 1996 | முழக்கம் : 89

மலிவு விற்பனை
மக்கள் கடை
(சுவிஸ் - சொலத்தூண்)
எதிர்வரும் 27 (வெள்ளி), 28 (சனி) ஆகிய இரு தினங்களில்
அனைத்துப் பொருட்களும் 10% கழிவில்

# பரந்தனில் உக்கிரமான சண்டை
# 32 இராணுவம் பலி 100 பேர் காயம்

**ஏற்கனவே பரந்தனில் நிலை கொண்டுள்ள சிறீலங்கா இராணுவத்தினர் கிளிநொச்சி நகரத்தை பிடிப்பதற்காக கடந்த 22.09.96 ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்த பாரிய படை நகர்வை எதிர்த்து விடுதலைப் புலிகள் உக்கிரமாகப் போராடிவருகின்றனர்.**

23.09.96 திங்கட்கிழமை நடந்த ஒருநாள் சண்டையில் மட்டும் 32 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். 100–க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

முல்லைத்தீவு இராணுவத்தளத்தில் ஏற்பட்ட தோல்வியை அடுத்தும் தாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக புலிகள் காட்டிய கடும் எதிர்ப்பாலும் கிளிநொச்சியை பிடிப்பதற்கான தமது சத்ஜய இராணுவ நடவடிக்கையை சிறீலங்கா அரசு முன்பு பரந்தனுடன் இடைநிறுத்தியிருந்தது.

ஆயினும் தென்பகுதியில் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவரும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளாலும், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையேற்றத்தாலும் சிங்கள மக்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு உருவாகிவருகிறது. இந்த நிலையில் இழந்து போய்விட்ட தமது பழைய செல்வாக்கை ஓரளவுக்காவது மீட்பதற்கு எப்படியும் கிளிநொச்சியைப் பிடித்துவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு கடந்த 22.09.96 ஞாயிற்றுக்கிழமை காலையில் மீண்டும் சத்ஜய இராணுவ நடவடிக்கையைத் தொடங்குமாறு சிறீலங்கா அரசு தமது படைகளுக்கு உத்தரவிட்டது.

கவசவாகனங்கள், டாங்கிகள், ஆட்டிலெறி பீரங்கிகள் சகிதம் பரந்தனிலிருந்து கிழக்குப் பகுதி ஊடாக விமானப்படையின் துணையோடு முன்னேற முயன்ற படையி

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## மட்டக்களப்பில் நேரடி மோதல் ஐந்து இராணுவத்தினர் பலி

(கொழும்பு)

மட்டக்களப்பு நாவலடியில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற நேரடி மோதலில், 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 15–ற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.

கடந்த 23.09.96 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் நாவலடி படை முகாமிலிருந்து இராணுவத்தினர் ரோந்து சென்றபோது வாழைச்சேனைக்கு வடக்கே 3 கி.மீ தொலைவில் அங்கு திடீரென எதிர்ப்பட்ட புலிகள் சிறியரக

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## கம்பூச்சியாவிலிருந்து புலிகளுக்கு ஆயுதங்கள்?

சீனாவில் தயாரிக்கப்பட்ட சாம் ரக விமான எதிர்ப்பு ஏவுகணைகள் உட்பட பலரகமான ஆயுதங்களை கம்பூச்சியாவிலிருந்து விடுதலைப் புலிகள் பெற்றுக் கொண்டதாக சிறீலங்கா அரசு கொடுத்த புகாரை ஒட்டி இது பற்றி உடன் விசாரணை நடத்தி அறிக்கை தருமாறு கம்பூச்சிய இளவரசர் உத்தரவிட்டுள்ளார்.

இது பற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையில் இப்படியான ஆயுத வியாபாரம் நடக்கிறது என்பதற்கு ஆதாரம் எதுவும் இல்லை. சிறீலங்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## அனுரா பண்டாரநாயக்க மயிரிழையில் தப்பினார்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க உட்பட அலி அளுவிகார, ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் பயணம் செய்த வாகன அணியை நோக்கி பொதுஜன மக்கள் முன்னணி ஆதரவாளர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர். ஆனால் இத் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கட்டுநாயக்க– சீதுவை நகர சபை உப தலைவர் சில்வன் ஜெ பெரேரா உட்பட நான்கு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களும் பொதுமகன் ஒருவருமாக மொத்தம் ஐந்துபேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இம்மாத ஆரம்பத்தில் பொதுஜன முன்னணியின் ஆதரவாளர்கள், ஐக்கிய தேசியக் கட்சியின் பொன்விழா நிகழ்வுகளைக் குழப்ப முயன்றபோது நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒரு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் ஒரு பொதுஜன மக்கள் முன்னணி உறுப்பினரும் கொல்லப்பட்டிருந்தனர். இது தொடர்பாக ஐ.தே. கட்சிப் பிரமுகர் விஜயபால மென்டிசின் மகன் கைது செய்யப்பட்டிருந்தார்.

நீர்கொழும்பு நீதிமன்றத்தில் இச் சம்பவம் தொடர்பான வழக்கு நடைபெற்றதை அவதானித்துவிட்டுத் திரும்பும் வழியில், இவர்களுடைய வாகனத்துக்குப் பின்னால் வந்துகொண்டிருந்த வெள்ளை நிற

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## முகமாலையில் இராணுவம் வெறியாட்டம் ஆறு பொதுமக்கள் பலி பலர் படுகாயம்

தென்மராட்சிப் பகுதியிலுள்ள முகமாலைப் பகுதியில் கடந்த 21.09.96 சனிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கி வெறியாட்டத்தால் 6 அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டனர், 10–ற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

சம்பவதினத்தன்று முகமாலை இராணுவ முகாமிலிருந்து வீதிகளில் கொள்ளையடிக்கும் நோக்குடனும், பெண்களை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கும் நோக்குடனும், இராணுவக் கோஷ்டி ஒன்று புறப்பட்டுச் சென்றது. இந்த விடயத்தை அறியாத முன்னணிக் காவலரணிலிருந்த இராணுவத்தினர் அவர்களைப் புலிகள் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அவர்களோ இவர்களை முன்னணிக் காவலரண்களில் ஊடுருவி ஒழித்திருந்த புலிகள் என நினைத்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

சிறிது நேரத்தில் இரு பகுதியினரும் மாறி மாறி துப்பாக்கிச் சமர் நடத்திய பின் இராணுவ முகாமிலிருந்து திருட்டுத்தனமாக வெளியே

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## பிரபல கவர்ச்சி நடிகை சிலுக்கு சுமிதா தற்கொலை

(சென்னை)

தென்னிந்தியாவின் பிரபல கவர்ச்சி நடிகை சிலுக்கு சுமிதா கடந்த 22.09.96 திங்களன்று தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

எண்பதுகளிலிருந்து இன்றுவரை கோடிக்கணக்கான சினிமா ரசிகர்களை தனது கவர்ச்சி நடிப்பால் கவர்ந்து வைத்திருந்தவர் சுமிதா. வண்டிச் சக்கரம் படத்தில் சுமிதா அறிமுகமான பின் அன்றைய காலங்களில் சுமிதாவின் கவர்ச்சி நடனம் இல்லையென்றால் படம் ஓடாது என்ற நிலை இருந்தது.

தமிழ், தெலுங்கு, கன்னடம் உட்பட பல தென்னிந்தியத் திரைப் படங்களில் நடித்துள்ள சிலுக்கு சுமிதாவுக்கும் தாடிக்கார வாலிபர் ஒருவர் காதலனாக இருந்தார். அவரையே சுமிதா திருமணம் செய்து கொள்ளப்போவதாகவும் சொல்லியிருந்தார். சமீபத்தில் அந்தத் தாடிக்கார வாலிபர், சுமிதா தன் கவர்ச்சி நடிப்பினால் சம்பாதித்து வைத்திருந்த பணத்தை, அவரை ஏமாற்றி மோசடி செய்துவிட்டதனால் மனமுடைந்த சுமிதா தற்கொலை செய்துகொண்டதாக சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏசியன் என்ரபிறைஸ்
பட்டுவேட்டி, மாறுகரை வேட்டி ,நாலுமுழ வேட்டி, கிப்ஸ் சாரம்,
பெண்களுக்கான அலங்காரப் பொருட்கள், திருமணத்திற்கான அனைத்துப்
பொருட்களும் கூறைச்சேலை, பாவாடை, சட்டை, இந்தியாவிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட எல்லா நிறங்களிலுமான சட்டைத்துணிகள்
* தங்க நகைகளுக்கு உத்தரவாதமும் பற்றுச்சீட்டும் வழங்கப்படும் *
AE
ASIAN ENTERPRISE
Tel: 01/291 46 52
Fax: 01/291 46 37
Hohl.Str 78,
8004 Zurich.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
K. Kesenthiran

**Impression:**
IMPRIMERIE MEAULLE

நிர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
ஆசிரியர்:
க. கஜேந்திரன்

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris,
France

விளம்பர விநியோக தொடர்புகட்கு:

பாரிஸ்:
TeL: 40 37 63 63
Fax: 40 37 64 64

ஜேர்மனி:
NIRMALARAJAN
Tel: 041333896

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்:
மக்கள் கடை
Tel: 01-271 7374
நேசன் - 077 696592

லண்டன்:
ஜெயந்தன்:
Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD
Tel: 22425527

நெதர்லாந்து:
தாஜுவர்த்தன்
Tel: 0223 680462

லாச்சப்பலில்

சகலவிதமான அச்சுத்
தேவைகளுக்கும்

தமிழ்
அச்சகம்
42 09 60 64

# மட்டக்களப்பில் ஓயாத அலைகள்

கெரில்லா யுத்த முறையில் ஒரு சரித்திரத்தை ஏற்படுத்தி, உலகம் முழுவதற்கும் அதனைத் தெரியப் படுத்திய முல்லைப் படைத்தளத் தாக்குதல் விடுதலைப் புலிகளால் வீடியோவில் பதிவாக்கப் பட்டுள்ளது.

இந்த வீடியோப் பதிவுகள் தற்போது கிழக்கு மாகாணத்தின் பல பகுதிகளிலும் மக்களுக்கு போட்டுக் காண்பிக்கப்படுகிறது. இப்பதிவில் முக்கியமாக பிரதான தாக்குதல்கள், முகாம் கைப்பற்றப்படுதல், இராணுவத்தின் உடல்கள் கையளிப்பு, அலம்பில் தாக்குதல், கடற்படைக் கலம் மீதான தாக்குதல் போன்றவை இடம்பெறுகின்றன. இவ் வீடியோ ஆவணப் படத்தில் விளக்க உரைகள் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம் பெறுவது குறிப்பிடத்தக்கது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## பரந்தனில்...

னர் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாகவே அதிகளவு கடும் எதிர்ப்பை எதிர்கொண்டனர். விடுதலைப் புலிகள் முல்லைத்தீவில் எடுத்த ஆயுதங்களைக் கொண்டு இராணுவத்திற்கு கடுமையான பதிலடி கொடுத்தாக சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கோள்காட்டி கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமைச் செயலகம் வழமைபோல் கிளிநொச்சிக்கு 3 கிலோமீற்றர் தொலைவில் நிற்கிறோம் படைகள் முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்று அறிவித்த போதிலும், எதிர்ப்பு கடுமையாக இருந்தது என்பதையும், தமது தரப்பில் 22 படையினர் கொல்லப் பட்டுள்ளனர் என்பதையும் ஒத்துக் கொண்டுள்ளது.

விடுதலைப் புலிகள் 23.09.96 அன்று விடுத்த செய்திக் குறிப்பில் 22 ஞாயிறு முதல், 22 திங்கள் வரை தரைநகர முயன்ற இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையில் உக்கிரமான போர் நடந்து வருகிறது. படையினர் தொடர்ந்து அவர்களது நிலைகளிலேயே தங்கியுள்ளனர். அவர்களை முன்னேறவிடாது போராளிகள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்திய வண்ணமே உள்ளனர். படையினர் கிளிநொச்சி நகரப் பகுதியை நோக்கியும், அதன் சுற்று வட்டாரத்தில் உள்ள மக்கள் குடியிருப்புக்களை நோக்கியும் தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல்களையும், பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தி வருகின்றனர்.

சிறீலங்கா விமானப்படையின் கிபீர் விமானங்கள் கிளிநொச்சி சுற்று வட்டாரத்திலும், தாக்குதலுக்கு தப்பி ஓடும் மக்களை குறிவைத்தும் குண்டுகளை வீசி வருகின்றன என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## மட்டக்களப்பில்...

மோட்டார், மற்றும் இலகு இயந்திரத் துப்பாக்கிகள் சகிதம் அவர்கள் மீது தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலை எதிர்பார்க்காத இராணுவத்தினர் சிதறி ஓடினர். இத் தாக்குதலின் போது 5 இராணுவத்தினர் கொல்லப் பட்டதாகவும், 15-க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் மட்டக்களப்பு செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

சிறீலங்கா பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் ஐந்து படையினர் கொல்லப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## முகமாலையில்...

றிய கோஷ்டி தப்பித்து பின் வாங்கிச் சென்றுவிட்டது, அதன் பின் அவர்கள் வந்த திசையை நோக்கி இலக்கே இல்லாமல் கண்டபடி காவலரணிலிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும், எறிகணைத் தாக்குதலும் மேற்கொண்டனர்.

இதனால் அதிகாலை வேளையில் நல்ல உறக்கத்திலிருந்த அப்பாவிப் பொதுமக்கள் அலறி அடித்துக் கொண்டு மறைவிடங்களைத் தேடி ஓடினார்கள். இவ்வாறு அவர்கள் ஓடும் போதும், வீடுகளுக்குள் பதுங்கி இருந்த போதும் எறிகணைகள் விழுந்து வெடித்ததிலும், துப்பாக்கிக் குண்டுகள் தாக்கியதிலும் 6 பேர் கொல்லப்பட்டனர், பத்திற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்து சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை செயலகம் தங்களது இராணுவ முன்னணிக் காவலரண்களுக்குள் புலிகள் ஊடுருவ முயன்றபோது ஏற்பட்ட மோதலில் அகப்பட்டே பொதுமக்கள் கொல்லப்பட்டும், காயப்பட்டும் உள்ளதாக அறிவித்துள்ளது.

# மரண அறிவித்தல்

பிறப்பு: 22.11.1967

இறப்பு: 23.09.1996



## குமாரசாமி செல்வகுமார் (செல்வன்)

கோகிலவீதி கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த செல்வகுமார் 23.09.96 திங்கட்கிழமை பாரிசில் அகால மரணமானார்.

அன்னார் க.குமாரசாமி சரஸ்வதி தம்பதியின் அருமைப் புதல்வரும், இராசையா சின்னம்மாவின் அருமைப் பேரனும், திருமதி. அழகேஸ்வரி (பிரான்ஸ்), ஞானகுமார் (பிரான்ஸ்), திருமதி. சுஜிதா (கோண்டாவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கரிகரன், சிவலிங்கம் ஆகியோரின் மைத்துனரும், திருமதி. இலட்சுமி கிருஷ்ணபிள்ளை (கோண்டாவில்) திரு. சிவலிங்கம், சண்முகநாதன் (கோண்டாவில்), ஆகியோரின் மருமகனும், சின்னத்தம்பி, (கோண்டாவில்), ராஜ்குமர் மாதுரிதேவி (பிரான்ஸ்) ஆகியோரின் பெறாமகனும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலதிகத் தொடர்புகளுக்கு:
40 93 52 62 / 42 09 77 18 (பாரிஸ்)

தகவல்: ராஜ்குமார்,, கரிகரன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## அனுரா....

வான் ஒன்றிலிருந்து துப்பாக்கிப் பிரயோகமும் கைக்குண்டு வீச்சும் மேற்கொள்ளப்பட்டது. தாக்கப்பட்ட வாகனத்துக்கு முன்னால் சென்ற வாகனத்திலேயே அனுரா பண்டாரநாயக்கவும் மற்றைய உறுப்பினர்களும் இருந்ததால் அவர்கள் மயிரிழையில் உயிர்தப்பியுள்ளனர். எனினும் இது அனுராவுக்கான பொது ஜன முன்னணி அரசின் குறி என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகின்றது.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## கம்பூச்சியா....

காப் பாதுகாப்பு அமைச்சர் சீன ஆயுதங்கள், கம்பூச்சியாவிலிருந்து தாய்லாந்து மூலமாக சிறீலங்காவுக்கு கடத்தப்படுவதாக தெரிவித்ததையடுத்தே இவ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார்.

மலிவு.... மலிவு... நம்பமுடியாத மலிவு

அரிசி முதல் மீன்வகைகள் வரை
அனைத்துப் பொருட்களையும் ஒரே
இடத்தில் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

மக்கள் கடை

இது உங்களின் கடை

10Frs க்கு 1Kg மீன்

59, Rue Louis Blanc, 75010 Paris. M°: La Cheplle

பாரிஸ் 18-ல் கடை வாடகைக்கு

Chateau Rouge அல்லது Marcadet Poissonniers இற்கு அண்மையில்
30, Rue de la Ghouat, Paris 18-இல் றெஸ்ரோரன்ற் தவிர்ந்த நீங்கள்
விரும்பிய வியாபார ஸ்தலம் அமைக்கக்கூடிய 25M² இடவசதி கொண்ட
கடை உடன் வாடகைக்கு உண்டு வாடகை 2750 TF H.T
Bail 3, 6, 9 வருடங்களுக்கு
சகல தொடர்புகளுக்கும் சிவா
(மாலை 7 மணி முதல் இரவு 10 மணிவரை)
Tel: 46 71 66 91 / Mobil Tel: 09 91 12 66.

லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

Errances Travels

Tél: 42 09 70 00

à partire de

| | | |
|---|---|---|
| Bombay | - | 3,900 Frs. |
| Delhi | - | 3,900 Frs. |
| Bangkok | - | 3,350 Frs. |
| Colombo | - | 4,150 Frs. |
| Singapour | - | 3,350 Frs. |
| Kualalumpur | - | 3,400 Frs. |
| Madras | - | 4,750 Frs. |
| Londres | - | 650 Frs. |
| New york | - | 2,400 Frs. |
| Montreal | - | 2,400 Frs. |
| Oslo | - | 2,010 Frs. |
| Toronto | - | 2,700 Frs. |
| Nepal | - | 4,820 Frs. |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

Fax: 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly

# மீண்டும் 'சத்ஜய' வரும்-போகும்

இதோ.... அதோ... என ஒரு இழுபறி நிலையில் இருந்த 'சத்ஜய' இராணுவப் படையெடுப்பு இந்த வாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. முதலாவதாக ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கி எனக் கூறப்பட்ட இத் தாக்குதல் நடவடிக்கையானது விடுதலைப் புலிகளின் பலத்த எதிர்ப்பின் காரணமாக பரந்தனுடன் நின்று போனது. 'சூரியக்கதிர்' போல் 'சத்ஜயவும்' ஒரு தற்காலிக வெற்றியையாவது தருமெனவும், அந்த தற்காலிக வெற்றியை பிரமாத வெற்றியாக பிரச்சாரப்படுத்தி முல்லைதீவுத் தோல்வியை மூடி மறைக்கலாம் எனவும் எண்ணிய சிறீலங்கா அரசுக்கு விடுதலைப் புலிகளின் ஆக்ரோசமான பதிலடி நடவடிக்கை முகத்தில் கரி பூசிவிட்டது. முல்லைத்தீவு – பரந்தன் என தொடர்ச்சியாக நேர்ந்த இழப்புக்களினாலும், தெற்கில் எழுந்த சந்திரிகா அரசின் மீதான அவநம்பிக்கை அலையினாலும் தடுமாறிப்போன அரசு 'சத்ஜய'வை காரணங்கள் எதுவும் கூறாமல் இடைநிறுத்திக் கொண்டது.

ஆனால், சந்திரிகா அரசு பதவிக்கு வந்த காலம் முதல் அதனது ஒவ்வொரு நடவடிக்கையையும் தொடர்ச்சியாக உன்னிப்பாக அவதானித்திருந்தால் ஒரு உண்மை நிலை தெளிவாகத் தெரியவரும். அதாவது; சந்திரிகா தலைமையிலான அரசும் பௌத்த சிங்கள இனவாதத்தையே தமது ஆட்சியின் உயிர்மூச்சாகக் கொண்டு செயற்பட்டு போரை முடிவுக்கு கொண்டுவராமல் தொடர்வதுதான், அரசின் உயிர் வாழ்தலை நிர்ணயிக்கின்றது என்பதே அது.

இந்த அடிப்படையிலே ஐக்கிய தேசியக் கட்சி போரை வளர்த்து விட்டது. இனவெறியைத் தூண்டிவிட்டது. 'இனப்பிரச்சினைக்கான தீர்வு இனங்களின் சமத்துவமான ஒருமைப்பாட்டிலேயே தங்கியுள்ளது, ஆகவே பிரச்சினைகளை பேச்சுக்கள் மூலம் சமாதானமாகத் தீர்ப்பதே ஒரே வழி' என சந்திரிகா புதிய அவதாரம் எடுத்தார். இழப்புக்களாலும் சுமைகளினாலும் நொந்து போயிருந்தவர்களுக்கு அது ஆறுதலான செய்தியாகத் தோன்ற, இந்த அரசை நம்புவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையிலேயே சந்திரிகா தலைமையிலான அரசை ஆட்சிப் பொறுப்பில் ஏற்றினர்.

சந்திரிகா அரசைப் பொறுத்தவரையில் நியாயமான அணுகுமுறை மூலம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி ஒரு நிரந்தரமான தீர்வை ஏற்படுத்தினால் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பில் இருப்பது கேள்விக்குறியாகிவிடும். அடுத்தது, வளர்ந்துவிட்ட பௌத்த சிங்கள இனவாதம் அதனை எள்ளளவும் அனுமதிக்காது. தொடர்ந்து ஏதோவொரு பிரச்சினையைக் காரணம் காட்டி மக்களின் கவனத்தை அங்கு திருப்பி வைத்திருப்பதன் மூலமே ஆட்சிக் காலம்வரை பதவிகளில் அமரமுடியுமென்ற நிலையும் உள்ளது.

குடாநாட்டைக் கைப்பற்றியபின் அதனை வைத்தே காலத்தை நகர்த்த அரசு எண்ணியது. விடுதலைப் புலிகள் நீண்டகால நோக்கிலான தந்திரோபாயத்தின் அடிப்படையில் பின்வாங்கியதை அவர்களின் பலவீனமாகச் சித்தரிக்க முயன்றது. இப்போது அதன் பலனை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலை. அடுத்தகட்ட நகர்வுக்கு ஒருங்கிணைப்புக்குழு, மூன்றாவது மத்தியஸ்தத்துடனான பேச்சு, சமாதானம் எனக் கூறிக்கொண்டு படைபலத்தைப் பெருக்க முனைந்தாலும் எதிர்பார்த்தளவுக்கு அது வெற்றியளிக்கவில்லை. பொருளாதார வீக்கம் சுமக்கமுடியாதளவுக்கு தோன்றியுள்ளது. மின்வெட்டு, கொடுப்பனவு வெட்டு என்பவற்றால் வரவு செலவுத் திட்டத்தை நிரப்ப முயல, மக்கள் எதிர்ப்பு அரசை நோக்கி திரும்பி மையங் கொள்கிறது. மக்கள் அரசுக்கு கொடுக்கும் நெருக்கடியைக் குறைக்கவும் அவர்களது கவனத்தை வேறுதிசையில் திருப்பிவிடவுமே அரசு முனைகிறது. அந்த முயற்சியின் ஒரு பகுதியே 'சத்ஜயII' இராணுவ நடவடிக்கை.

போதிய இராணுவ படைபலம் இல்லாமல் திணறிக் கொண்டிருக்கும் அரசு, தனது பலவீனத்தை தெரிந்து கொண்ட பின்னரும், முல்லைதீவு – சத்ஜய தோல்விக்குப் பின்னரும், யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமது கட்டுப்பாட்டில் உள்ள நிலப்பிரதேசத்திலேயே நிம்மதியாக இருக்க முடியாத அபாயகரமான சூழ்நிலையிலும், கிழக்கில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் கை ஓங்கிவருவதை தடுக்க முடியாத நிலையிலும் 'சத்ஜயII' இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை அரசு மீண்டும் ஆரம்பித்திருக்கின்றது என்றால் அது இந்த அரசாங்கத்தின் உயிர்வாழ்தல் பற்றிய பிரச்சினைதான்.

அரச படைகள் இந் நடவடிக்கை மூலம் விடுதலைப் புலிகளிடம் பலத்த அடிவாங்கப் போவது நிச்சயம். அது சந்திரிகா அரசுக்கு நன்கு தெரிந்த விடயம்தான். எனினும் ஆட்சியை தொடர வேண்டுமெனில் எங்காவது போரை நடத்தியே ஆகவேண்டிய சூழ்நிலையில் இருப்பதுதான் சிறீலங்காவின் துரதிஷ்டம்.

# சிறீலங்காவின் ஏற்றுமதித்துறையில் பாரிய பாதிப்பு அதிகளவு ஏற்றுமதி வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன

சிறீலங்காவில் ஆட்சியிலுள்ள பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் யுத்தத்தின் மூலம் சமாதானம் என்கிற கொள்கை காரணமாக சிறீலங்காவின் தென்பகுதியில் ஏற்பட்டுள்ள பாதுகாப்பு கெடுபிடிகளாலும், பொருளாதார நெருக்கடிகளாலும் சிறீலங்காவின் ஏற்றுமதித்துறை பாரிய பாதிப்புக்கு உள்ளாகி உள்ளதாக தெரியவருகிறது.

இது தொடர்பாக சிலோன் வர்த்தக சேம்பர் கடந்த வாரம் கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாடொன்றை நடத்தியது. இந்த மகாநாட்டில் பத்திரிகையாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த வின் பெர்னான்டோ, நாட்டில் நிலவிய மின்சார நெருக்கடி, மற்றும் தொழிலாளர் ஒழுங்கீனம், நிதிப் பிரச்சினை, அதிகரித்த வட்டிவீதங்கள், அந்நிய செலவாணி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு முதலான பிரச்சினைகளால் இவ்வாண்டின் ஆரம்பம் முதல் இன்றுவரையுள்ள காலப் பகுதியில் மாத்திரம் 35 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன.

நாட்டின் ஏற்றுமதிக்கான உற்பத்தியில் 30 தொடக்கம் 60 வீதம் வீழ்ச்சி அவதானிக்கப்பட்டுள்ளது. ஏற்றுக் கொள்ளப்பட்ட வழங்கல் கட்டளைகள் நிறைவேற்றப் படாமையால் அதிக அளவில் ஏற்றுமதிக் கட்டளைகள் இழக்கப்பட்டுள்ளன. குறைந்த நேரத்தில் அதிக உற்பத்தியினை மேற்கொள்ள முயற்சித்ததால் உற்பத்திப் பொருட்களின் தரம் குறைந்துள்ளது. அதே சமயம் உற்பத்திச் செலவோ பல மடங்கு அதிகரித்துள்ளது.

அண்மைக் காலங்களில் தொழிலாளர் ஒழுங்கீனங்கள் அதிகரித்து வந்தமையால் அதிகளவு வேலை நிறுத்தங்கள் இடம் பெற்றுள்ளன. இதனால் தொழிலாளர்களுக்கான உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது.

தொழிலாளர் பிரச்சினையைப் பொறுத்தவரையில் பல நிறுவனங்கள் அவர்களுக்கான ஊதியத்தை கொடுக்க முடியாமல் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளன.

ஏற்றுமதிக்கான கட்டளைகள் 10 முதல் 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளன. இக் காலப் பகுதியில் அதிகமான நிதி நெருக்கடியையும், ஏற்றுமதியாளர்கள் எதிர் கொண்டனர். அதே சமயம் அரசாங்கத்திடமிருந்து வரவேண்டிய வருமதிகள் குறித்த நேரத்தில் வந்து சேரவில்லை.

உதாரணமாக தேயிலைச் சபையின் 1994ம் ஆண்டிற்கான நிதிக் கொடுப்பனவுகள் கூட இன்னமும் அரசாங்கத்தால் வழங்கப்படவில்லை. வங்கிகள் மிக உயர்ந்த வட்டி வீதத்திலேயே கடன் கொடுத்தன. வர்த்தக நடவடிக்கைகள் குறைந்ததால் இந்தக் கடன்களை பல நிறுவனங்கள் மீளச் செலுத்தவில்லை.

அதேசமயம் அந்நியச் செலவாணி வீதம் கட்டுப்பாடின்றி அதிகரித்ததால் ஏற்றுமதிக்கு சாதகமான நிலையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. பொதுவாக சிறீலங்காவில் முதலீடு செய்வது தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கையின்மை தெரிவித்துள்ளனர் என்று கூறினார்.

# படைக்கு ஆள்திரட்ட துட்டகைமுனுவின் பெயர் பெண்கள் அமைப்பு கடும் கண்டனம்

சண்டே லீடர் பத்திரிகையில், "சமானத்திற்கான பெண்கள் அமைப்பு" துட்டகெமுனுவின் பெயரைக் கூறி இன ரீதியில் படைகளுக்கு ஆட்சேர்க்கும் சிறீலங்கா அரசின் இனவாத நடவடிக்கைகளை காரசாரமாகக் கண்டித்துள்ளது. அவர்கள் தமது அறிக்கையில் கூறியிருப்பதாவது, "சிறீலங்கா அரசு படைகளுக்கு இளைஞர்களைச் சேர்ப்பதற்கு துட்டகெமுனுவின் பெயரை உபயோகிப்பது, குறிப்பாக புத்த மதத்தை தமிழர்களிடமிருந்து காப்பாற்ற முன்வாருங்கள் என விளம்பரப்படுத்தியமை ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது. துட்டகெமுனு மனச்சாட்சி உள்ளவராக நடந்தார் என சரித்திரம் கூறும்போது, அவர் மனிதாபிமானமற்றவர் என்ற வகையில் இவ் விளம்பரங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. சிறீலங்கா அரசு பல முகமூடிகளை அணிந்து செயல்படுவது ஒரு ஆர்வமான விடயமாக நோக்கப்படும் ஆங்கிலப் பத்திரிகையான சண்டே ஒப்சேவரில் துட்டகெமுனு பற்றி எந்தக் குறிப்பும் இல்லை. ஒருபுறம் சமாதான முகம்காட்டி, மறுபுறம் இனவாதம் பேசி படைதிரட்டுவது சமாதானம் நாடும் அரசுக்கு அழகல்ல" என அவ் வறிக்கை தெரிவிக்கிறது.

# அம்பாறையில் அதிரடிப்படை சுட்டு இருவர் பலி

அம்பாறை விநாயகபுரம் கிராமத்தில் ரோந்துசென்ற அதிரடிப் படையினரால் இரண்டு அப்பாவித் தமிழர்கள் ஒரு வாரத்திற்கிடையில் எவ்வித காரணமும் இன்றி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

திருக்கோவில், காஞ்சிபுரம் குடா ஆகிய இடங்களில் அமைந்திருக்கும் அதிரடிப் படை முகாமிலுள்ள படையினரே இப் படுகொலைகளை புரிந்துள்ளனர்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான வடிவேலு குமார் இருபத்தியிரண்டு வயதான சின்னத்துரை வீக்கினேஸ்வரன் ஆகிய இருவருமே இவ்வாறு கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

# 2005-ல் சிறீலங்காவில் 80,000 எயிட்ஸ் நோயாளிகள்

(கொழும்பு)

2005-ம் ஆண்டளவில் சிறீலங்காவில் 80 ஆயிரம் எயிட்ஸ் நோயாளிகள் இருப்பார்கள் என்று சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

இந்த ஆய்வின் படி சிறீலங்காவின் முதலாவது எயிட்ஸ் நோயாளி 1987-ம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டார் என்றும், 1996-ல் எயிட்ஸ் நோயாளிகள் என 172 பேர் அடையாளம் காணப்பட்டதாகவும், அதில் 58 பேர் நோய் முற்றிய நிலையில் இருந்தனர் என்றும், உண்மையில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் தொகை 6800 பேர்வரை இருக்கலாம் என்றும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு 15 வயதிற்கும் 64 வயதிற்கும் இடைப்பட்டவர்களே கூடுதலாக எயிட்ஸ் நோய் தொற்றுக்கு உள்ளாகின்றார்கள் என்றும். 2005-ம் ஆண்டு இத் தொகை 80 ஆயிரமாக அதிகரிக்கும் என்றும் அந்த ஆய்வறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் உலக எயிட்ஸ் நோயாளிகளின் தலைநகராக இந்தியா இருக்கும் என நம்பப்படுகிறது. இந்தியா, தாய்லாந்து உட்பட ஆசியாவிலேயே எயிட்ஸ் நோய் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்தியாவுக்கு அண்மையில் சிறீலங்கா இருப்பதால் அங்கிருந்து சிறீலங்காவுக்கு எயிட்ஸ் நோய் பரவுவதற்கு நிறையவே சாத்தியக்கூறுகள் உள்ளதென்று கூறப்படுகிறது.

இந்தியாவில் பாதுகாப்பற்ற வைத்தியமுறைகள் நிலவுவதும், எயிட்ஸ் அபாயம் பற்றி இந்திய மக்களிடையே போதிய விழிப்புணர்ச்சி இல்லாதிருப்பதும், நோயாளிகளுக்கு மருந்து ஏற்றுவதற்கு பயன்படுத்தும் ஊசிகள் முறையாக அழிக்கப்படாததும். அங்கு எயிட்ஸ் நோயாளிகள் பெருகுவதற்கு அடிப்படையான காரணங்களாக இருப்பதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு இலங்கை அகதிகள் படையெடுப்பார்கள் UNHCR பிரதிநிதி

வடக்கு கிழக்கு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறீலங்கா அரசாங்கம் உரிய நடவடிக்கையை எடுக்காவிட்டால், தமிழ் அகதிகள் தமிழ்நாட்டுக்குச் செல்வதானது ஒரு அகதிகள் படையெடுப்பாகவே மாறும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் தெரிவித்ததாக சென்னையிலிருந்து வெளிவரும் இந்து ஆங்கில நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஸ்தானிகராலயத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதியான பீற்றர் மீஜர் கருத்து வெளியிடுகையில் தமிழ் அகதிகள் மன்னார் தீவிலிருந்து மட்டுமல்லாமல் வன்னிப் பெரு நிலப்பரப்பின் ஏனைய கரையோரப் பகுதிகளிலிருந்தும் தமிழ் நாட்டுக்குச் சென்றவண்ணமுள்ளனர். மன்னாரிலிருந்து செல்லும் பலர் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட படகுகளில் செல்கின்றனர்.

இவ்வாறு தமிழ் நாட்டிற்குச் சென்ற அகதிகள் பலரும் தமிழ் நாட்டில் தமக்குள்ள பாதுகாப்பு நிலைமை, மற்றும் அங்கு வாழ்வதற்கான சூழ்நிலை குறித்து பேசாலை முகாமிலுள்ள தமது உறவினர்கள் நண்பர்களுக்கு கடிதம் எழுதியுள்ளனர் என்று தெரிவித்த அவர் மேலும் இது ஒரு நீடித்த விளைவை ஏற்படுத்தும் எனதான் அஞ்சுவதாகவும் அகதிகள் தொடர்ந்து இவ்வாறு கடிதம் எழுதினால் இன்னும் நிறையப் பேர் தமிழ் நாடு செல்ல முன் வருவார்களென்றும் இது பற்றி தான் சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் தெரிவித்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

மன்னார் தீவிலிருந்து ஒரு அகதியை தமிழகக் கரைக்குக் கொண்டுவந்து சேர்க்க 6000 இலங்கை ரூபா வாங்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க கடந்த இரு நாட்களிலும் 275 க்கும் அதிகமான தமிழர்கள் அகதிகளாக மன்னார் தீவிலிருந்து இராமேஸ்வரம் பகுதிக்கு வந்துள்ளதாக தமிழக அரசுச் செய்தியொன்று தெரிவித்துள்ளது.

# ரெலோ - புளொட் குழுக்கள் மோதல்

வவுனியாப் பகுதியில் வர்த்தக உரிமையாளர்களிடமும், பொதுமக்களிடமும் ஈவு இரக்கமின்றி ஏட்டிக்குப்போட்டியாக கப்பம் வசூலிப்பதில் முன்னணியிலிருக்கும் ரெலோ, புளொட் கும்பல்களுக்கிடையில் ஏற்பட்ட 'தாதா' பாணியிலான மோதலில் இவ்விரு கும்பல்களைச் சேர்ந்தவர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

தங்களுக்குத் தாங்களே ராணுவப் பதவிகளைச் சூட்டிக்கொண்டு வர்த்தக ஸ்தாபனங்களிடம் கப்பம் அறவிட்டு வரும் இவ்விரு கும்பல்களும் தமது ராணுவத் தரங்களுக்கு ஏற்ப கப்பம் தரவேண்டுமென புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியபோதே இரு சாராருக்குமிடையில் மோதல் எழுந்துள்ளது. இம் மோதலின்போது கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் வவுனியாவிலுள்ள பொது இடமொன்றினருகே கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதே வேளை தமது சகாக்களின் மரணங்களுக்கு பழி வாங்குவோம் என இரு கும்பல்களும் சூளுரைத்தபடி வவுனியா நகரில் வலம்வருவதால் மக்கள் பெரும் பீதிக்கு உள்ளாகியுள்ளனர். எந்த நேரத்தில் இரு கும்பல்களும் மோதிக் கொள்ளப்போகின்றனவோ என்ற அச்சத்தில் மக்கள் நடமாடவே அஞ்சுகின்றனர்.

# யாழ் மக்கள் திருமலை வருகை

(கொழும்பு)

வெளிநாடுகளில் உள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்வதற்கும் மருத்துவ சிகிச்சை மற்றும் வியாபார அத்தியாவசிய தேவைகளை மேற்கொள்வதற்குமென 175 பயணிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து கொழும்புக்கு செல்வதற்கென நரோமா என்ற கப்பல் மூலம் கடந்த 19.09.96 வியாழக்கிழமை திருக்கோணமலைத் துறைமுகத்துக்கு வந்தடைந்துள்ளனர்.

இராணுவக் கட்டுப்பாட்டிலிருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் யாழ் அரசாங்க அதிபர் மூலமாக இராணுவத் தலைமைப் பீடத்திலும் விசேட அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு திருமலை வந்த இவர்கள் புகையிரத மூலம் கொழும்பு செல்ல அனுமதிக்கப்படுவார்களென திருக்கோணமலை பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

# கண்டியில் பெண் வேடத்தில் நடமாடிய ஆண் கைது

(கொழும்பு)

கண்டி நகரத்தில் பெண் வேடத்தில் நடமாடிய இளைஞர் ஒருவரை கண்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நீல நிற சாரி, ரவிக்கை, மூக்குத்தி, மற்றும் காதில் தோடு அணிந்து போலியான (விக்) தலை முடியுடன், கண்டி புகையிரத நிலயத்திற்கும் பஸ் நிலையத்திற்கும் அண்மையில் இந்த இளைஞர் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியுள்ளார்.

இவரது நடமாட்டத்தை யிட்டு குண்டு வைக்க வந்த தற்கொலைப் பெண் புலியாக இருக்குமென்று ஐயப்பாடு கொண்ட கண்டி புகையிரத நிலையப் பாதுகாப்பாளர்கள் பொலிசாருக்குத் தகவல் கொடுத்தனர்.

உடனடியாக அங்கே விரைந்து வந்த பொலிசார் அவரைக் கைது செய்து விசாரித்த போது அவர் ஒரு ஆண் என்றும் அவரது பெயர் சுப்பிரமணியம் ஆறுமுகம் என்றும் அவர்து சொந்த ஊர் திருக்கோணமலை என்றும் தெரியவந்தது. அவர் ஏன் பெண் வேடத்தில் கண்டிக்கு வந்தார் என்பதற்கான சரியான காரணத்தை தெரிவிக்கவில்லையென கண்டிப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வெகுவிரைவில்

லாச்சப்பலில்

ஆர்த்தி

நவீன வசதிகளுடன் கூடிய மிகப் பிரமாண்டமான புகைப்பட நிலையம்
உங்கள் எண்ணங்களுக்கேற்ற வண்ணங்களில் அனைத்து விதமான
உடையலங்காரங்களோடு பலவிதமான கோணங்களில் புகைப்படம் பிடித்துக்
கொள்ள பாரிசில் நீண்ட கால அனுபவம் மிக்க ஆர்த்தியின் சகோதர நிறுவனம்
உங்களுக்காக பாரிஸ் லாச்சப்பலில்

ஆர்த்தி PROFESSIONNEL PHOTOGRAPHERS

16, Rue de Paradis, 75010 Paris. Mo: Gare de l'Est - Tel: 42 46 42 07 / Fax: 40 22 98 67

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதோச கடை மதுவால் காடைத்தனம் புரியும் படையினர்

யாழ்நகரிலுள்ள சென்ற் - சாள்ஸ் பாடசாலை சந்தியிலுள்ள இராணுவ காவலரண் அருகே சிறீலங்கா அரசு திறந்து வைத்துள்ள சதோச கூட்டுறவுக்கடையில் மதுபானங்களும் விற்பனைக்கு உள்ளன. அத்தியாவசியப் பொருட்களின் தட்டுக்கள் யாவும் வெறுமையாக காட்சியளித்த போதிலும் மது பானங்களுக்கு மாத்திரம் அங்கு குறைவில்லையாம்

இங்கு விற்கப்படும் மதுபான வகைகளை காவலரணில் கடமையில் நிற்கும் சிப்பாய்கள் உள்ளூர் மக்களை வயது வேறுபாடின்றி மிரட்டி மதுவினை வாங்கித் தருமாறு பணிக்கின்றனராம். வேறுவழி தெரியாத மக்களும் மதுவினை வாங்கிக்கொடுப்பதனால், அதனை காவலரணின் உள்ளே வைத்து பருகும் படையினர் போதை ஏறியதும் காவலரணின் முன்னால் செல்லும் மக்களை தாக்கியும் வருகின்றனர்.

இவ்வாறு அண்மையில், போதையேறிய சிப்பாய்கள் குழுவொன்று பைலா ஆடிக் கொண்டிருக்கும் போது அவ்வழியே துவிச்சக்கரவண்டியில் சென்ற இளம் யுவதி ஒருவரையும் தம்முடன் பைலா ஆடும்படி மிரட்டியபோதும் அப் பெண் மறுப்புத் தெரிவிக்கவே அப் பெண்ணை துவிச்சக்கர வண்டியால் இழுத்து விழுத்தியதுடன் துப்பாக்கிப்பிடியால் தாக்கியுமுள்ளனர்.

யாழ் மக்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்காக தமது அரசினால் கடைகள் திறக்கப்படுகின்றன என சிறீலங்கா அரசு பிரச்சாரம் செய்த போதிலும், படையினரின் மதுத் தேவையை பூர்த்திசெய்வதற்கே இந்த சதோச கடைகள் தாராளமாக உதவி வருகின்றன.

# கணக்காளர்களும் வக்கீல்களும் இராணுவத்தில் சேரவேண்டுமாம்

சிறீலங்காவின் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு சிங்கள மக்களுக்கு என்னதான் வடக்குகிழக்கு யுத்தத்தின் உண்மை நிலையை மறைத்து வந்தாலும் அங்கு உண்மையில் என்ன நடக்கின்றது என்பதை அவர்கள் தெரிந்து கொண்ட காரணத்தினால் சமீப காலமாக அரசாங்கத்தின் இராணுவத்திற்கான ஆட்சேர்ப்பு முயற்சிகள் தோல்வி கண்டு வருகின்றன. இந் நிலையில் தற்போது சட்டத்தரணிகளையும் கணக்காளர்களையும் கூட இராணுவத்தில் சேர்த்து பணியாற்ற வருமாறு அரசாங்கம் அழைத்துள்ளது.

அவ்வாறு அவர்கள் இராணுவத்தில் சேரும் பட்சத்தில் அவர்கள் கப்டன்களாகவும் லெப்டினன்களாகவும் நியமிக்கப்படுவார்கள் என்றும் அவ்வாறு சேருவோருக்கான வயது எல்லை 32 ஆகுமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதே வேளை இராணுவத்தின் மகளிர் பிரிவு கடேட் படைக்கும் ஆட்கள் தேவைப்படுவதாகவும் 18 வயதுக்கும் 22 வயதுக்கு இடைப்பட்ட க.பொ.த சாதாரணப் பரீட்சையில் சித்தி எய்திய பெண்கள் அதற்குத் தகுதியானவர்கள் என்றும் மேற்படி பரீட்சையில் ஆங்கிலப் பாடத்திலும் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களிலும் சித்தியடைந்திருந்தால் அவர்களுக்கு அதிகாரிகள் பதவி வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# பட்டதாரி ஆசிரியர் சித்திரவதையின் பின்னர் சிப்பாய்களால் சுட்டுக் கொலை

தென்மராட்சி சரசாலைப் பகுதியில் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் சிறீலங்கா படையினரால் மிருகத்தனமாக துன்புறுத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

சரவணமுத்து சரவணபவான் என்ற 25 வயதான இந்த ஆசிரியரை கைது செய்த படையினர் அவரை அடித்து இழுத்துக் கொண்டு சரசாலையில் உள்ள இராணுவ முகாமுக்குகொண்டு சென்றுள்ளனர். முகாமில் வைத்தும் கடுமையாகச் சித்திரவதை செய்த பின்னர் அவரை நிலத்தில் உருண்டபடி வீடு செல்லும்படி பணித்துள்ளனர்.

உயிர் காக்கும் நோக்குடன் உடலால் இரத்தம் வழிந்த நிலையில் வீட்டிற்கு உருண்டு போக முனைந்த அந்த ஆசிரியரை சிறிது தூரம் செல்ல விட்டபின்னர் படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர்.

# தமிழர்களுக்கான நிவாரண உதவிகள் சிங்களவரின் கைகளுக்கு மாறின

திருமலை மாவட்டத்திலுள்ள வெருகல் பகுதி தமிழ் மீனவர்களை கடந்த ஆறு மாதங்களாக கடலுக்கு செல்ல விடாது சிறீலங்கா இராணுவம் தடை விதித்துள்ளமையால் இம் மீனவக் குடும்பங்கள் தமது ஜீவனோபாயத்திற்கு வழி தெரியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள்.

பசிக் கொடுமைகாரணமாக கரையோரமாக மீன் பிடிக்க சென்ற தமிழ் மீனவர்களை இராணுவம் கடுமையாகத் தாக்கியதுடன் அவர்களது மீன் பிடி உபகரணங்களையும் பறிமுதல் செய்து விட்டு அவர்களைத் துரத்தியுள்ளது. ஆனால் இப் பகுதியில் தொழில் செய்யும் சிங்கள மீனவர்களுக்கு கடலுக்கு செல்வதற்கு அனுமதியளித்துள்ளதுடன் நிவாரண உதவிகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ் மீனவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளையும் பெரும்பான்மை இன அலுவலர்கள் சிங்கள மீனவர்களுக்கு பகிர்ந்து கொடுத்ததுடன் தமிழர்களுக்கு நிவாரண உதவிகள் எதுவும் அனுப்பப்படவில்லை என கை விரிக்கின்றனராம்.

# மட்டக்களப்பு தபால் நிலையத்தில் மீண்டும் தபாலில் வெடி குண்டு

மட்டக்களப்பு பிரதான தபால் நிலையத்தில் மீண்டும் ஒரு குண்டு கண்டு பிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 19.09.96 வியாழக்கிழமை காலையில் தபால்களை தரம் பிரிக்கும்போது ஒரு தபால் மீது தபாலக ஊழியர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஏற்கனவே சில தினங்களுக்கு முன் ஒரு தபாலை எடுத்து குலுக்கிய போது அது வெடித்ததில் ஒரு ஊழியர் தனது கைவிரல்களை இழந்ததையடுத்து இம் முறை அவர் வெகு அவதானமாக சந்தேகத்திற்குரிய அந்தத் தபால் பொதியை ஒதுக்கி வைத்து விட்டு சிறீலங்கா பாதுகாப்புப் படையினருக்குத் தகவல் கொடுத்தார்.

கல்லடி இராணுவ முகாமிலிருந்து வந்த குண்டு செயலிழக்க வைக்கும் பிரிவைச் சேர்ந்த இராணுவத்தினர் பத்திரமாக அந்தத் தபால் உறையை தபாலகத்திற்கு வெளியே கொண்டு சென்று வெளியான இடத்தில் வைத்து விட்டு அதை நோக்கி சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது அதிலிருந்து குண்டு பாரிய சத்தத்துடன் வெடித்ததாக மட்டுநகர் செய்திகள் தெரிவிக்கின்றன.

# தென் தமிழீழப் பகுதியில் திலீபன் நினைவெழுச்சி நாட்கள் அனுஷ்டிப்பு

தென் தமிழீழப் பகுதிகளில் இராணுவ ஆக்கிரமிப்பற்ற பிரதேச மக்கள் தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 9 வது ஆண்டு நினைவெழுச்சி நாட்களை உணர்வு பூர்வமாக கொண்டாடினார்கள்.

வாகரை, கொக்கட்டிசோலை, பழுகாமம், பட்டிப்பளை, திக்கோடை, உன்னிச்சை, ஊறுகாமம், வவுணதீவுப் பகுதி மக்கள் வீதிகள் தோறும் பந்தல்கள், அலங்கார வளைவுகள் அமைத்து அதில் திலீபனின் திருஉருவப்படத்தை வைத்து அஞ்சலி செய்து நினைவெழுச்சி நாட்களை கொண்டாடியுள்ளனர்.

படுவான்கரை பகுதி மக்கள் பாரிய சிரமதான பணியினை மேற்கொண்டதுடன் அங்கு அஞ்சலி கூட்டம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது.

அக் கூட்டத்தில் உரையாற்றிய பிரமுகர்கள் திலீபனின் தியாக கொடையின் தீரத்தைப் பாராட்டியதுடன் தமிழீழ விடுதலை என்ற இலக்கினை நிறுவுவதே திலீபனின் தியாகத்திற்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலி எனவும் குறிப்பிட்டனர்.

GLORIOUS ENTERPRISE வழங்கும்



அர்ஜுன், ரேவதி நடித்த

R.V. உதயகுமாரின்

சுபாஷ்

01.10.96 செவ்வாய் மாலை 6 மணி

KINO - UNIVERSUM, AM BAHNHOF, RHEYDT.

தொடர்புகளுக்கு: 02161 178007 / 02161 206393

டோட்முண்டில்

உடன் மீன் வகைகள் பசுமையான மரக்கறி வகைகள்

செந்தூராஸ்

Super Market Asian

Johanna Melezer str. 4, 44137 Dortmund - Tel / Fax: 0231/8280301

உங்கள் நலம் கருதி எமது வீட்டிலும் யாவும் பெற்றிடலாம்

Tel: / Fak: 02304 / 789287 or 02304 / 74503

(ADV)

தமிழில் சாரதிப் பயிற்சி



பிரெஞ்சு தெரிய வேண்டியதில்லை! தமிழிலேயே படித்து தமிழிலேயே கோட் பாஸ் செய்து பிரெஞ்சு சாரதிப் பத்திரம் (permis de conduire) பெறலாம்! இலங்கைப் புத்தகம் இருந்தால் இன்னும் எளிது! உங்கள் பெயரை உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்

நீங்கள் வேறு சாரதிப் பாடசாலைகளில் சேர்ந்து பணம் கட்டியிருந்தாலும் பிரச்சனையில்லை நீங்கள் கட்டிய பணம் நஷ்டமாகாத வகையில் நாங்கள் உங்களுக்கு சாரதிப் பத்திரம் கிடைக்க வழிசெய்கிறோம்.

தொடர்புகளுக்கு: பேராசிரியர் சக்திப்புயல்

இடம் : 6, rue Demarquay, Paris10 (நிஷா மளிகை அருகில்)
Métro: Gare du Nord. - Tel: 42 05 48 11 / 02 46 59 23
கிளை ஸ்தாபனம் : 36, Rue Ludovic Piette - Tel: 34 24 12 82 / 02 46 59 23

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 வயது அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் 45 வயது சிங்களப் பெண்ணைத் திருமணம்

(கொழும்பு)

சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் கடந்த 19.09.96 வியாழக்கிழமை கொழும்பில் வைத்து 45 வயதான சுகந்தி விஜயசூரிய என்ற சிங்களப் பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

அமைச்சர் கதிர்காமருக்கு தற்போது 64 வயதாகின்றது. இவர் தன்னை யாழ்ப்பாணத் தமிழராக, சொல்லிக் கொள்கிற போதிலும் உண்மையில் இவர் தமிழ் தெரியாத கொழும்புத் தமிழராவார். தற்போது இவர் திருமணம் செய்து கொண்டுள்ள சுகந்தி சிறீலங்காவின் பிரபல சட்டத்தரணியாவார். இவர் கொழும்பிலுள்ள பிரபல எப். ஜே. அன்ட் ஜி.டி சேரம் சட்டத்தரணிகள் நிறுவனத்தின் பங்காளியுமாவார்.

கடந்த 19.09.96 அன்று நண்பர்கள், உறவினர்கள் மட்டுமே பங்குபற்றிய இத் திருமண வைபவத்தில் இவர்களின் திருமணத்திற்கு சாட்சிகளாக ஜனாதிபதி சந்திரிகாவும், டாக்டர் காமினி கொரயாவும் கையொப்பமிட்டனர்.

திருமணம் முடிந்த பின் தேன்நிலவைக் கொண்டாட கதிர்காமர் தம்பதியினர் அமெரிக்காவுக்கு பயணமானார்கள். அங்கு நியூயோர்க்கில் நடைபெற உள்ள ஐக்கிய நாடுகள் பொதுக் கூட்டத்தில் சிறீலங்காவின் சார்பில் கதிர்காமர் உரையாற்ற உள்ளார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தைக்கு திருமணத்தின் பின்பே முல்லைத்தீவு தோல்வி ஏற்பட்டு அவரது வெற்றி வீரர் என்ற வேடம் கலைந்தது என்றும் அவ்வாறே கதிர்காமருக்கும் நிகழும் என்றும் பிரபல கொழும்பு சோதிடர் ஒருவர் கூறியதாக சிங்களப் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

# காணி அதிகாரி சுட்டுக் கொலை

திருகோணமலை செயலகத்தில் காணி அதிகாரியாகக் கடமையாற்றும் நபர் கடந்தவாரம் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார்.

தீவிர சிங்கள இனவாதப் போக்குக் கொண்ட பீரிஸ் என்ற இந்த நபர், சேருவலைப் பகுதிக்கு சிங்களக் குடியேற்ற வாசிகளின் நலன்களை கவனிப்பதற்காக சென்றபோதே சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

# சிறுமியை நரபலி எடுத்த கொலைகார சிப்பாய்கள்

பொன்னாலைப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் ரோந்து சென்ற சிறீலங்கா சிப்பாய்கள் திடீரென வெறிப்பிடித்தவர்கள் போல கூச்சலிட்டுக் கொண்டு துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று வயதுச் சிறுமியான வரதராஜா அஸ்வினி என்பவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டுள்ளார். மேலும் பல பொது மக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

காலை வேளையில் தனது வீட்டின் முன்றலில் விளையாடிக் கொண்டிருந்த அவ்வப் பாவிச் சிறுமியை, சிப்பாய்களின் வேட்டுச் சத்தத்தை கேட்டு வீட்டினுள்ளே தூக்கிச் செல்வதற்காக தாயார் ஓடிவந்தபோதும் கொலைகாரச் சிப்பாய்களின் நரபலிக்குப் பலியான சிறுமியின் சடலத்தையே தாயாரால் காணமுடிந்தது.

இதேவேளை இருபாலைப் பகுதியில் இராணுவத்தினர் புதைத்து வைத்திருந்த பொறிவெடியில் எட்டு வயதுச் சிறுவன் ஒருவன் சிக்கி தனது இரு கால்களையும் இழந்துள்ளார். வேலானந்தம் தவச் செல்வன் என்ற சிறுவனே இப் பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளார். இதே போன்று குப்பிளான் பகுதியிலும் இரு விவசாயிகள் தமது தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்தபோது பொறிவெடியில் சிக்கி கால்களை இழந்துள்ளனர்.

# ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு பிரித்தானிய மகாராணி வாழ்த்து

சிறீலங்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் 90-வது பிறந்த தினத்தை முன்னிட்டு பிரித்தானிய மகாராணி எலிசபெத் வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அச் செய்தியில் உங்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் பிரித்தானியாவுடனான தொடர்பில் நீங்கள் கொண்டிருந்த நேச உறவுகளையும், பல வருடகாலமாக பொதுநலவரசின் மேம்பாட்டிற்காக நீங்கள் செய்த மகத்தான பங்களிப்பையும் நான் நினைவு கூருகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# காலைக்கடனும் கழிக்க முடியாது ஊரடங்கு சட்டமூலம் உத்தரவு

திருமலை மாவட்டத்திலுள்ள தமிழர் கிராமங்களான அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், துவரங்காடு, புளியங்காடு ஆகிய இடங்களில் கடந்த 6-ம் திகதியும் 8-ம் திகதியும் திடீரென ஊரடங்குச் சட்டத்தினைப் பிறப்பித்த படையினர் தமிழர்களின் தலைக் கறுப்புத் தெரிந்தால் சுட்டுத் தள்ளுவோம் என ஒலி பெருக்கி மூலம் எச்சரித்துள்ளனர்.

6-ம் திகதி அதிகாலையிலும் 8-ம் திகதி இரவிலும் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தினால் இப் பகுதி மக்கள் தமது காலைக் கடன்களைக்கூட கழிக்க முடியாது அவஸ்த்தைப் பட்டுள்ளனர். அன்றாடம் காச்சிகளான பல குடுங்பங்கள் இத் திடீர் ஊரடங்கு உத்தரவினால் வீடுகளுக்குள் முடங்கிக்கொண்டதனால் உணவுப் பொருட்களை கூட வாங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் இந்த ஊரடங்கு உத்தரவிற்கு பெரும்பான்மை இன நிர்வாக அதிகாரிகளும் தமது ஒத்துழைப்பினை வழங்கியுள்ளனர். சிங்களவர்களுக்கு இந்த ஊரடங்கு நேரத்தில் நடமாட வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.


பிறேமன் தமிழ்க் கலை மன்றம்

நடாத்தும்

மாபெரும் ஐரோப்பிய நாடகப் போட்டி-96

**காலம்:** 07.12.96 சனிக்கிழமை

**இடம்:** Buger Und Sozial zentrum, Amersfooter Str-8, 28259 Bremen (Huchting)

இந் நாடகப் போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மன்றங்கள், ஒன்றியங்கள், நாடகக் குழுக்கள் கீழ்க் காணும் முகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களையும் விபரங்களையும் பெற்றுக் கொள்ளவும்.

15/11/96 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தொடர்புகளுக்கு:
M. Lingeswaran, Vlissinger str.11, 28259 Bremen.
Tel: / Fax: 0421-584173



29.09.96 ஞாயிறு 15.30, 18.30 மணிக்கு
அன்வெர்ஸ் திரையரங்கில்



ஜெய் சினி ஆர்ட்ஸ் வழங்கும்
ரமேஷ் சிவரூபனின்





இசை: சந்திரன் ஒளிப்பதிவு: சுதன் தயாரிப்பு: முத்துஜெய்சிங்

பின்னணி பாடியவர்கள்: அப்சராஸ் இசைக் குழுவின் பாடகர்கள்

இது எங்கள்-மீதான எங்களின் பார்வைகள்
உங்கள் சிந்தனைக்காக

விரைவில்....
கதிரவன் பிக்சர்ஸ் வழங்கும்
ஜீவன்
எஸ்.வி. சுதன்ராஜா
(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# படைக்குப் பிள்ளைகள் அனுப்ப மறுக்கும் பெற்றோர்கள்

கொழும்பிலிருந்து தமிழரசன்

இராணுவத்திற்கு எழுபத்தி ஐயாயிரம் பேரை சேர்த்துக்கொள்ளும் அரசாங்கத் திட்டத்தின் முதல் கட்டமாக பத்தாயிரம் பேரை, சேர்த்துக் கொள்ளும் முதல்கட்ட நடவடிக்கைகள் இப்போது ஆரம்பமாகி இருக்கிறது. இதற்காக இருபத்தி இரண்டு இராணுவ மையங்கள் தெரிவு செய்யப் பட்டுள்ளன. பல ஊக்குவிப்பு

விமானங்களை தாக்கி அழிக்கும் படைப்பிரிவுக்கும், கடற்புலி படைக்கும் ஆட்களை திரட்டி வருகிறார்கள். இவ் இரு படைப் பிரிவுகளில் மாத்திரமே வெற்றிடங்கள் இருக்கின்றனவாம். ஏனைய படைப்பிரிவுகளில் போதிய ஆட்கள் இருப்பதாக புலிகள் தெரிவித்துள்ளனர். இரு தரப்பினரும் படைகளுக்கு ஆட்களை திரட்டுவதைப் பார்த்தால் போர் தொடரும் சூழ்நிலையையே எடுத்துக்காட்டுவதாக கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பரந்தனுடன் நிற்கும் 'சத்ஜய'



காரி ஒருவர் எச்சரிக்கும் பாணியில் தனது கருத்தை வெளியிட்டதாகவும் தெரியவருகிறது. கிளிநொச்சி மீதான இராணுவ

பிரிவின் பணிப்பாளராக கடமையாற்றிய கொமடோர் டெரன்ஸ் சுந்தரம் அந்தப் பதவியிலிருந்து விடுவிக்கப் பட்டு தென்பிராந்திய கடற்பிரதேசத்தின் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அந்தப் பதவிக்கு கொமடோர் மோஹான் விஜயசூரிய நியமிக்கப் பட்டுள்ளார். அவர் முன் தென் பிராந்தியத் தளபதியாக இருந்தார்.

கடற்படையில் இரண்டாம் தளத்தில் உள்ள பதவியே நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் பதவி. கடற்படைத் தளபதி விலகும் பட்சத்தில் டெரன்ஸ் சுந்தரமே கடற்படைத் தளபதியாக

பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு லண்டனுக்கு சென்றுவிட்டார். அநேகமாக அவர் மீண்டும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் சேரப் போகிறார். பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் அவருக்கு நிதி அமைச்சர் பதவியை வழங்க ஜனாதிபதி சந்திரிகா உறுதியளித்ததாக தெரியவருகிறது.

ரொனி டீ மெல் முன்னர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து ஐக்கிய தேசியக் கட்சிக்கு மாறியவர். 1977-ம் ஆண்டு முதல் 1988-ம் ஆண்டுவரை நிதி அமைச்சராக இருந்தவர். ரொனி டீ மெல் ஜனாதிபதி

# புலிகளின் கொங்கிரீட் பங்கர்களை அழிக்காமல் கிளிநொச்சியைப் பிடிப்பது சாத்தியமற்றது

சலுகைகளுடன் இந்த இராணுவ ஆட்சேர்ப்பு நடைபெறப் போகிறது. இராணுவத்திற்கு இப்போது ஆட்களை சேர்த்துக் கொள்வது குதிரைக் கொம்பாகிவிட்டது. அதுவும் முல்லைத்தீவு இராணுவமுகாம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் துவம்சம் செய்யப்பட்டதை அடுத்து முப்படைகளிலோ அல்லது பொலிஸ், ஊர்காவல் படைகளில் சேர்வதற்கோ சிங்கள இளைஞர்கள் பின்வாங்குகிறார்கள். பெற்றோர்களும் படைகளில் தமது பிள்ளைகள் சேர்வதற்கு அனுமதி வழங்குவதில்லை.



சிறீலங்கா படையினர் படைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துவரும் இக்கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்

இராணுவ நடவடிக்கை குறித்து கடந்தவாரம் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா குமாரணதுங்கா தலைமையில் நடந்த பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆரா

நடவடிக்கையை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை மேஜர் ஜெனரல் நீல்டயசிடம் பாதுகாப்பு அமைச்சு ஒப்படைத்துள்ளது. இராணுவ முன்னெ

**சிறீலங்கா படையினர் படைகளுக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துவரும் இக்கால கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் விமானங்களை தாக்கி அழிக்கும் படைப்பிரிவுக்கும், கடற்புலி படைக்கும் ஆட்களை திரட்டி வருகிறார்கள்.**

யப்பட்டதாக தெரியவருகிறது. ஆள் பற்றாக்குறை, பீரங்கி தட்டுப்பாடு காரணமாக இராணுவ நடவடிக்கையை தொடர முடியாமல் இருப்பதாகவும், புலிகளின் கொங்கிரீட்டினால் ஆன பங்கர்களைத் தகர்த்தால் ஒழிய கிளிநொச்சியைக் கைப்பற்ற முடியாது எனவும் உயர் இராணுவ அதிகாரிகள் அங்கு எடுத்துக் கூறியுள்ளனர். இதனை மீறி உடன் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளும் பட்சத்தில் இராணுவ தரப்பில் பாரிய உயிர் இழப்புக்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் எனவும் மூத்த இராணுவ அதி

டுப்புகளோடு தேவையான நடவடிக்கையை அவர் மேற்கொண்டு தற்போது தாக்குதலை ஆரம்பித்துள்ளார் என்று கடைசியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் மோஹான் சமரசேகர பதவியில் இருந்து ஓய்வு பெறுவதற்கு இன்னமும் இரண்டு மாதகாலம் இருக்கும் கால கட்டத்தில் கடற்படை உயர் மட்டத்தில் சில பதவி மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன.

கடற்படை நடவடிக்கையின்

நியமிக்கப்பட வேண்டும். அந்தப்பதவி டெரன்ஸ் சுந்தரத்திடமிருந்து நழுவிப் போய்விட்டது.

சந்திரிகாவை சந்தித்த விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில்



வட பிராந்திய கடற்படை தளபதியாக இருந்த கப்டன் சிசிர சமரசிங்க இடமாற்றம் செய்யப் பட்டிருக்கிறார்.

இதற்கிடையில் சிறீலங்கா அரசில் புதிய மாற்றங்கள் நிகழ உள்ளன. முன்னாள் நிதி அமைச்சரும், தற்போதைய மாத்தறை ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான ரொனி டீ மெல் கடந்தவாரம் திடீரென ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்து ஒரு மணித்தியாலம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதனை அடுத்து அவர் தனிப்

பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. அவர் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் நிதி அமைச்சர் பதவியை ஏற்கப் போகிறார் என முன்னாள் அமைச்சர் அமரதுங்கா அக்கூட்டத்தில் குற்றஞ்சாட்டினார். அதனை பல ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆமோதித்தனர். ரொனி டீ மெல் லண்டனிலிருந்து கொழும்பு திரும்பியதும் இந்த அரசியல் மாற்றத்திற்கு விடை கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

எலக்ரிசிற்றி, பைப் லைனிங், மாபிள் பதித்தல், பேப்பர் ஒட்டுதல், பெயின்ரிங், P.V.C யன்னல்கள் மற்றும் கட்டட வேலைகள், தச்சு வேலைகள் அனைத்திற்கும்,

பகீ என்ரபிறைஸ்

உங்கள் வீடுகளுக்கான இன்சூரன்ஸ், கடன் ஏற்பாடுகளுக்கு தேவையான Devis வழங்கப்படும்

Devis 200Frs - Deplacement 150Frs

புதிய தொலைபேசி இலக்கம்: 48 48 39 64 / 09.27.32.00

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கா-தம்பி சண்டையின் உச்சக்கட்டம்

அக்கா தம்பி சண்டையின் உச்சக்கட்டம் வந்துவிட்டதா என்பதே கொழும்பில் பரபரப்பாக நடக்கும் பேச்சாக இருக்கிறது. பிரதமர் சிறீமாவின் ஒன்றுவிட்ட சகோதரரான அமைச்சர் ரத்வத்தை, பிரதமரின் மகன் அனுராவின் பிறப்புப் பற்றி சந்தேகம் வெளியிட்டுப் பொதுக் கூட்டங்களில் பேசியதும், அதையொட்டி அனுரா பண்டாரநாயக்க பொலிசில் புகார் கொடுத்ததும், ஐந்து கோடி மானநஷ்டம் கோரி வழக்கு தாக்கல் செய்ய முயற்சித்ததும், இதே வேளை சிறீமாவோ, ரத்வத்தைக்கு இரு கடிதங்களை எழுதியதும் அதற்கு ரத்வத்தை தன்மேல் தவறில்லை எனப் பதிலளித்ததுடன் பிரதமரைச் சந்திக்க தனக்கு சந்தர்ப்பம் தருமாறும் கோரியிருந்தார். இதற்கு சிறிமாவோ, இதுபற்றி ரத்வத்தையுடன் தான் மேற்கொண்டு எதுவித தொடர்புகளையும் வைத்திருக்க விரும்பவில்லை என்றும் கண்டிப்பாக பதிலளித்திருந்தார்.

அடுத்ததாக பிரதமராகும் ஆவலில் உள்ள பல சிரேஷ்ட அமைச்சர்கள், தமது பிரதமர் நாற்காலிக் கனவுகள் நிறைவேற ரத்வத்தை ஒரு தடைக்கல்லாக இருப்பார் என்பதால், அவரை வெளியேற்றும்படி அம்மையார் சிறீமாவோவுக்கு தூபம் போடுகின்றனர். அதேசமயம் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், முன்னாள் பிரதமர் பண்டாரநாயக்க, சிறீமாவோ ஆகியோரின் விசுவாசிகளும், ஆரம்பகாலக் கட்சி உறுப்பினர்களும், பிரபலமான சுதந்திரக் கட்சி ஆதரவு பௌத்த பிக்குகளும், தம் மதிப்புக்குரிய பண்டாரநாயக்கா குடும்பத்தின் மீது பகிரங்கமாக அவதூறு சொன்ன ரத்வத்தையை உடனடியாக சுதந்திரக் கட்சியிலிருந்து விலக்கும்படி பிரதமர் சிறீமாவோவை வற்புறுத்துகின்றனர். ஓரளவுக்கு ரத்வத்தையை

**ரத்வத்தை மீதான அனுராவின் வழக்கு பலமாக உள்ளது. இவ் வழக்கில் ரத்வத்தை நிச்சயம் குற்றவாளியாகக் காணப்படுவார். நீதிமன்றத்தில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அதன் பின்னர் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதுடன் அமைச்சர் பதவியையும் இழக்கும்படி செய்யலாம்.**

விலக்கும் முடிவுக்கு வந்த பிரதமர் தமது விசுவாசிகளான அரசியல் ஆலோசகர்களையும் சட்ட மேதைகளையும் கலந்தாலோசித்தார். அப்போது, ரத்வத்தையைக் கட்சியை விட்டு நீக்கும் நடவடிக்கை இப்போது வேண்டாம், அவரை கட்சியிலிருந்து நீக்கினால் அவர் அமைச்சர் பதவியை இழக்க நேரிடும். ஜனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு ரத்வத்தைக்கு இருப்பதால், அவரைக் கூட்டணிக் கட்சி ஒன்றின் மூலம் பிரதிநிதியாக்கி மீண்டும் அமைச்சராக்கினால், அது பிரதமர் மீது கரிபூசியதாகிவிடும். ரத்வத்தை மீதான அனுராவின் வழக்கு பலமமாக உள்ளது. இவ் வழக்கில் ரத்வத்தை நிச்சயம் குற்றவாளியாகக் காணப்படுவார். நீதிமன்றத்தில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டால் அதன் பின்னர் அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதுடன் அமைச்சர் பதவியையும் இழக்கும்படி செய்யலாம்.

அனுராவின் பிறப்புப் பற்றிய அவதூறில், அவர் தாயாரான பிரதமர் சிறீமாவோவும் சம்பந்தப்பட்டிருப்பதால், அவரும் பிறிதொரு வழக்கைத் தாக்கல் செய்யலாம் என ஆலோசனை கூறப்பட்டதையடுத்து ரத்வத்தை மீது நடவடிக்கை எடுப்பதை சிறீமாவோ ஆறப்போட்டுள்ளார் என்பதே தற்போதைய கொழும்புப் பேச்சுக்களும் பத்திரிகைகளின் செய்திகளுமாகும்.

# புலிகள் தமது கிழக்கு படைப்பிரிவை வன்னிக்கு நகர்த்துவது ஏன்?

'கிழக்கு மாகாணம் விடுதலைப் புலிகளுக்கு ஒரு மாபெரும் பரிசு' என்ற தலைப்பில் சண்டே ரைம்ஸ் பத்திரிகை நிருபர் இக்பால் அத்தாஸ் எழுதிய கட்டுரையொன்றில் பின்வருமாறு கூறுகிறார்;

பாரிய பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வன்னிப் பிரதேசப் புலிகளுக்கு உதவுவதற்காக கிழக்கிலுள்ள புலிப் படையினரை வன்னிக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளது. கிழக்கில் தேவையான அளவு வீரர்களை மட்டும் விட்டுவிட்டு மீதிப் படையினர் வன்னியை நோக்கி ஏற்கனவே நகரத் தொடங்கிவிட்டனர். இந்த நடவடிக்கையானது புலிகள் வன்னியில் தமது பாதுகாப்பை வலுப்படுத்தி அரச படைகளின் தாக்குதலை முறியடிப்பதற்காகவா அல்லது அரச படைகள் மேல் வேறுவித புதிய தாக்குதல் ஒன்றை மேற்கொள்ளுவதற்காகவா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

தமது முல்லைத்தீவு வெற்றி விடுதலைப் புலிகளின் போர்ப் பசியை ஓரளவு தற்காலிகமாகவாவது தீர்த்துள்ளது. முல்லைத்தீவு வெற்றியின் மூலம் தங்கள் இராணுவ கௌரவத்தை மீண்டும் நிலைநிறுத்திக் கொண்டதுடன் மட்டுமல்ல, தமிழ் மக்களிடம் தமது செல்வாக்கை பெருமளவில் பெருக்கிக்கொண்டும் உள்ளனர். சூரியக்கதிர் நடவடிக்கை மூலம் மறைந்துபோன தமிழீழம் என்ற வாக்குறுதி மீண்டும் மலர்ந்துள்ளது.

இந்த வெற்றியின் பலனை உறுதிப்படுத்தி நிலைப்படுத்திக் கொள்வதற்காக விடுதலைப் புலிகள் தமது யுத்த உபாயங்களை நன்கு வகுத்துக்கொண்டுள்ளனர். மற்ற கெரில்லா இயக்கங்களைப்போல் இவர்களும் ஆச்சரியமான வெற்றிகளைத் தரக்கூடிய நடவடிக்கைகளையே நம்பியுள்ளனர். நல்ல ஒரு சந்தர்ப்பத்திற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள். இதேவேளை தங்கள் கிரீடத்தில் ஜொலிக்கும் முக்கிய ஆபரணமான கிழக்கையும் இனரீதியாக சுத்தப்படுத்தும் நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கியுள்ளனர். தமது தமிழீழ எல்லைப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களை விரட்டியடிப்பதிலும் கவனம் செலுத்துகின்றனர். சிறீலங்கா படையினர் இப் பகுதிகளில் வலிமை குறைந்தவர்களாகவே உள்ளனர். இவர்களைத் தாக்குவதன் மூலம், வடக்கிலுள்ள படையினரை கிழக்குக்கு இழுப்பதன் மூலம் வடக்கை மீட்பதும் அவர்களின் திட்டமாகும். அப்படி அரச படைகளை கிழக்குக்கு இழுத்துவிட்டால், வடக்கில் அவர்கள் ஒரு மாபெரும் தாக்குதலை நடாத்தக்கூடிய பரிசாகவே அது இருக்கும். கிழக்கில் புலிகள் பெறக்கூடிய ஒரு சிறு வெற்றிகூட அரசாங்கத்துக்கு ஒரு பாரிய பின்னடைவை அரசியல் ரீதியாகக் கொடுக்கும். அது அரசாங்கம் தாங்க முடியாததாகவே இருக்கும். தற்போதைய யுத்த நிலை அரசாங்கத்துக்கு ஒரு ஸ்தம்பித நிலையே. அவர்கள் அரசியல் இராணுவ மற்றும் தமது பிரதேசங்கள் ரீதியாக பெரிதும் சாதகமான நிலையையே கொண்டுள்ளனர். எந்த ஒரு திட்டமும் இலக்கும் இல்லாமல் போரை நடாத்தும் எந்த ஒரு அரசும் யுத்தத்தை ஸ்தம்பித நிலையில் வைத்திருக்க அனுமதிக்கக்கூடாது. ஸ்தம்பிதமான யுத்தம் என்பது திட்டமிடாத யுத்தமே. இப்போதைய சூழ்நிலையில் அரசு கிழக்கின் மீது மீண்டும் கவனம் செலுத்த வேண்டும். அதே வேளை வேறு பகுதிகளில் புலிகள் முன்னேறுவதையும் தடை செய்ய வேண்டும்.

கடந்த வாரங்களைப் போலவே இந்த வாரமும் அரசாங்கம் அரசியல் இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை வெற்றி காண்பதில் எவ்வித முன்னேற்றத்தையும் காட்டவில்லை. தனது பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் அரசியல் முரண்பாடுகளிலும் அரசாங்கம் குழம்பிக்கொண்டிருக்கும் வேளையில், விடுதலைப் புலிகளோ எவ்வித ஓய்வும் இன்றி தமது நடவடிக்கைகளில் ஈடுபட்டு தமது இலட்சியத்தை நோக்கி முன்னேறுகின்றனர். எனவே புலிகளைப் பலவீனப்படுத்த அரசு தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும். இவ்வாறு கட்டுரையாளர் இக்பால் அத்தாஸ் கூறியுள்ளார்.

* * * * *

சிறீலங்கா இனப்பிரச்சனையைத் தாங்குமா? என்ற தலைப்பில் ஐலண்ட் பத்திரிகையின் பாதுகாப்பு நிருபர் எழுதிய கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்;

இன்றைய யுத்தத்தின் இழப்புக்களைச் சிறீலங்கா தாங்குமா? ஆவணி மாத மத்தியவங்கி அறிக்கையின்படி பணவீக்கம் 18.3 விகிதம் அதிகரித்துள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் யுத்தம் முடிவடையாவிட்டால்

**கிழக்கிலுள்ள புலிப்படையினரை வன்னிக்கு வருமாறு அழைக்கப் பட்டுள்ளது. கிழக்கில் தேவையான அளவு வீரர்களை மட்டும் விட்டுவிட்டு மீதிப் படையினர் வன்னியை நோக்கி ஏற்கனவே நகரத் தொடங்கிவிட்டனர்.**

பொருளாதார ரீதியில் நாம் அதலபாதாளத்துக்குப் போய் விடுவோம் என ஜனாதிபதி சந்திரிகா கூறுகிறார். இருந்தும் இராணுவத்துக்குப் பெருந்தொகையான பணத்தை நாடு செலவழித்தும், பல துன்பங்களை அனுபவித்தும், பல இளம் உயிர்கள் பலிகொடுக்கப்பட்டும், யுத்த முடிவென்பது தெரியும் தூரத்தில் இல்லை. யாழ்ப்பாணப் பிரதேசத்தைக் கைப்பற்றியதால் அரசும் இராணுவமும் தற்காலிகமாக பெருமையடைந்தன. இந்தத் தற்காலிகப் பெருமைகளும் கௌரவமும் பொருளாதார ரீதியில் பலன் தருமா? முல்லைத்தீவில் பார்த்ததுபோலவே, எப்போதும் போல் இப்போதும் புலிகள் ஒரு பலமான சக்தியாகவே இருக்கின்றனர். அவர்கள் தொகையில் சிறியவர்கள். அவர்கள் குறைந்தளவு பிரதேசத்தையே தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். எனவே இராணுவம் வெற்றி காண்பதில் பிரச்சனை என்ன? இராணுவ வெற்றி ஏன் மிகுந்த தொலைவில் உள்ளது? பிரச்சனை என்னவென்றால் இராணுவத்திற்கு மனித சக்தி குறைவாகவே உள்ளது.

சிறீலங்கா இராணுவம் சிறிதளவே செயற்பட முடிகிறது. தசாப்தங்களாக நடந்துகொண்டு, இன்னும் பல வருடங்கள் தொடரக்கூடிய ஒரு யுத்தத்தில் கலந்துகொள்ள இளைஞர்கள் மறுக்கிறார்கள். எல்லாப் பிரபல பத்திரிகைகளிலும் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் கொடுத்தும் இளைஞர்கள் படையில் சேர மறுக்கிறார்கள். 1995 தை மாதம் நடுப்பகுதியில் இருந்தே முதலில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி பின் கிளிநொச்சி வழியாக முன்னேறுவது எனத் திட்டமிடப்பட்டது. இந் நடவடிக்கை எங்கு போய் முடியும் என யாருக்கும் தெரியாது. இந்த யுத்தம் முடிவுக்கு வர பெருந்தொகை இராணுவ வீரர்கள் தேவை. அது அரசிடம் இல்லையென்பதே உண்மை.

* * * * *

சண்டே லீடர் பத்திரிகையின் விமர்சகர் பெரடிக்கா ஜான்ஸ் தமது கட்டுரையொன்றில், ஜனாதிபதி சந்திரிகா தீர்வுத்திட்டத்தை. அமுல்படுத்த ஒரு செயல்பாட்டில் இறங்குவதை விட, இராணுவத் தீர்வுக்கே முயலுகிறார். அதேநேரம் தீர்வுத்திட்டத்தை யார் ஆதரித்தாலும் விடுதலைப் புலிகளின் பங்களிப்பின்றி அதை அமுல்படுத்தவும் முடியாது.எனவே தீர்வுத் திட்டத்தை அமுல்படுத்தி நிரந்தர அமைதியைக் கொண்டுவர ஜனாதிபதி சந்திரிகா முதலில் விடுதலைப் புலிகளின் ஆதரவைப் பெறவேண்டும்.

சிறீலங்கா அரசின் சிரேஷ்ட அமைச்சர் தனது இல்லத்தில் அரசாங்க எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்கு சிநேகபூர்வமான விருந்தொன்றை அளித்தார். எதிர்க் கட்சிகளிடமும் நட்பு ரீதியாகப் பழகுபவர் அந்த அம்மச்சர். அந்த விருந்தின் போது நடந்த சில சுவையான சம்பவங்களைச் சொல்கிறார் சண்டே ஐலண்ட் பத்திரிகை விமர்சகர் பிரசாத் குணவர்த்த.

நாட்டின் இன்றைய நிலை பற்றி விருந்தினர்கள் .கலந்துரையாடிய போது, "தமிழீழ விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி விட்டோம் என அரசாங்கம் சொல்கிறது. ஆனால் கடந்த வாரச் சம்பவங்கள் அரசின் கூற்றைப் பொய்யாக்கி புலிகளின் நடவடிக்கைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதையே காட்டுகிறது" என எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் சொன்னார். இன்னொரு எதிர்க்கட்சி உறுப்பினர் "சர்வதேச செய்தி நிறுவனங்கள் நாட்டு நிலமை பற்றி உலகமெங்கும் செய்திகளை வெளியிடுகையில், உண்மையை அறிய முடியாத வகையில் சிறீலங்கா பத்திரிகைகளுக்கு செய்தித் தணிக்கை ஏன்" என்று கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் தனது சொந்தக் கருத்தின்படி பத்திரிகைத் தணிக்கை முட்டாள்தனமர்னது. முல்லைத்தீவுத் தாக்குதலை விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியுடனேயே செய்து வெற்றி பெற்றுள்ளனர். அதுமட்டுமல்ல வடக்கு கிழக்கு இராணுவ பொலிஸ் நிலையங்களையும் அவர்கள் வெற்றிகரமாகவே தாக்குகிறார்கள். உண்மைகள் எப்படியும் வெளிவரும். நான் என்ன செய்ய முடியும்" என்று அங்கலாய்த்தர்ராம் அந்த அமைச்சர்.

தொகுப்பு:
சர்க்கரவர்த்தி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தங்கள் கூட்டுக்குப் பெயர் சூட்டுவதில் கொழும்புத் தமிழ் குழுக்கள் இழுபறி

கொழும்பிலிருந்து செயற்படும் ஐந்து தமிழ் குழுக்களும் தாங்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கூட்டமைப்புக்குள் இயங்குவதற்கு தீர்மானித்திருந்தன.

சந்திரிகா அரசாங்கம் புலிகளை அழித்துவிடும், யாழ்ப்பாணத்தை பிடித்தவுடன் அதை தங்கத் தாம்பாளத்தில் வைத்து தருமென்றும், தாங்கள் முதலமைச்சராகவும், அமைச்சர்களாகவும் வரலாம் எனக் கனவு கண்டு கொண்டு கண்மூடித்தனமாக அரசாங்கத்துக்கு ஆதரவளித்துக் கொண்டும், கொழும்பு, வவுனியா, மட்டக்களப்பு பகுதிகளில் தங்களுக்கு எதிரான அப்பாவி இளைஞர்களை புலிகள் என சிறீலங்கா பாதுகாப்புப் படைகளுக்கு காட்டிக் கொடுத்துவந்த இந்தக் குழுக்களுக்கு, சமீபத்தில் சந்திரிகா பட்டை நாமம் சாத்திவிட்ட நிலையில், தனித்தனியாக இருந்தால் தாம் அழிந்து போய்விடுவோம் என்று அஞ்சி ஒன்றாக இணைந்து இயங்குவதற்கு தீர்மானித்திருந்தன.

தற்போது PLOTE, EPRLF, EPDP, TELO, EROS (சங்கர்ராஜி) ஆகிய இந்த ஐந்து குழுக்களில் EPRLF உம், PLOTEம் 5 தமிழ் கட்சிகளின் கூட்டமைப்பு என்று பெயர் வைக்கலாம் என கருத்துத் தெரிவித்த போது EPDP தமிழ் என்ற பெயர் இருந்தால் வருங்காலத்தில் முஸ்லீம் கட்சிகளையும் தங்கள் கூட்டில் சேர்க்க முடியாமல் போய்விடும் எனக் கூறியுள்ளது.

வடக்கு - கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகசபை ஒன்றை அமைக்க வேண்டும் என்று EPDP கோரிவருகிறது. PLOTஉம், EPRLஉம் அதை ஆதரித்தாலும் TELO அதை எதிர்த்து வருகிறது. EROS அதைப்பற்றி இன்னும் முடிவெடுக்கவில்லை எனக் கூறப்படுகிறது.

# யாழ் குடாவுக்கு கடிதமனுப்ப புதிய நடைமுறை பரிசீலனை

சிறிலங்கா இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு தபால்களை அனுப்புவதற்கு அரசாங்கம் புதிய நடைமுறை ஒன்றை அமுல்படுத்துவதற்கு பரிசீலித்து வருகிறது.

கடித உறையை பாவிக்காமல் எழுதிய தாள்களையே கடித உறை போல் மடித்து- அவற்றின் மேல் முத்திரை ஒட்டி அனுப்பிவைக்கும் முறை தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது. இந்த முறையில் அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் விமான மூலமாக விரைவாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டு தாமதமின்றி விநியோகிக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாக சிறீலங்கா தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் கடித உறையில் அனுப்படும் கடிதங்கள் அவை உள்ளூர் கடிதங்களாக இருந்தாலென்ன வெளிநாட்டுக் கடிதங்களாக இருந்தாலென்ன அவை உடைத்து பரிசீலிக்கப்பட்ட பின்பே அங்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், வெளிநாட்டுக் கடிதங்களில் கடித உறையில் வைக்காமல் வான் அஞ்சல் தாள்களில் எழுதப்படும் கடிதங்களும் அவற்றின் உள்ளே ஏதாவது செருகப்படாதிருக்கும் பட்சத்தில் விரைவாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தாராவெளியில் குடிமக்கள் படையினரால் படுகொலை

கடந்த 14-ம், 16ம் திகதிகளில் மட்டக்களப்பு வாழைச்சேனை பகுதியில் உள்ள கிராமங்கள் மீது படையினர் புகுந்து அப்பாவி மக்களை படுகொலை செய்துள்ளனர்.

16-ம் திகதி தாராவெளி பகுதியிலுள்ள முருகன்தீவு கிராமத்தினுள் புகுந்த படையினர் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அப்பாவிப் பொதுமக்கள் மூவர் அவ்விடத்திலேயே கொல்லப் பட்டுள்ளனர். மேலும் ஏழு பேர் படுகாயங்களுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

இப் பகுதியில் அண்மையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான படையினர் தமது பழிவாங்கும் நடவடிக்கையினை இவ் அப்பாவிக் கிராம மக்கள் மீது மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 14ம் திகதி வாழைச்சேனை இராணுவ முகாமிலிருந்து பிரம்படித்தீவு நோக்கி ஏவப்பட்ட எறிகணைகளுக்கு இரு சிறார்கள் உட்பட மூவர் கொல்லப்பட்டதுடன் மேலும் ஏழுபேர் படுகாயமடைந்துள்ளனர்.

தம்மால் கொல்லப்பட்ட அப்பாவி கிராம மக்களை சிறீலங்கா இராணுவம் விடுதலைப் புலிகள் எனப் பிரச்சாரம் செய்துள்ளது.

# உடுவிலில் மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்

கடந்த மாதம் 17 ஆம் திகதி கட்டுடைப் பகுதியிலும் 25-ம் திகதி மானிப்பாய் பகுதியிலும் இராணுவத்தினருடனான நேரடி மோதலில் வீரமரணமடைந்த ஒன்பது விடுதலைப் புலிகளினதும் நினைவாக இம் மாதம் 19-ம் திகதி உடுவிலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் கணிசமான அளவு பொது மக்களும் கலந்து கொண்டு தமது அஞ்சலியினைத் தெரிவித்தனர்.

யாழ்.குடாநாடு முழுவதும் தமது கட்டுப்பாட்டினுள் உள்ளது என சிறீலங்கா அரச இயந்திரம் பிரச்சாரம் செய்து வருகின்ற போதிலும் விடுதலைப் புலிகளுக்கு மக்கள் தமது ஆதரவினை தொடர்ந்து வழங்கி வருகின்றனர்.

உடுவிலில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பலரும் குடாநாட்டினை சிங்கள பேரினவாதத்திடமிருந்து முழுமையாக மீட்கும் காலம் வெகு தூரத்தில் இல்லை எனவும் புலிகளின் கரங்களை இவ் வேளையில் பலப்படுத்துவதே மரணித்த மாவீரர்களுக்கு நாம் செய்யும் உண்மையான அஞ்சலி எனவும் குறிப்பிட்டனர்.

# புறாவின் அலகில் சமாதானக் கொடி அதன் காலிலே வெடிகுண்டு

(கொழும்பு)

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது நாட்டில் ஐக்கியம், சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறியது. ஆனால் இன்று சமாதானப் புறாவின் அலகில் மட்டும்தான் சமாதானக் கொடி இருக்கிறது. அதன் கால்களில் பயங்கர வெடிகுண்டுகளைக் கட்டிக் கொண்டு அப்பாவி மக்களை அநியாயமாகக் கொலை செய்து வருகின்றனர் என்று ஐ.தே.கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் அலிஸாகிர் மௌலானா தெரிவித்துள்ளார்.

ஏறாவூரில் நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் பேசுகையில் நாட்டுமக்கள் பல்வேறுபட்ட பிரச்சனைகளினால் இக்கட்டான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது அரசாங்கம் இரட்டை வேடம் பூண்டு சிறுபான்மை மக்களை அழித்து அகதிகளாக்கி வருகிறது.

அமைதியை எதிர்பார்த்த வடக்கு கிழக்கு மக்கள் இன்று சொல்லொண்ணாத் துன்பத்தில் வாழ வேண்டியுள்ளது. இன்று பல ஆயிரக் கணக்கான மக்கள் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றி, இருக்க இடமின்றி தாங்க முடியாத கஷ்டத்தில் இருக்கிறார்கள். இந்த மக்களை இந்த நிலைக்கு ஆளாக்கியது ஒன்றுதான் இந்த அரசாங்கம் செய்த சாதனை என்று கூறியுள்ளார்.


## டோட்மூண்ட் பிறைட்டன் ஜுவல்லறி

## றெக்ஸ்ரைல்ஸ் & வீடியோ

ஆசிய விற்பனை நிலையத்தின்

மலிவு விற்பனை **10.09.96** முதல் **05.10.96** வரை

*மலிவு விலைப் பொருட்களில் உதாரணத்திற்கு சில*

100 கிராம் மோர் மிளகாய் 99 பெனிக்
450 கிராம் HORLICKS போத்தல் 4.95DM
1 கிலோ வறுத்த அரிசிமா 2.95DM
500 கிராம் வறுத்த பெட்டி, போத்தல் தூள் 4.45DM
20 கிலோ Tilda புறோக்கன் பஸ்மதி அரிசி 24.90DM
Audio Lby 1.95 DM முதல் 3.95DM வரை

RAMY, PYRAMID உப்படட அனைத்து வகை CD களும் 4.90DM முதல் 12.90DM மட்டுமே
ஒரிஜினல் வீடியோ பாட்டுக் கொப்பிகள், ஒரிஜினல் வீடியோ தமிழ் படங்கள் யாவும் 7.90DM முதல் 14.90DM மட்டுமே.
1 பவுண் தங்கநகை (வரி, கூலி உட்பட) 195DM

* பட்டுப் புடவைகள் ரெடிமேட் ஆடைகள், எவர்சில்வர் பாத்திரங்கள் அனைத்தும் மலிவு விலையில்
* மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழ் வீடியோ படங்கள் வாடகைக்கும், விற்பனைக்கும் கிடைக்கும்
ஜெர்மனியில் எப் பாகத்திற்கும் பொருட்களைப் பெற விரும்புபவர்களுக்கு தபாலில் NACHNAME மூலம் உடன் அனுப்பிவைக்கப்படும்.
திருமண, பிறந்ததின அழைப்பிதழ்கள், T.V, வீடியோ திருத்த வேலைகளும் செய்து கொடுக்கப்படும்.

**BRIGHTAN** VIDEO & ASIA SHOP JEWELLERY & TEXTILES

OESTERMARSCH 27/37, 44145 DOUTMUND - Tel: 0231 819431, 838703 Fax: 0231-811858


## இரண்டாம் ஆண்டு கலைவிழா

## தமிழ் மன்றம் பிறைபேர்க்

**நாள்: 28.09.1996 சனிக்கிழமை**

**நேரம்: 17 மணி**

**இடம்: Haus Der Jugend Uhlandstr-2, 79102 Freiburg.**

**நிகழ்ச்சிகள்: மௌன அஞ்சலி, மங்கள விளக்கேற்றல், வரவேற்புரை, பிரதம விருந்தினர் உரை, பரதநாட்டியம்** (திருமதி. பவானி இராஜசிங்கத்தின், பாரிஸ் ப்ரகதீஸ்வரா நாட்டியாலய மாணவிகள்)

**நாடகம் – எதிர்பார்ப்பு** (தமிழ்மன்றம் பிறைபேர்க்)

**இடைவேளை – விருந்துபசாரம்**

**கதம்பம்** சின்னக்குட்டி T.தயாநிதி, நவரசநாயகன் P. லோகதாஸ் இணைந்து வழங்கும் நகைச்சுவைக் கதம்பம், **இன்னிசை** (ஐரோப்பிய புகழ் பாரிஸ் இளையநிலா), **நன்றியுரை**

இந் நிகழ்ச்சிகளை தொகுத்துவழங்குகிறார் பிரான்ஸ் தமிழ் வானொலி அறிவிப்பாளர் பிலிப்தேவா அவர்கள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்**


தொடர்புகட்கு: 01717556876 - 01717555154

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் கிளிநொச்சிப் படையெடுப்பு

‘சத்ஜய’ இராணுவ நடவடிக்கை மூலம் கிளிநொச்சி நகரை கைப்பற்றுவதற்கு அரச படையினர் எடுத்த பகிரத முயற்சி சாத்தியமாகாமல் போகவே, படையினர் பரந்தன் பகுதியில் நிலை கொள்ள வேண்டியதாயிற்று. ஆனால், மீண்டும் மனந்தளராத விக்கிரமன் தனது முயற்சிகளை தொடர்ந்தது போல மீண்டும் கிளிநொச்சியினை நோக்கிய தமது இராணுவ நடவடிக்கையான படையினர் 22.09.96 ஞாயிற்றுக்கிழமை அன்று ஆரம்பித்தனர்.

இவ்விராணுவ நடவடிக்கையின் நோக்கம்தான் என்ன? அரசின் இராணுவ ரீதியான செயற்பாடுகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எவை? அரசின் இராணுவ நடவடிக்கைகளைத் தோல்வியில் தள்ளிவிட புலிகள் வகுக்கும் வியூகம் தான் என்ன?



வடக்கு - கிழக்குப் பகுதியின் முக்கிய நகரங்களை எல்லாம் தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டு வருவது என்ற அரசின் இராணுவத் தந்திரோபாயத்தின் ஓர் பகுதியாக மட்டும் கிளிநொச்சி நோக்கிய படையெடுப்பை நோக்க முடியாது. கிளிநொச்சிப் பகுதியினைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதன் ஊடாக புலிகள்வசம் இருக்கும் பிரதேசங்களை - அது வன்னி மண்ணாக இருப்பினும் கூட தம்மால் கைப்பற்ற முடியும் என்பதனை நிலைநிறுத்த வேண்டும் என்ற துடிப்பு படைத்தரப்புக்கு இருக்கின்றது. வன்னிப் பெருநிலப் பரப்பின் முழுப் பிரதேசத்தையும் தம்மால் கைப்பற்ற முடியாது என்பது படைத்தரப்புக்கு நன்றாகவே தெரியும். குடாநாட்டிலேயே பெரும்பகுதி நிலத்தினை ‘சுத்திகரிக்கப் படாத பகுதி’ (UNCLEAN AREA) என்று கூறி புலிகள்வசம் விட்டிருக்கும் படையினர், வன்னிப் பெருநிலத்தின் முழுப் பகுதியினையும் தம்வசப் படுத்திவிட வேண்டும் என்ற கனவு, படையினருக்கும் இருக்கும் எனக் கூறமுடியாது.

அப்படியாயின் கிளிநொச்சியினை நோக்கி நகர முற்படுவதன் நோக்கம் என்னவாக இருக்க முடியும்?

அரச படைகளைப் பொறுத்தவரையில் புலிகளை வெற்றி கொள்வதென்பது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனை உணர்ந்திருப்பினும்கூட, புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற அரசியல் தீர்மானத்திற்கு இணங்க தமது வியூகங்களை வகுக்கின்றனர். இவ் வியூகத்தின் அடிப்படையில் யாழ் குடாநாட்டிற்கான ஒரு தரைவழிப் பாதையினை விநியோகத்திற்காக உருவாக்கிக் கொள்ள வேண்டியது இன்றைய அவசர தேவையாய் உள்ளது. இத் தரைவழிப்பாதை ஒன்றினை உருவாக்கி, அதனைத் தக்கவைத்துக் கொள்ளாவிடின், யாழ் குடாநாட்டில் உள்ள இராணுவத்தினருக்கான விநியோகங்களை மேற்கொள்வதில் பலத்த நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டி நேரிடும்.

யாழ் குடாநாட்டிற்கான தரைவழி விநியோகப் பாதை என்று கூறும்போது மூன்று சாத்தியமான பாதைகள் குறித்து இராணுவம் கண்வைத்தது.

1. ஆனையிறவு – தாண்டிக்குளம் பகுதியினை இணைக்கும் கண்டி வீதியூடான பாதை.
2. வவுனியா – மன்னார் – பூநகரி – சங்குப்பிட்டி வழிப்பாதை.
3. ஆனையிறவு – முல்லைத்தீவு ஊடான கடற்கரையோரமாக மணலாறு முகாங்களை இணைத்து உருவாக்கப்படக் கூடிய பாதை.

**நண்டார் பக்கம்**

மூன்று பாதைகளிலும் முதல் இரண்டு பாதைகளைப் பற்றி இராணுவப் பேச்சாளர் அடிக்கடி பிரஸ்தாபித்துக் கொண்டார். அவ் இரண்டு பாதைகளில் ஏதாவது ஒன்றினை தரைவழி விநியோகத்திற்காக அமைத்துக்கொள்வது தொடர்பாக இராணுவம் கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் கூறிக்கொண்டார்.

ஆனால், உண்மையில் இராணுவம் கவனம் செலுத்திவந்த பாதை மூன்றாவது பாதை. அப் பாதையினை அமைத்துக் கொள்வதற்கான திட்டங்களையும் அரசு வகுக்க் ஆரம்பித்தது. அதற்குத் தேவையான ஆட்பல அதிகரிப்பினை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்தது.

எனினும் முல்லைத்தீவு இராணுவத் தளத்தினை புலிகள் தகர்த்தவுடன் அரசின் ‘மூன்றாவது பாதை’ சாத்தியமானதா என்ற கேள்வி எழுந்துவிட்டது.

இச் சூழலில் மீண்டும் நடைபெறும் கிளிநொச்சி நோக்கிய படையெடுப்பு நான்கு நோக்கங்களை கொண்டதாக இருக்கும் எனக் கருதலாம்.

1. அரச படையினரை மரபு ரீதியான யுத்தம் ஒன்றில் எதிர்கொள்ளும் சக்தியினைப் புலிகள் பெற்றுவிட்டார்கள் என்ற கருத்து மேலோங்குவதைத் தடுத்து, புலிகள் வசம் உள்ள பிரதேசங்களைக் கைப்பற்றத் தம்மால் முடியும் என்பதனை உணர்த்துவது.

2. புலிகள் பாரியதொரு தாக்குதல் நடவடிக்கையில் தமது வளங்களை ஒன்றுகுவித்து, தமக்கு எதிரான தாக்குதல்களைச் செய்வதனைத் தடுக்கும் நோக்கில் புலிகளைத் தற்காப்பு நிலைத் தாக்குதலுக்கு இழுப்பது. கிளிநொச்சி நோக்கி முன்னேறும் படைகளை எதிர்க்கும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபட வேண்டிய நிலை தோற்றுவிக்கப் படுவதினால், அரச படைகள் மீதான பாரிய தாக்குதலை செய்வதற்கு உரிய கால அவகாசத்தை புலிகளுக்கு வழங்காமல் தடுக்கலாம் என்று படைத்தரப்பு கருதுகிறது.

3. கிளிநொச்சி நகரத்தினை கைப்பற்றி தாண்டிக்குளம் நோக்கிய தரைவழிப் பாதையினை அமைப்பதற்கான ஆரம்பப் புள்ளியினை அமைப்பது.

4. புலிகளால் எந்த ஒரு முக்கியமான நகரங்களிலும் நிலையான நிர்வாகத்தினை நடத்த முடியாது என்பதனை வெளிப்படுத்துவது.

இவற்றில் இராணுவ ரீதியான முக்கியத்துவத்தினை இர-ண்டாவது, மூன்றாவது விடயங்களே பெறுகின்றன. புலிகளின் தாக்குதல்களை தாம் தடுப்பதினைவிட, தமது தாக்குதலினை புலிகள் தடுக்க வேண்டிய நிலையினை உருவாக்குவதே தமக்கு இழப்பினைக் குறைக்கக் கூடிய நடைமுறையாக அமையும் என்பது படைத்தரப்பின் முக்கிய கருத்து.

கிளிநொச்சியினைக் கைப்பற்றி அங்கிருந்து தாண்டிக்குளம் வரையுமான தரைவழிப் பாதையினை அமைப்பது சாத்தியமா? அவ்வாறு அமைப்பினும் அதனைத் தக்கவைத்துக் கொள்வது சாத்தியமா? என்ற கேள்விகள் இராணுவ ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றன.

இராணுவ தரப்பினரைப் பொறுத்தவரை இது ஆட்பலத்துடன் தொடர்புபட்டது என எண்ணாதது போலத் தெரிகிறது. கண்டிவீதியூடான பாதையினைக் கைப்பற்றி பாதையின் இரு பக்கங்களிலும் குறைந்தது ஒருமைல் தூரத்தினை வெளியாக்கி இரு மருங்கிலும் முட்கம்பி வேலிபோட்டு, அவ் வேலிக்கு மின்சாரம் பாய்ச்சி இப்படியாக மரபு ரீதியான தளங்களைப் பாதுகாப்பது தொடர்பான சிந்தனைகள் எல்லாம் படைத்தரப்புக்கு வந்து போகலாம்.

இருப்பினும், மேலும் 75 000 பேரினை படைக்கு புதிதாகச் சேர்த்தல் என்னும் அரசின் திட்டம் வெற்றியளிக்காமல், ஏனையவற்றினைப் பற்றிச் சிந்திக்க முடியாத நிலையே தற்போது படையினருக்கு உள்ளது. வழமை போல, இப் புதிய ஆட்சேர்ப்புத் திட்டம் தோல்வியினைத் தழுவும்போது, தரைவழிப் பாதைத்திட்டம் தோல்வியினைத் தழுவிவிடும்.

அப்படியானால், கிளிநொச்சி மீதான படையெடுப்பின் மூலம் அரச படைகள் சாதிக்கப்போவதென்ன? புலிகள் பாய்ந்து தாக்குவதற்கு வசதியாக ஒரு இடத்தினை நோக்கி முன்னேறுவதனைத் தவிர வேறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

## அரச படைகளின் நோக்கம்தான் என்ன?


Neuss ORIENTAL SHOPPING CENTRE ம்
Dussel dorf INDO - CEYLON HOUSE ம்

இணைந்து வழங்கும்

காலவரையறையற்ற மாபெரும் மலிவு விற்பனை

தரமான பொருட்களை குறைவான விலையில் பெற்றுக்கொள்ள முந்துங்கள்

இதோ மலிவிற்கு இங்கே உதாரணங்கள் சில....

* 100g கடுகு 0.49Pf,100g வெந்தயம் 49Pf, 100g பெ.சீரகம் 0.59Pf, 100g சி.சீரகம் 0.59Pf, 100g மிளகு 99Pf, 200g மல்லி 99Pf 454g புளி (தாய்லாந்து) 99Pf, 500 கிராம் மைசூர் பருப்பு 1.25Dm, 500g கிராம் கடலைப் பருப்பு 1.25Dm, 5Kg பசுமதி அரிசி (No1) 22.50 Dm மட்டும். 500g உ.பருப்பு 1.25 Dm இலங்கை முறைப்படி தயாரிக்கப்பட்ட உடன் றோஸ் பாண், பணிஸ் வகைகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* வீடியோ வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு, கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்பாக வெளிவந்த அனைத்து வீடியோ பிரதிகளும் அரைக் கட்டண வாடகைக்கு (1Dm) வழங்கப்படும். அத்துடன் நீங்கள் விரும்பும் படத்தின் வீடியோப் பிரதிகளும் மலிவு விலையில் தரப்படும். சிறைச்சாலை, தேவராகம், எஜமான், மன்னன், குருதிப்புனல் பிரதி 6.90Dm மட்டுமே.
* ORIENTAL PARTY SERVICE அனைத்துக் கொண்டாட்டங்களுக்கும் நீங்கள் விரும்பிய உணவு (சைவ, அசைவ) வகைகளை தயார் செய்து நிகழ்ச்சி நடைபெறும் மண்டபம்வரை விநியோகம் செய்யப்படும். அத்துடன் உணவு பரிமாறுவதற்கான எவர் சில்வர் பாத்திரங்கள் (சில்வர் கோப்பை, ரம்ளர், ஐஸ்கிரீம் கப்) போன்றவை குறைந்த வாடகையில் தரப்படும்.
* உங்களது எந்தவிதமான கொண்டாட்டங்களுக்கும் தேவையான சமையல் பொருட்கள் அனைத்தையும் எம்மிடம் வாங்கினால் காஸ் அடுப்புக்கள், பெரிய RICE COOKER, சமையல் பாத்திரங்கள் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
* எமது விஷேட சேவைகள்: உலகின் எப்பகுதிக்கும் குறைந்தவிலையில் விமான பயணச் சீட்டு ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.(அவசர பயணம் மேற்கொள்வோரின் நலன் கருதி விமான நிலையத்திலும் ரிக்கற்றுகள் விநியோகம் செய்யப்படும்)
* பிறந்தநாள், திருமணம், பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றிற்கான அழகான அழைப்பிதழ்கள், மண்டப சோடனைகள், மாலை வகைகள், ஐயர், வீடியோ, புகைப்பட பிடிப்பு அனைத்தும் குறைந்த செலவில் ஒழுங்கு செய்து தரப்படும்.

ORIENTAL SHOPPING CENTRE
Meerer Hof-L 11.12, 41460 Neuss.
Tel: 02131/278157 - Fax: 02131/278179

INDO - CEYLON HOUSE
Worringer Str-107, 40210 Dussel Dorf.
Tel: 0211/365317 - Fax: 0211/1649382

(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியாவிடம் யார் கேட்பது ?

டெல்லியில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, மந்திரிகளுக்கு வீடுகள் ஒதுக்கப்படுவது உண்டு. அவர்கள் தங்கள் பதவிக் காலம் முடிந்தவுடன் அவற்றை விட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேற மறுப்பவர்களது உடமைகள் தூக்கி எறியப்பட்டு வருகின்றன.

முன்னாள் பா.ம. உறுப்பினர்களை வெளியேறுமாறு நீதி மன்றமும் உத்தரவிட்டு வருகின்றது. நீதி மன்றத்தின் உத்தரவிற்கு பயந்து அதிகாரிகளும் துரித நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

காங்கிரஸ் கட்சி அலுவலகம் இயங்குவதற்கு அரசு அக்பர் சாலையில் பிரமாண்டமான பங்களா ஒன்றை ஒதுக்கியிருந்தது. பல ஆண்டுகளாக அங்குதான் காங்கிரஸ் கட்சி செயற்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கென அரசு நிலம் ஒதுக்கி கொடுத்தது. அதில் பிரமாண்டமான கட்டடம் எழுப்பப்பட்டது. இதற்கு தொழில் அதிபர்கள் கோடி கோடியாக பணம் கொடுத்திருந்தனர். அக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் சோனியா காந்தி ராஜீவ்காந்தி அறக்கட்டளை அலுவலகமாக மாற்றினார்.

காங்கிரஸ் அலுவலகத்தை அக்பர் சாலையில் தொடர்ந்து இயங்க அனுமதித்தது ஏன் என்று நீதிமன்றம் கேட்கலாம் என்பதால் வீட்டு வசதித்துறை அமைச்சு, காங்கிரஸ் அலுவலகத்திற்கு ஆணை அனுப்ப முடிவு செய்துள்ளது. ஜவகர் பவனை விட்டு வெளியேறுமாறு •சோனியாவை போய் யார் கேட்பது என்று காங்கிரஸ் காரர்கள் குழம்பிப் போய் உள்ளார்கள். இதேவேளை சில மூத்த காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அக்பர்சாலை பங்களாவை தங்கள் பெயரில் ஒதுக்கும் படி செய்து அதன் பின்னர் கட்சி அலுவலகத்தை தொடர்ந்து அங்கேயே இயங்கச் செயலாம் என யோசனை தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் அலுவலத்தில் நடைபெற்ற ஊழல்கள்

நரசிம்மராவ் பிரதமராக இருந்த போது அவரது அலுவலகத்தில் இருந்த உயர் அதிகாரிகள் மீது ஊழல் குற்றச்சாட்டுக்கள் வெளிவந்தவண்ணம் உள்ளன. ஆந்திரா மாநிலத்தைச் சேர்ந்த மூத்த ஐ.ஏ.எஸ் அதிகாரியான பி.வி.ஆர். கே.பிரசாத் மத்திய அரசிலிருந்து மாநில அரசுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இவர் தானாக முன்வந்து ஓய்வுபெற முடிவு செய்துள்ளார். இதற்கான கடிதத்தை ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவிற்கு எழுதியுள்ளார். ஆந்திர முதல்வர் இவரது கடிதத்தை ஏற்பாரா என்பது தெரியவில்லை. பதவி மாற்றத்தின் போது இவர்களுக்கு இரண்டு மாத விடுமுறை வழங்கப்படும். இதை பிரசாத் பயன்படுத்தி வெளிநாடு சென்றுள்ளார். தனது விடுமுறையை மேலும் இரண்டுமாதத்திற்கு அவர் நீடித்துள்ளார்.

யூரியா இறக்குமதி ஊழலில் சாம்பசிவராவுக்கும், பிரபாகர் ராவிற்கும் உதவிபுரிந்தது, வி.பி. ஆர்கே, பிரசாத் தான் என்ற விவரத்தை சி.பி.ஐ. அதிகாரிகள் திரட்டியுள்ளனர்.

# குஜராத் அரசாங்கம் பதவி நீக்கம்

குஜராத் மாநில அரசாங்கம் இந்திய ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மாவினால் கடந்த 19.09.96 அன்று பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

பாரதீய ஜனதா கட்சி ஆட்சியில் இருக்கும் இந்த மாநில அரசில், அக் கட்சியில் ஏற்பட்ட பிளவை அடுத்து சட்ட சபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு கொண்டுவரப்பட்டது.

இத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு வந்தபோது குஜராத் மாநில முதல்வர் சுரேஷ்பாய் மேத்தா வெற்றியடைந்து விட்டாலும், சட்டசபையில் பெரும் கலவரம் இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து கடந்த 19.09.96 வியாழக்கிழமை அவசரமாகக் கூடிய தேவகவுடா தலைமையிலான மத்திய அமைச்சரவை. குஜராத் மாநில அரசை பதவி நீக்கம் செய்யுமாறு ஜனாதிபதிக்கு சிபார்சு செய்தது.

அதன் பின்பே ஜனாதிபதி சர்மா அந்த அரசை பதவி நீக்கம் செய்தார்.

# ஜெயின் கமிஷன் கண்டனம்

ராஜீவ்காந்தி கொலையில் இடம்பெற்றுள்ள சதி குறித்து விசாரித்துவரும் ஜெயின் கமிஷன் அடுத்த வருடம் மார்ச் மாதம்வரை பதவிக்காலம் நீடிக்கப் பட்டுள்ளது. இந் நீடிப்பு வழங்கப்படுவதற்கு முன்னர் உள்துறை அமைச்சர் இந்திரஜித்குப்தா ஜெயின் கமிஷன் செயல்பாடுகள் குறித்து அதிருப்தியைத் தெரிவித்திருந்தார்.

கமிஷன் விசாரணை மிகவும் மெதுவாக நடைபெறுவதால் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளானது. ஜெயின் கமிஷனுக்கு பதவிக் காலம் நீடிப்பு வழங்கப்பட்டதற்கு மறுநாள் காங்கிரஸ் சட்டத்தரணி ஆர்.என். மித்தலை, நீதிபதி ஜெயின் கண்டித்தார்.

குறுக்கு விசாரணை செய்ய வேண்டியவர்கள் பட்டியலை தாக்கல் செய்ய காலம் கடத்துவதற்கு அவர் கடும் கண்டனம் தெரிவித்தார்.

உங்கள் கட்சி விவகாரத்தால் விசாரணை பாதிக்கப்படுகிறது. கடந்த 16-ம் திகதி பட்டியலை கொடுக்காவிட்டால் நரசிம்மராவுக்கு 'சமன்' பிறப்பிப்பேன் என நீதிபதி ஜெயின் எச்சரித்திருந்தார்.

அவ்வாறே வி.பி.சிங் எப்பொழுது கமிஷன் முன் பிரசன்னமாக வேண்டும் என்பதிலும் மித்தலின் கோரிக்கையை ஜெயின் ஏற்க மறுத்தார். உங்களுக்குள் நிலவும் அரசியல் சண்டைக்கு கமிஷன் விசாரணையை தாமதப்படுத்த மாட்டேன் என்றும் அவர் கூறியுள்ளார்.


# ஜெயலலிதாவின் பல கோடி சொத்துக்கள் கண்டுபிடிப்பு

முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சொத்துக்கள் குறித்து நடந்த முதற்கட்ட விசாரணையில் 10 கோடி ரூபா வங்கிப் பணமும், 15 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று. கடந்த 18.09.96 அன்று தாக்கல் செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் விசாரணை தொடர்பாக ஜெயலலிதாவை கைது செய்து விசாரிக்கவும் வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அவர் முன்ஜாமீன் வழக்குப் போட்டிருப்பதால் அவர் உடனடியாக கைது செய்யப்பட மாட்டார் எனத் தெரியவருகின்றது.

# மூலிகைப் பெற்றோலில் ஓடிய மோட்டார் சைக்கிள்

மூலிகைமூலம் பெற்றோலைக் கண்டுபிடித்துள்ள இராமர்பிள்ளைக்கு எரிபொருள் தயாரிப்பு நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தமிழக அரசு ஒத்துக் கொண்டுள்ளதோடு, இவர் மூலிகையை பயிரிட 20



ஏக்கர் நிலத்தையும் ஒதுக்கியுள்ளது.

அவர் தனது பெற்றோலை பெருமளவில் தயாரிக்க முடிந்தால் விற்பனை செய்வதற்கும் அனுமதிக்கப்படுவார் என்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அறிவித்திருக்கிறார்.

மூலிகைமூலம் இராமர் பிள்ளை தயாரித்த பெற்றோலைப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிள் ஓடுவதை மத்திய மாநில அமைச்சர்கள், மற்றும் அதிகாரிகள் நேரில் பார்வையிட்டனர்.

# நரசிம்மராவ் கைதாவார் ?

எம்.பி.-களுக்கு லஞ்சம் கொடுத்த வழக்கில் நரசிம்மராவ் கைது செய்யப்படலாம் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் டெல்லியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

லஞ்ச ஊழல் குற்றச் சாட்



டுக்கள் சுமத்தப் பட்டுள்ள நிலையில் காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து நரசிம்மராவ் விலகிக் கொள்வதாக அறிவித்துள்ளார்.


09.07.96 முதல் விற்பனையாகின்றது

125 பிராங்குகள் மட்டுமே




இதோ வெளிவந்துவிட்டது. வூட்லன்ஸ்சின் புதிய தொலைபேசி அட்டை WORLD CALL CARD உங்கள் வீடுகளில் இருந்தோ, அல்லது நீங்கள் நிற்கும் இடத்தில் இருந்தோ எவ்வித செலவுமின்றி N° de Vert பாவித்து எதுவித தடங்கலும் இல்லாமல் Mci நிறுவனத்தால் முதன் முதலாக இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகளுக்கு மட்டும் பாவிக்கக்கூடிய விசேட தயாரிப்பு இதுவே.

இலங்கை 15 நிமி. - பாகிஸ்தான் 15 நிமி, - பங்களாதேஷ் 15 நிமி. - இந்தியா 18 நிமி.

குறிப்பு: N° de Vert பாவிப்பதால் ஏற்படும் நன்மை, நீங்கள் முதல் தடவை 5 நிமிடம் பாவித்த பின்பும் மிகுதி 10 நிமிடத்தை பாவிக்கும் போது மேலதிகமாக பணம் செலவிடத் தேவையில்லை.

வர்த்தக ஸ்தாபனங்களுக்கு விசேட விலை உண்டு.

Woodlands Tele communication Centre

70, RUE LOUIS BLANC, 75010 PARIS. Tel: 46 07 76 04 - Fax: 40 07 76 90


மேலதிக விபரங்களுக்கு: 08 24 31 43 – 08 51 90 54

(ADV)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெரியாரின் வாரிசு யார்?

**கடந்த 17.06.96 அன்று தந்தை பெரியார் ஈ.வே. ராமசாமிநாயக்கரது பிறந்த தினத்தை ஒட்டி தமிழகப் பத்திரிகை ஒன்று பொதுவாழ்வில் ஈடுபட்ட தமிழகப் பிரமுகர்களிடம் கேட்ட கருத்துக்களின் தொகுப்பிலிருந்து.**



## மா.சம்பந்தன்

பெரியார் ஈ.வெ.ரா அவர்கள் தமிழ்த் தென்றல் திரு வி.க குறிப்பிட்டது போல வீரசைவ மரபில் வந்தவர் செல்வக் குடியில் பிறந்தவர். ஆரம்ப காலத்தில் தேசியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு கதர்த் தொண்டு, மதுவிலக்கு, தீண்டாமை ஒழிப்பு இவற்றிற்கு முன்னின்று பாடுபட்டவர். மத, ஜாதி வேற்றுமைகளைக் கடுமையாகச் சாடியவர். ஜாதிக்குக் காரணம் வருணாசிரமம். வருணாசிரமத்துக்குக் காரணம் சாஸ்திரங்கள். சாஸ்திரங்களுக்கு உறுதுணையாக நிற்பது கடவுள் எனப் படிப்படியாக விளக்கம் கூறி அவற்றை அறவே ஒழிக்க வேண்டுமெனப் பாடுபட்டவர். கேரளத்தின் வைக்கத்தில் உயர் சாதியினர் அல்லாத மக்கள் உயர் சாதியினர் தெருக்கள் வழியாக நடக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டது. வைக்கம் சென்று இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தி சிறை புகுந்து வைக்கம் வீரரானார்.

பெரியார் எதைச் செய்தாலும் முனைப்புடன் செய்யக் கூடியவர். தன் மனசாட்சிக்கு சரி என்று தோன்றியதை தயவு தாட்சண்யமின்றி நிறைவேற்றுபவர். தேசியவாதி வ.வே.சு. ஐயர் சேரமான்தேவியில் குருகுலம் நடத்தத்துவங்கிய போது அங்கு சாதி வேற்றுமை பாராட்டமாட்டார்கள் என்று பெரியார் கருதினார். ஆகவே அதற்கு



மா.சம்பந்தன்

காங்கிரஸ் நிதி தர ஏற்பாடு செய்தார் அவர். பின்னர் அங்கு சாதி ஆசாரம் என்ற பெயரில் மாணவர்களைத் தனித்தனியே பிரித்து உணவளித்ததை எதிர்த்து கடும் போராட்டம் நடத்தினார்.

மதுவிலக்குக் கொள்கைக்கு ஆதரவாக தனக்குச் சொந்தமான 4000 தென்னை மரங்களை நஷ்டத்தை லட்சியம் செய்யாமல் தயக்கமின்றி வெட்டி வீழ்த்தியவர் அவர். நகராட்சி, உள்ளாட்சித் தேர்தல்களில் காங்கிரஸ் பங்கெடுத்த போது ஒரு குறிப்பிட்ட மேட்டுக் குடியினரே பொதுமக்களிடமிருந்து தேர்வு பெற்று பதவி வகிப்பது தவறு எனக் கூறி விகிதாசார முறைப்படி இப் பதவிகள் தரப்பட வேண்டும் என அவர் காஞ்சிபுரம் காங்கிரஸ் மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவந்தார்.

அது நிராகரிக்கப் பட்டதால் சமூக நீதியே முக்கியம் எனக் கருதி காங்கிரசிலிருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கினார். தமிழ் நாடெங்கும் பட்டி தொட்டிகளிலெல்லாம் சுயமரியாதை இயக்கத்தைப் பரப்ப தன் உடல்நிலை, வசதிகள் எதையும் பொருட்படுத்தாமல் உழைத்தார்.

பெற்றோர் அவருக்கு வைத்த சொத்துக்கள் முதல், மக்கள் அவருக்கு அன்புடன் அளித்த காலணா, அரையணாக்களைக் கூட விடாமல் சிறுகச் சிறுகச் சேமித்து அவற்றை தமக்காக இல்லாமல் மக்களை விழிப்புணர்வு பெறச் செய்யும் சுயமரியாதை இயக்கத்துக்காகவே பயன்படுத்தியவர். ஆரம்பத்தில் அவருடன் இருந்த சமதர்ம சிந்தனையாளர் ஜீவானந்தம் அவரைவிட்டுப் பிரிந்தார். சைவப் பற்றுள்ள கே.எம். பாலசுப்பிரமணியம் இயக்கத்திலிருந்து வெளியேறினார். தமிழ்ப் பற்றுமிக்க கி.ஆ.பெ அவரை விட்டு விலகினார். கொள்கைப்பிடிப்பு இருந்தாலும் கருத்து வேறுபாட்டால் அறிஞர் அண்ணா பிரிந்து தனிக்கட்சி அமைத்தார். இப்படியார் தன்னைவிட்டுப் பிரிந்த போதிலும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் தமது கொள்கையை ஒரு போதும் கைவிடாமல் கடைப்பிடித்தவர் பெரியார் என்பது கவனிக்கத் தக்கது.

அதனால் தான் அவரது கொள்கைக்கு பிற் காலத்தில் ஏராளமான ஆதரவாளர்கள் ஏற்பட்டனர். ஆரம்ப காலங்களை ஒப்பிடும் போது தமிழ் நாட்டில் பெருமளவு மூடநம்பிக்கைகள் குறைந்துள்ளன. வட நாட்டைப்போல சாதி, மதக் கலவரங்கள் இங்கு ஏற்படாததற்கு பெரியாரே காரணம். இப்படிப்பட்ட நிலையில் இன்று தமிழ்நாட்டிலும் சாதிக் கலவரங்கள், மதக் கலவரங்கள் சில புல்லுருவிகளின் காரணமாகத் தலைதூக்கத் தொடங்கியுள்ளன. சாதியுகயணர்வு, சனாதனம் ஆகியவை நடுவில் சற்றே ஓய்ந்திருந்தன. காலத்திற்கேற்றபடி வளைந்து கொடுத்து தப்பிய அவை மீண்டும் தலைதூக்கப் பார்க்கின்றன. ஆகவே இன்றைய நிலையில் பெரியாரின் கொள்கைகள், நடைமுறை ஆகியவற்றுக்கான தேவை இன்னும் தமிழ்நாட்டில் உள்ளது என்பது உறுதி.

இந்த நிலையில் திராவிட இயக்கத்தில் தற்போது சலசலப்பும் சர்ச்சையும் தோன்றியுள்ளது வருந்தத்தக்கது. தன்னை திராவிடர்ப் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர் என்று சொல்லிக் கொண்ட முன்னாள் முதல்வர் ஜெயலலிதா பின்னர் பெரியாரின் கொள்கைக்கு விரோதமான வேதம் ஓதும் படிப்பிற்கு நிதி ஒதுக்கினார், பாபர் மசூதி இடிப்புக்குக் காரணமான பாரதீய ஜனதாவை ஆதரித்தார். அத்துடன் தான் இன்ன சாதியைச் சேர்ந்தவர் என அகந்தையோடு சட்டமன்றத்தில் கூறியதும் அனைவரும் அறிந்ததே. அப்படிப்பட்ட ஒருவரை வீராங்கனை என வீரமணி கூறியதும் தொடர்ந்து ஆதரித்ததும் இன்று திராவிட இயக்கத்தில் சர்ச்சை ஏற்படுத்தியுள்ளது.

பெரியார் கொள்கைக்கு யார் வாரிசு என்ற கேள்வியையும் இது எழுப்பியுள்ளது. இந்த இயக்கத்தைப் பொறுத்தவரை தனிமனிதர்கள் யாரும் இக் கொள்கைக்கு நாங்களே வாரிசு என உரிமை பாராட்ட முடியாது. பெரியாரின் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடித்து அதற்காகச் செயல்படும் தொண்டர்கள் அனைவரும் தான் பெரியாரியத்தின் வாரீசாக இருக்கமுடியும். பெரியார் வாழ்நாள் முழுவதும் எதிர்த்த சக்திகள் மீண்டும் தமிழகத்தில் தலையெடுக்க முடியாமல் தடுக்க இத்தகைய தொண்டர்களே இன்றைய அவசியத் தேவை.


## எஸ்.வி.ராஜதுரை

மண்டல் குழு அறிக்கைக்குப் பிறகு இந்திய சமுதாயம், அரசு ஆகியன பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளவும், அவற்றைப் புரிந்து கொள்ளவும் இன்று ஏராளமான சமூகவியல், அரசியல் அறிஞர்களும் பல்வேறு அரசியல், சமுதாய இயக்கங்களும் சாதி என்ற வகையினத்தைப் பயன்படுத்தி வருவதைப் பார்க்கிறோம். பிறப்பு முதல் இறப்புவரை நமது சமுதாயத்திலுள்ள பெண்ணின் / ஆணின் வாழ்க்கையின் ஒவ் [illegible] [illegible] சுதந்திரத்திற்கு முன்பும் சரி, பின்பும் சரி அரசும் அரசியல் அதிகாரமும் வர்க்க அடிப்படையில் மட்டுமின்றி சாதியடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளன என்பதையும் தொடர்ந்து சுட்டிக் காட்டிவந்தவர் பெரியார். ஆரியர், திராவிடர் என்ற பாகுபாட்டினைச் சார்ந்தெழுந்த வரலாறெழுது நெறியை தம் சமகாலச் சிந்தனையாளர்கள் பலரையும் போலப் பெரியாரும் பகிர்ந்து கொண்டிருந்த போதிலும் அவரது சிந்தனைகளும் செயலுக்குமான உலகப் பார்வைக்கு மையக்கூறாக இருந்தது. சாதியொழிப்புக் கோட்பாடுதான் இவ் வகையில் பெரியார், மகாத்மாஜோதிபாஃபுலே. அண்ணல் அம்பேத்கர் ஆகியோர் ஒரே அணியில் நிற்பவர்கள்.

தீண்டாமை என்பது ஏணிமரப்படிபோல் இந்த நாட்டு மக்கள் ஒவ்வொருவரையும் பீடித்திருக்கிறது. பார்ப்பனரல்லாதவருக்குள்ளும் பல்பல சாதியார் ஒருவருக்கொருவர் வித்தியாசம் பாராட்டுகின்றனர். மேல் சாதியார்களை நீங்கள் உங்களுக்குச் சமமாக இருக்க வேண்டுமென்று விரும்புவீர்களேயானால் உங்களுக்குக் கீழே உள்ள சாதியர்களுக்கு நீங்கள் சமத்துவம் அளிக்க வேண்டும். நம்மிடமிருக்கும் கொடுமை. பார்ப்பனர்கள் காட்டும் கொடுமையைவிட சற்று அதிகம் என்றே சொல்ல வேண்டும். பார்ப்பனர் வைத்த தீ நம் வீடுகளையும் பற்றிக் கொண்டது. என்று கூறிய பெரியார் 'பறையர் என்ற பட்டம் போகாமல் சூத்திரர் என்ற பட்டம் போகாது' என அறிவித்து தாழ்த்தப்பட்டோரின் (தலித்துகளின்) விடுதலையே சாதியொழிப்பின் அடிப்படை நிபந்தனையாக்கினார். அவரது சுயமரியாதை இயக்கத்திலும் திராவிடர் கழகத்திலும் இருந்த எண்ணற்ற தலித் செயல்வீரர்கள் அவர்களது கருத்துக்கள் - பெரியாரின் இயக்கம் தலித் விடுதலைக்காக மேற்கொண்ட செயற்பாடுகள் ஆகியன பற்றி விரிவாக எழுதப்பட வேண்டியது இன்றைய தேவை.

1939-ல் ஒரு பொதுக் கூட்டத்தில் கேட்கப்பட்ட கேள்விக்கு பெரியார் பதிலுரைத்தார். பார்ப்பனப் பூண்டை ஒழிக்கவே நான் உயிருடன் இருக்கிறேன். என்று எங்கோ சொன்னதாக கேள்வியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்தக் காரியம் என்னால் முடியாது என்றும், யாராலும் முடியாது என்றும் முடியுமானால் அது அல்ல என் அபிப்பிராயமென்றும் பலதடவை சொல்லியும் எழுதியும் வந்திருக்கிறேன். ஆனால் நான் கூறிவந்ததும் இப்பொழுது வன்மையாகக் கூறுவதும் பார்ப்பனியத்தை அடியோடு ஒழிப்பது என்பது தான் முக்கியமானதும் முதன்மையானதுமான காரியம் என்று கூறுகிறேன். அதனால் தான் சூத்திரர்கள், பஞ்சமர்கள் என்போர் தம்மை வேளாளர், சத்திரியர், வைசியர், இந்திரர் என்றெல்லாம் உயர் குடியாக்கம் செய்து கொள்ளும் முயற்சியைக் கடுமையாக எதிர்த்தார். இது சாதிய மேல் - கீழ் வரிசையை ஒப்புக்கொள்ளும் செயலாகுமேயன்றி அவர்களால் ஒருபோதும் எட்டிப்பிடிக்க முடியாத உச்சாணிக் கொம்புக்கு ஏற்றிச் செல்லக் கூடியதாக அமையாது என்றார்.

நாட்டில் பார்ப்பனியத்தின் மீதுள்ள வெறுப்பு பார்ப்பனர்கள் மீது திரும்புவதை அவர்கள் (பார்ப்பனர்கள்) அறிவதில்லை என்று கூறிய பெரியார் அரசியல், பொருளியல், பண்பாடு, சமுதாயம் முதலிய துறைகளில் அவர்களுக்குள்ள ஆதிக்கத்தைத் தொடர்ந்து ஆதாரபூர்வமாக எடுத்துரைத்து வந்தார். எந்தக் காரியம் எப்படி இருந்தாலும் அரசியலில் பொது வாழ்கையில் கண்டிப்



எஸ்.வி.ராஜதுரை

பாக மனித தர்மம் தவிர வேறு எந்த கால தர்மமோ சமய தர்மமோ புகுத்தப்படக்கூடாது என்பதுதான் என் ஆசையே ஒழிய உலகத்தில் உள்ள மக்கள் எல்லாம் என் இஷ்டம் போல் தான் நடக்க வேண்டும் என்பதல்ல என்றார். பிறவியிலேயே மேன்மையானவர்கள் என்பவர்கள் தங்கள் சமூக அணுகுமறையை மாற்றிக் கொள்வதில் முன்னுதாரணமாக விளங்குவார்களேயானால் பேதங்கள் நீங்கப் பெறுதல் எளிதாகும் என்றார். எந்த ஒரு தனிமனிதர் மீதும் கசப்புணர்ச்சியைக் காட்டாதவர் அவர்.

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்னை மாநகராட்சி மேயர் பதவி

## சந்திரலேகாவுக்கு ஜெயலலிதா ஆதரவை வரவேற்கிறார் வை.கோபால்சாமி

சென்னை மாநகராட்சி தேர்தலில் ஜனதா கட்சி சார்பில் போட்டியிடும் சந்திரலேகாவை அ.தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா ஆதரிப்பதில் தவறில்லை என வை.கோபால்சாமி தெரிவித்துள்ளார்.



அவசர நிலை காலத்தில் சிட்டிபாபு, சாத்தூர் பாலகிருஷ்ணன் சிறைக் கொடுமைக்கு ஆளாகி இருந்தனர். அதன் பின்னர் சில ஆண்டுகளில் அவசர நிலையைக் கொண்டுவந்த இந்திரா காந்தியுடன் தி.மு.க கூட்டணி அமைத்துக் கொண்டது. அதுபோன்று இப்போது ஜெயலலிதா திடீரென்று சந்திரலேகாவுக்கு ஆதரவு தர முன் வந்துள்ளார்.

கருணாநிதி குடும்ப ஆட்சியை எதிர்ப்பதற்காக இம் முடிவை எடுத்துள்ளதாக கூறுகிறார். அது அவருடைய நிலைப்பாடு. நான் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கருணாநிதி பற்றிக் கூறிய குற்றச் சாட்டு இன்னும் நீடிக்கிறது. அதை மற்ற கட்சிகளும் இப்போது கூறத் துவங்கியுள்ளன.

ஜெயலலிதா, பா.ம.க ஆதரிக்கின்ற நிலையில் எங்கள் கட்சியும் சந்திரலேகாவை ஆதரிக்கும் முடிவை எடுத்திருக்கலாம். ஆனால் அத்தகைய கண்மூடித்தனமான முடிவை நாங்கள் எடுக்கவில்லை. எங்களுக்கு எதிராக இத்தகைய ஒரு சந்தர்ப்பம் என்றால் கருணாநிதி அதைப் பயன்படுத்திக் கொண்டிருப்பார்.

ஜெயலலிதாவுக்கும் எங்களுக்கும் இரகசிய உடன்பாடு என்ற புகாரை கருணாநிதி கூறி வந்தார். அத்தகைய பிரசாரம், புகாரில் துளியளவு கூட உண்மையில்லை என்பது நிரூபணமாகியுள்ளது. எங்கள் வேட்பாளர் எஸ்.எஸ். சந்திரனை நாங்கள் போட்டியிலிருந்து விலக்கவில்லை.

உள்ளூராட்சித் தேர்தலில் மார்க்சிஸ்ட் கட்சியுடன் உடன்பாடு ஏற்பட்டுள்ளது. சில தொகுதிகளில் யார் போட்டியிடுவது என்று இன்னும் முடிவாகவில்லை. ஒரு சில தினங்களில் பேச்சுவார்த்தை நடத்தி இப் பிரச்சினை தீர்க்கப்படும்.

தேர்தலில் எங்கள் கட்சி பல இடங்களில் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை உள்ளது. பொதுத் தேர்தலில் ஜெயலலிதா எதிர்ப்பு என்ற ஒரே பிரச்சினை இருந்ததால் கருணாநிதி ஆதரவைத் தட்டிச் சென்றுவிட்டார். இப்போதும் அதே வெற்றி கிடைக்கும் எனத் தப்புக் கணக்குப் போட்டுள்ளார்.

கண்ணந்தன்குடி ஊராட்சியில் எல். கணேசனும், உப்பார்பட்டி ஊராட்சியில் பொன்னுப்பிள்ளையும், கலிங்கப்பட்டியில் என்னுடைய தம்பி வை.ரவிச்சந்திரனும் போட்டியின்றி வெற்றி பெற்றுள்ளனர்.

கூட்டுறவுத் தேர்தலில் தி.மு.க. வினர் நடத்திவரும் தில்லுமுல்லு அராஜகத்தையும் மீறி நாங்கள் நல்ல வெற்றியைப் பெற்று வருகிறோம் என்றும் வை.கோபால்சாமி தெரிவித்துள்ளார்.

# சந்திரலேகாவுக்கு பா.ம.க.வும் ஆதரவு - ராமதாஸ் அறிவிப்பு !

சென்னை மாநகராட்சி மேயர் பதவிக்கு போட்டியிடும் ஜனதா கட்சி வேட்பாளர் சந்திரலேகாவுக்கு தமது கட்சி ஆதரவு வழங்கும் என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ்.ராமதாஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் பத்திரிகையாளரிடம் தெரிவிக்கையில்,

உள்ளூராட்சித் தேர்தல் முடிந்ததும் இட ஒதுக்கீடு பிரச்சினையில் ஒருமித்த கருத்துடைய இயக்கங்கள் கட்சிகளின் துணையோடு ஒரு போராட்டம் நடத்த மக்களை நான் தயார் செய்வேன்.

காவிரிநதிநீர் பங்கீடு குறித்து கலைஞரும், கர்நாடக முதல்வரும் இரண்டு முறை சந்தித்துப் பேசிக் கொண்டனர். ஆனால் பேச்சுவார்த்தை குறித்து கலைஞர் இதுவரை வெளியே சொல்லவில்லை.

மக்களுக்குத் தெரியாமல் இதில் இரகசியமாக பேசக் கூடிய விஷயம் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே பேச்சு வார்த்தையில் இரு மாநில முதல்வர்களும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பதை தெளிவு படுத்தி கலைஞர் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.



ராமர்பிள்ளை என்ற விஞ்ஞானி மூலிகைகளில் இருந்து எரிபொருள் தயாரித்து உள்ளார். அந்த இளம் விஞ்ஞானிக்கு தமிழக அரசு பாதுகாப்பு அளிக்கத் தவறிவிட்ட்து. அவரது விஞ்ஞான கூடம் எரிக்கப்பட்டதாக செய்திகள் வந்துள்ளன.

சந்திரலேகா என்னுடன் தொடர்பு கொண்டு பா.ம.க அவரை ஆதரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க எங்களது கட்சி வேட்பாளரை வாபஸ் பெறச் செய்திருக்கிறோம் என ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

உங்களது கொள்கைக்கும் சுப்பிரமணியசாமியின் கொள்கைக்கும் முரண்பாடுகள் ஏராளமாக உள்ளன. அப்படி இருந்தும் சந்திரலேகாவுக்கு ஆதரவு அளிக்க ஒப்புக் கொண்டது எப்படி? என பத்திரிகையாளர் கேட்டதற்கு,

இட ஒதுக்கீடு கொள்கை, ஒரு மொழி கொள்கை, மனித உரிமைக் கொள்கை, தமிழீழ ஆதரவு ஆகியவற்றில் நாங்கள் யாருடனும் சமரசம் செய்து கொள்ளவில்லை என்று ராமதாஸ் பதிலளித்துள்ளார்.

# சுப்பிரமணியசாமி ஜெயலலிதா கூட்டுக்கு கோவை செழியன் கண்டனம்

சென்னை மாநகராட்சித் தேர்தலில் ஜனதா - காங்கிரஸ் கூட்டணி மேஜர் வேட்பாளர் சந்திரலேகாவிற்கு, அ.தி.மு.க ஆதரவு வழங்குவதாக ஜெயலலிதா அறிக்கை விட்டது தொடர்பாக தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் கோவை செழியன் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் தனது அறிக்கையில்,

இந்திய அரசியலிலும், குறிப்பாக தமிழகத்தில் முதல்வர் கலைஞர் தலைமையில் தமிழகத்தில் நல்ல திறமையான தூய்மையான நிர்வாகம் நடந்து வருவது பாரட்டக்கூடியதும், மக்கள் பீதியின்றி வாழவும் முடிகின்றது. இந்த ஆட்சியைப் பாதுகாப்பது ஒவ்வொரு தமிழனது கடமையாகும். தவறு செய்தவர்களை ஆதாரத்துடன் கண்டுபிடித்து காராகிரகத்திற்கு அனுப்பி வைப்பது ஒன்றே ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இப்போது இறந்து விட்டது என்று நினைத்திருந்த விஷநாகம் மெல்ல எழுந்து நடமாட நினைக்கின்றது. மக்களை ஏமாற்ற மன்னிப்பும், மன்னிப்பு வார்த்தைகளும் வருத்தம் தெரிவிக்கும் அறிக்கைகளும் தினசரி விட்ட வண்ணம் உள்ளனர். இதை மக்கள் நம்பி மதிமோசம் போகக் கூடாது. இப்போது நல்லவர்கள் போல் நடித்து சில நாசகாரர்கள் இதுவரை ஆடிய நாடகங்களின் உண்மை சொரூபம் தெரிகின்றது.

இதுவரை வழக்கு வல்லடிகள் என்று தத்துவம் பேசிய சுப்பிரமணியசாமிகளின் கடந்த காலத்தை மறந்துவிட்டு இன்று அவர்களுடன் கூட்டு சேர்வது தேசத்துரோகம். யார் நல்லவர்கள் என்றே புரியவில்லை. இனியும் ஒரு இடி அமீன் ஆட்சி வராமல் இருக்க, நடக்க இருக்கின்ற உள்ளூராட்சித் தேர்தலில் த.மா.க - தி.மு.க கூட்டணியின் வெற்றிக்கு அனைவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுள்ளார்.

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரது கடவுள் - புரா - சாஸ்திர - மத எதிர்ப்பு என்பது சாதி எதிர்ப்புக் கோட்பாட்டின் நீட்சிதான். சாதியமைப்பை நியாயப்படுத்த உதவுகின்றன என்ற அளவிலும், சாதியமைப்பை நியாயப்படுத்தும் சமூக, பொருளாதார, பண்பாட்டு அரசியல் வாழ்க்கையிலும் ஆண் - பெண் உறவிலும் புகுந்து விடுகின்றன என்ற அளவிலும் அவற்றை அவர் எதிர்த்தார். ஆயினும் சாதிக்கும் சமூக அநீதிகளுக்குமெதிரான போராட்டங்களில் மறைமலையடிகள், சோமசுந்தர பாரதியார், திரு வி.க., குன்றக்குடி அடிகளார் போன்ற இறைநம்பிக்கையாளர்களுடன் இணைவதில் அவர் தயக்கம் காட்டியதில்லை.

பெரியார் வெறும் எதிர்மறை விமர்சகரல்லர். ஒரு மாற்றுச் சமூகம், மாற்று சமுதாய அமைப்பு பற்றிய ஓர் உலகப் பார்வை அவரிடமும், சுயமரியாதை இயக்கத்திடமும் இருந்தது. ஐரோப்பிய அறிவொளி மரபு, கமால்பாட்சாவின் துருக்கியிலும், சன்யாட் ஸென்னின் சீனத்திலும் சிவப்பு ரஷ்யாவிலும் பெண்களுக்கு ஏற்பட்ட முன்னேற்றங்கள், ரஸ்ஸல், பெர்னாட்ஷா, இங்கார்சால், பிரால்டா, எச்.ஜி.வெல்ஸ், பொக்காஷியோ போன்றோரின் மனித நேயக் கருத்துக்கள். மார்க்சிய சோசலிசம், பௌத்தம் அயோத்திதாசர், மாசிலாமணியார் ஆகியோரின் எழுத்துக்கள், ஸாரா பாங்க்ரெஸ்ட் போன்ற சமகாலப் பெண்ணிலைவாதிகள் கருத்துக்கள் முதலியவற்றை இந்திய / தமிழகச் சூழலுக்கேற்ற வகையில் சாதி ஒழிப்பு, ஆணாதிக்க எதிர்ப்பு, பணக்காரனீய எதிர்ப்பு ஊடகங்கள் வழியாக உள்வாங்கி உருவாக்கிக் கொண்ட உலக பார்வைதான் அது.

முதுகெலும்புடைக்கும் உடலுழைப்பிலேயே உழலுமாறு தண்டிக்கப் பட்டிருந்த சூத்திரர்களையும், பஞ்சமர்களையும் விடுதலை செய்யும் கருவிகள் என்ற அளவிலேயே நவீன விஞ்ஞானத்தையும், தொழிலையும் பெரியார் வரவேற்றார். கிராம தொழில்கள், கிராமிய வாழ்க்கை என்ற ரொமாண்டிக் பார்வையிலிருந்த வருண தர்மத்தை அம்பலப்படுத்தினார். உடலுழைப்பைச் செய்பவர்களைப் பெரியார் பெரிதும் மதித்தது போலவே. பெண்கள் மீதான ஆழமான அடிப்படையான அக்கறைகள் கொண்டிருந்தார்.

சாதிகளற்ற ஆண் பெண் ஏற்றத்தாழ்வற்ற பொருளாதார சமத்துவம் நிலவுகிற ஒரு சமுதாயத்தையே ஒரு மாற்றாக அவர் முன்வைத்தார்.

சாதிகள் இருக்கும்வரை இட ஒதுக்கீடு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தேவை என்று கருதினாரே அன்றி அவற்றையே முழுமையான சமூகநீதி என்று கருதவில்லை. சாதி ஒடுக்குமுறைக்கும், பொருளாதார ஒடுக்குமுறைக்கும் இடையிலான உறவைப் புரிந்துகொண்டிருந்த பெரியார், சாதி ஒழிப்பையும், அதற்கு முந்திய நிலையான சாதிகளிடையே சமத்துவத்தையும் நடைமுறைப்படுத்த எந்த ஒரு அரசியல் / சமூக இயக்கமும் முன்வராததால் சாதி ஒழிப்பு, சாதிக்குத் துணை போகும் கடவுள், மத, புராண, சாஸ்திர, தேசிய எதிர்ப்பு என்பதையே தனது முதன்மையான வரலாற்றுக் கடமையாகக் கருதிச் செயல்பட்டார். அவரது ஒட்டு மொத்தமான சுயமரியாதைப் பார்வையைப் புறக்கணித்து இட ஒதுக்கீடு என்பதை மட்டும் பேசுகிறவர்கள். பெரியாரின் முதுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு முதலாளிய அநீதியையும் உலகமயமாதலையும் ஆதரிக்கின்றனர். 1920 களிலேயே ஆணாதிக்கத்திற்கு எதிராக கர்ச்சித்தவர் பெரியார். கொடியிடையாள், மெல்லியலாள் என்ற சங்ககால வர்ணனைகளையும் பெண் பொலிசார் தலைமுடியில் ரோஜாப் பூ வைத்துப் பார்க்க விரும்பும் சட்டமன்ற உறுப்பினர்களையும் துடைப்பக் கட்டை என்று கூறியிருப்பார். தமிழ் மொழியையும், தமிழ்ச் சிந்தனையையும் சுயமரியாதை இயக்கத்தின் மூலம் நவீனப் படுத்தி முன்னோக்கிச் செலுத்திய பெரியார் மீட்பு வாதத்திற்கு எதிரானவர். கிண்டலும் கேலியும் நிறைந்த பெரியாரின் சொல்லாடல்கள் பல சமயங்களில் அதிதீவிர, மிகைக் கூற்றுக்களைக் கொண்டிருந்தன. அவற்றைக் கண்டு திகைக்காமல், மிரளாமல் அல்லது அவற்றை எழுத்துக்கெழுத்து அப்படியே பொருள்படுத்திக் கொள்ளாமல் அவற்றின் சாரத்தைப் புரிந்து கொள்ள வேண்டும்.

பெரியாரின் வாரிசுகள் யார் என்ற கேள்வி எழுகிறது. தலித் விடுதலை, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, பொருளாதார சமத்துவம் ஆகியவற்றை விரும்புகிறவர்கள், அவற்றுக்காகப் பாடுபடுகிறவர்கள் எல்லோருமே அவரது வாரிசுகள்தாம். கருத்துக்களுமே ஒருவகைப் பயணிகள் தாம். அதனால்தான் வடநாட்டு மக்களை எதிர்த்தவராக சிலரால் கொச்சைப்படுத்தப்படும் பெரியார் வடநாட்டு தாழ்த்தப்பட்ட ஏழை மக்களால் இன்று வரவேற்கப்படுகிறார். பெரியாரை மேலோட்டமாகப் படித்த சில அண்டை மாநில அறிவாளிகள் ஆதிக்கச் சக்திகளைத் திருப்திப்படுத்தவும் அங்கீகாரம் பெறவும் அவரைச் சிதைத்துக் கூறத் தொடங்கியுள்ள இந்த நாட்களில், பெரியார் பற்றிய ஆழமான முழுமையான விரிவான படிப்பும் ஆய்வும் அனைத்திந்திய அளவில் தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரத்தியடிக்கப்பட்டு வரும் தமிழிசைக் கருவிகள்

இயல், இசை, நாடக முத்தமிழ் கலைகளான பண்பாட்டு அழகியல் கலைகளில் உழைக்கும் மக்களின் வாழ்வியலில் ஏதேனும் ஒரு கலை அக்காலத்திலிருந்தே தமிழக மக்களோடு ஒன்றித்து சமுதாயத்தில் மகத்துவப்பட்டுள்ளது.

இம் மண்ணை வளமாக்கி அழகாக்கி பண்படுத்தி தங்கள் வாழ்நாளை காலத்தின் வசந்தத்தினூடாக கடந்து கொண்டிருக்கும், மண்ணின் மக்களின் இசை என்பதே மிக உயர்ந்ததும் உன்னதமான கலையுணர்வை உலகிற்கு எடுத்துக் காட்டும் கலங்கரையாகின்றது.

இன்றைய தமிழ் சூழலில் மேற்கத்திய மேனாட்டு இசைகளில் தமிழனின் செவியடைத்து விழிகளே பிதுங்கும் அளவிற்கு மண்ணின் மக்களின் கலையமுகை விழுங்கி ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கும் சிக்கு, பிக்கு, டக்குபிக்கு பாடல்களோடு கூடிய பாப், ராப், ராக் என மேனி மிகைக்கும் குலுக்கல், மினுக்கல், துள்ளல், வெறியல் இசைச் சத்தங்கள் மந்தமாக்கி கலாச்சார பண்பாடுகளுக்கு குழிவெட்டிக்கொண்டிருக்கிறது.

நமது முன்னோர்கள் இசை ஒலிகளின் நுட்பங்களில் பல ஆராய்ச்சிகள் செய்து நமக்களித்துச் சென்ற இசைச் செல்வங்களில் எண்ணிறைந்த இசைக் கருவிகளும் அடங்கும். இத்தனை புகழ்வாய்ந்த தமிழ்நாட்டு இசைக் கருவிகளைப்பற்றி வரலாற்றினூடாக பி.கோதாண்டராமன் வெளியிட்டுள்ள உண்மைகள் போற்றுதற்குரியன. தமிழர்களின் இசைக் கருவிகளான குழல் நாகசுரம், ஒத்து, முகவீணை, மகுடி, தாரை திருச்சின்னம் கர்ணா, கொம்பு, சங்கு, கஞ்சக்கருவிகள், கண்டாமணி, கொத்துமணி, கொத்து வாத்தியம், கடம், கைச்சிலம்பு, மோர்சிங்கு, ஆர்மோனியம், ஜலதரங்கம் போன்றவை மக்களின் இசைஞானத்துடன் உருவாக்கப்பட்டு பயன் படுத்தப்பட்ட இசைக் கருவிகள்.

## குழல்

நமது பண்டை தமிழ் இலக்கியங்கள் மிகவும் சிறப்பித்துக் கூறும் இசைக் கருவிகளுள் குழலே முதன்மையாக நிற்பது. குழல் மிகப்பழமையான காலந்தொட்டு வழக்கில் இருந்துவருகிறது. கானகத்தில் வளரும் மூங்கிலில், வண்டுகள் துளைத்த துளைகளுள் காற்று ஒன்றில் புகுந்து மற்றொன்றில் புறப்படும் பொழுது இயல்பாக உண்டாகும் இன்னிசையைக் கேட்டே, நமது முன்னோர்கள் வேய்ங்குழல் அல்லது புல்லாங்குழல் எனப் பெயர் பெற்ற மூங்கிலினால் செய்யப்பட்ட நல்லிசைக் கருவியை முதன் முதலாக அமைத்துக் கொண்டனர் எனக் கூறுவர்.

வேங்குழலோடு இன்னும் பலவகைக் குழல்கள் பண்டைத் தமிழர்களிடையே புழங்கி வந்தனவெனச் சிலப்பதிகார உரையிலிருந்து தெரிய வருகிறது. உதாரணமாக, கொன்றைப் பழத்தைத் துருவிச் செய்யப்பட்ட குழல் கொன்றைக்குழல் என்றும், முல்லைக் கொடியால் அமைத்த வளையத்தை வாயினிடத்தே செறிந்த இசைக்குழல் முல்லைக் குழல் என்றும், ஆம்பற் பூவைப்போல வெண்கலத்தால் அணைசு செய்து விளிம்பிற் சேர்க்கப் பெற்ற இசைக்குழல் ஆம்பற் குழல் என்றும் பெயர் பெற்று விளங்கின. சந்தனம், செங்காலி, கருங்காலி மரங்களில் செய்யப்பட்ட குழல் வேறு இருந்தன.

குழல் ஏழு சுரங்களையும் உண்டாக்குவதற்குரிய ஏழு துணைகளை உடையதாயும் சுமார் இருபது விரல் நீளமும் நாலரை விரல் சுற்றளவும் கொண்டதாயும் இருக்கும்.

## ஒத்து



இது மேள வாத்தியங்களுள் ஒன்று. இதற்குச் சுரம் வாசிக்கும் துளைகள் இல்லை. சுருதிக்காக மட்டுமே ஊதப்படுவது.

## முகவீணை

இது நாகசுரத்தைப் போன்றதொரு கருவி.

## நாகசுரம்

தமிழர் கோயில்களிலும் திருவிழாக்களிலும், சமூக, சமய சடங்குகளிலும் வாசிக்கப்படும் மேளவாத்தியங்களுள் நாகசுரம் ஒரு தனிச் சிறப்புடன் விளங்குகிறது. அது நாகசுரம், நாதசுரம் நாக சின்னம், நாயனம் என்னும் பெயர்களுடன் வழங்குகிறது. இந்தியாவின் தென்மாநிலங்களில் பெரிதும் வழங்கும் பெயரான நாகசின்னம், நாசின்னம்




என்றும், நாயனம் என்றும் மருவுகிறது. நாகபாம்பை மகிழ்விக்கும் சுரங்களை எழுப்புவதால் இக் கருவிக்கு நாகசுரம் என்னும் பெயர் வந்ததென்பர். இது மகுடியைப் போலல்லாமல் சின்னத்தின் இனமாயும் ஏழு சுரங்களையுடைய குழல் பொருந்தியதாயும், நாகபாம்பின் உருவத்தோடு அமைந்திருப்பதால் நாகசின்னம் என்னும் பெயர்.

இதற்கு இசைக்குரிய எழு துளைகளும், பிரம்ம சுரம் என்னும் ஐந்து வெற்றுத்துளைகளும் உண்டு. இதை வாயில் வைத்து வாசிப்பதற்கு இன்றியமையாத பொருளாகிய நாக்கு, நொறுக்கு எனப்படுகிறது. சில நாயனக்காரர்கள் இதை சீவாளி என்றும் கூறுவர். இது கொள்ளிடம் காவேரிப் படுகைகளில் விளையும் நொறுக்கை நாணல் தட்டால் செய்யப்படுகிறது. நாகசுரத்தில் அடிப்பாகம் அனுசம் எனப்படுவது, இசைக் கருவியின் உடல் திருவாவடு துறையில் ஆச்சா மரத்தில் கடைந்தெடுக்கப்படுகிறதென்று தெரிகிறது.

## மகுடி

இது பாம்பாட்டியின் ஊது குழல். இக் கருவியை ஊதியே பாம்பாட்டிகள் பாம்பைப் புற்றிலிருந்து வெளியேவரும்படி செய்து பிடிப்பர். இதைக் கழைக்




கூத்தர்களும், தொம்பன் கூத்தர்களும் தம் ஆட்டங்களில் ஊதுவர். இது சாதாரணமாக, சுரைக் குடுக்கையில் மேலும் கீழும் சிறு வேய்ங்குழல்களைப் பொருத்தியமைக்கப் படுவது.

## தாரை, திருச்சின்னம், கர்ணா

இவை பித்தளையால் செய்யப்பட்ட நீண்ட ஊதுகுழல்கள். தாரை நீண்டிருக்கும். கர்ணா அடிப்பாகத்தில் அகன்ற வாயை உடையதாக இருக்கும். திருச்சின்னம் ஜோடியாகச் சேர்த்து ஊதப்படும் குழல். இம் மூன்று வாத்தியங்களும் கோயில்களில் பூசை காலங்களிலும், திருவிழாக்களிலும் ஊதப் படுவன. மன்னர், மடாதிபதிகளின் விருதுகளாகவும் விளங்குவன.

## கொம்பு

இக் கருவி வடிவுக்குத் தக்கபடி ஊதுகொம்பு, எக்காளம், சிங்கநாதம், துத்தரி, நவுரி எனத் தனிப்பெயர் பெறுகின்றது. விலங்கின கொம்பால் செய்யப்பட்ட கொம்பை எக்காளம் என்பர். இதை வேட்டுவர் தம்வேட்டையில் ஊதுவர். அறுவடைக் காலத்தில் கழனி மேடுகளில் காவல் புரிவோர் ஓநாய்களையும், கள்ளர்களையும் விரட்டவும் மற்ற காவற்காரர்கள் விழித்திருக்கவும் இதை ஊதுவர். நீண்ட எக்காள வகையை நவுரி என்பர். அரண்மனைக் காப்பாளர்களும், காவல் படையினரும் மாலையிலும், இரவில் குறித்த



நேரங்களிலும் ஒருவித ஊதுகுழலை ஊதுவர். பித்தளை அல்லது வெண்கலத்தால் செய்யப்பட்ட நீண்டு வளைந்துள்ள ஒருவித ஊதுகொம்பு உற்சவ காலங்களிலும், ஊர்வலங்களிலும் வாசிக்கப்படுகிறது.

## சங்கு

இது கோயில் பூசை காலங்களிலும், திருவிழாக்களிலும், சமயச் சடங்குகள், சவ ஊர்வலம் முதலியனவற்றின் போதும் முழங்கப்படும் ஓர் இயற்கைக் கருவி. வலமாகச் சுழிந்துள்ள சங்கு வகைக்கு வலம்புரிச் சங்கு என்று பெயர். சங்கின் ஒலியை சங்க நாதம் என்பர்.

- வி. வின் -


## கஞ்சக்கருவி

ஒன்றோடொன்று தட்டியடிக்கும் வாத்தியங்களை கண வாத்தியங்கள் அல்லது கஞ்சக்கருவிகள் என்பர். நாளம், சாலரா, சப்பளாக் கட்டை ஆகியவற்றையும், சேகண்டி, கண்டாமணி, கிங்கிணி முதலியவற்றையும் இவ் வகுப்பில் சேர்க்கலாம்.

தாளம் என்பது மேள வாத்தியத்துடன் வாசிக்கப்படுவதொன்று. வட்ட வடிவமானது. வெண்கலத்தாலானது. ஜதையாக உபயோகப்படுத்தப்படுவது.



சாலரா என்பது நாளத்தைப் போன்றதே. ஆனால் அதன் புறம் குவிந்திருக்கும் அது பஜனையிலும் கலாட்சேபங்களிலும் இசை அரங்குகளிலும் இன்றியமையாமல் காணப்படும் ஓர் தாளக் கருவியாகும். ஒன்றோடொன்று பொருந்தியும், விளிம்பின் மீது தட்டியும் தாளத்தின் தேவைக்குத் தக்கபடி இன்னிசை எழுப்புவர்.



சப்பளாக்கட்டை என்பது இசையுடன் சங்கீர்த்தனம் செய்வோரின் கையில் எப்போதும் காணப்படும் ஒருவிதத் தாளக் கட்டை. அதில் சதங்கைகள் பொருத்தப்பட்டிருக்கும்.

## கண்டாமணி, கொத்துமணி

இவற்றைக் கோயில்களிலும் மடாலயங்களிலும் காணலாம். வழிபடுவோரின் உள்ளத்தில் பக்திக் கிளர்ச்சியை ஏழுப்ப இவற்றைப் பூசை காலங்களில் அடிப்பர்.

சேகண்டி என்பது ஒரு கோலாலோ, இரும்புத்துண்டாலோ அடிக்கப்படும் வட்ட வடிவமான ஒரு மணிவகை. இதை சேமக்கலம் என்றும் கூறுவர். இது தேவைக்குத் தக்கபடி பல அளவில் உள்ளது. இதுவும் கோயில்களிலும், மடாலயங்களிலும் அடிக்கப்படும். இதை பிரேத ஊர்வலத்தின் போதும் அடித்துச் செல்வர். பொது இடங்களில் நாழியைக் குறிக்க அடிக்கப் படுவதுண்டு. பிச்சைக் காரர்கள் சிறு சேகண்டிகளை அடித்துப் பாடிச் செல்வர்.

## கொத்து வாத்தியம்

இது இன்னிசை தரும் பக்க வாத்தியங்களுள் ஒன்று. இதிலிருந்து கோழியின் கொக்கரிப்பைப் போன்ற ஒலிகள் எழும்.

## கடம்

இது தாள வாத்தியங்களுள் ஒன்று. இது இனிய ஒலி தரும் ஓர் மட்குடமே. இதை விரல் நுனியாலும் உள்ளங் கையா




லும் மெல்ல அடிப்பர். மிருதங்கத்தைப் போல இதுவும் இசை அரங்குகளில் ஓர் இன்றியமையாத பக்கவாத்தியமாக விளங்குகின்றது.

## கைச் சிலம்பு

இதை பூசாரிகள் பேயாட்டும் போதும், மாரியம்மனுக்குப் பூசை செய்யும் போதும், தங்கள் மீதோ, மற்றவர்கள் மீதோ சாமியை ஆவேசிக்கச் செய்யும் போதும், கையில்பிடித்துக் குலுக்கியும் அசைத்தும் ஆடுவர். இது அகலத்தைப் பார்க்கிலும் நீளம் அதிகமான ஒரு போல் வளையம். சிறு கூழாங்கற்கள் அடங்கியது. ஜதையாக உபயோகப்படுத்தப்படுவது. இத்துடன் பம்பையும் உடுக்கையும் சேர்ந்தாற் போல வாசித்து ஒலிகளை எழுப்புவர்.


## மோர்சிங்கு



இதைத் தந்தி வாத்தியங்களில் ஒன்று எனச் சொல்லலாம். வளைந்த பகுதியை வலது கையில் பிடித்துக் கொண்டு, நீட்டிக் கொண்டிருக்கும் பகுதியை உதடுகளிடையே பொருத்தி நடுத் தந்தியின் நுனியை ஆட்காட்டி விரலால் வாசிக்கப் படுவது. இதுவும் கச்சேரிகளில் ஒரு பக்க வாத்தியமாக உபயோகப்படுத்தப் படுகிறது.

## ஆர்மோனியம்

ஆங்கில மொழியில் ரீட் என்று சொல்லப்படும் வாத்திய வகைகளுள் ஒன்று ஆஸ்டிரியவிலிருந்து வந்தது. இதை ஐரோப்பாவில் பிச்சைக்காரர்களே பெரும்பாலும் வாசிப்பர். இத மேலை நாட்டு வாத்தியக் குழுவில் இடம் பெறுவதில்லை. இந் நாட்டில் சிறுவர் சிறுமியர் எளிதில் சங்கீதம் கற்றுக் கொள்ளுவதற்கு ஏற்றதாகக் கருதப்பட்டு பயிலப்படுகின்றது. நாடக மேடையிலும், பஜனை கோஷ்டியிலும் தவறாமல் காணப்படுவது. ஆயினும் இசையின் நுண்மையை உணர்ந்தவர்கள் இதி



லிருந்து வரும் ஒலியைச் சகிக்க மாட்டார்கள். அவர்கள் இதை இசையல்ல இரைச்சலே என இகழ்வர். இக் கருவியானது இசைஞானம், சுருதி, கமகம் குழைவுகளை மறைத்து தமிழிசை இசையைக் குலைக்கிறது.

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்த்துக்கேயர் ஆட்சியின் இறுதிக்காலம்




36

அத்தப் பத்து முதலியாரின் தலைமையில் வந்த சிங்களப் படையினர் முதலில் பச்சிலைப் பள்ளியில் இருந்த கிருத்தவத் தேவாலயத்தை அழித்து அந்தத் தேவாலயக் குருவையும் வெட்டிக் கொன்றனர்.

அதன் பின் செல்லும் வழியில் இருந்த ஏனைய கிருத்தவக் கோயில்களையும் அழித்தவாறு யாழ்ப்பாணத்தை அடைந்தனர். அங்கும் யாழ்ப்பாண நகரத்தைச் சுற்றியிருந்த பல கோயில்களை தீக்கிரையிட்டனர். அப்போது யாழ்ப்பாணத்திலிருந்த போர்த்துக்கேயப் படைகளின் எண்ணிக்கையை விட சிங்களப் படைகளின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததாலும் யாழ்ப்பாணப் பிரதானிகளுக்குள்ளேயே அவர்களுக்கு எதிர்ப்பு இருந்ததாலும் போர்த்துக் கேயர்கள் வெளியில் வந்த சிங்களப்படைகளுடன் நேருக்கு நேர் சண்டை செய்யாமல் கோட்டைக்குள் பதுங்கிக் கொண்டு அவர்கள் மீது பீரங்கித் தாக்குதலை நடத்தினார்கள்.

சிங்களப்படையினர் தொடர்ந்து 13 நாட்களாக யாழ்ப்பாணக் கோட்டையை முற்றுகையிட்டு தாக்குதல் நடத்தினர். இதற்கிடையில் கண்டியிலிருந்து சிங்களப்படை யாழ்ப்பாணம் சென்ற செய்தியறிந்து போர்த்துக்கேயரின் கொழும்புத் தேசாதிபதி, அங்கிருந்து 7000 சிங்களவர்களைக் கொண்ட லாஸ் கொறீன்சும் என்ற படைப்பிரிவையும் தொமிங்கு கார்வலோ (Domingos Corvallo) என்பவனின் தலைமையிலான 700 போர்த்துக்கேயர்களைக் கொண்ட படையையும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைத்தான். அந்தப்படையினர் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேர்ந்ததும் கோட்டையை முற்றுகையிட்டிருந்த கண்டிய சிங்களப் படையை சுற்றிவளைத்தனர். கோட்டைக்குள்ளிருந்தும், கோட்டைக்கு வெளியிலிருந்தும் போர்த்துக்கேயப் படைகள் தாக்குதல் தொடுத்ததால் கண்டிய சிங்களப்படை நிலைகுலைந்தது. இறுதியில் அந்தப் படைக்கு தலைமை தாங்கிவந்த அத்தப்பத்து முதலியார் உட்பட அனைவரும் கைது செய்யப் பட்டனர்.

> **போர்த்துக் கேயர்கள், தீவிர சமயவெறி கொண்டவர்களாகவும், தங்களது சமயத்தைப் பரப்புவதற்காக மற்ற சமயங்களையும், அவற்றைக் காப்பாற்றிவந்த அரசுகளையும் தயவு தாட்சணியமின்றி அழித்தொழிப்பதில் அதிக அக்கறை காட்டியதால் பின்னால்வந்த காலனிய ஆட்சியாளர்கள்போல் பொருளீட்டுவதில் மட்டும் குறியாக இருக்கவில்லை.**

இவ்வாறு கைது செய்யப் பட்டவர்களில் அத்தப்பத்து முதலியாருக்கும் அவரது படைத் தலைவர்களுக்கும் மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ஏனையோர் அடிமைகளாக விலைபேசி விற்கப்பட்டனர்.

இந்தச் சண்டை முடிவடைந்தபின் அதாவது கி.பி 1629-ல் இருந்து ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய கி.பி 1658 வரை குறிப்பிட்டுச் சொல்லும்படியாக போர்த்துக்கேயருக்கு எதிரான பெரிய யுத்தம் எதுவும் நடைபெறவில்லை.

கி.பி 1623-ல் அதாவது ஒலிவேரா உயிரோடு இருந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள காணிகள் பற்றிய விபரம் அடங்கிய காணித் தோம்பு முதன் முதலாக ஏழுதப்பட்டது. பனை ஓலை ஏட்டில் எழுதப்பட்ட இத் தோம்பு அந்தத் தொழிலை மேற்கொண்ட அலுவலரின் கவனக்குறைவாலும், அனுபவக் குறைவாலும் பூரணமானதாக இருக்கவில்லை.

இதனால் கி.பி 1645ல் மீண்டும் திருத்திய தோம்பு [illegible] எழுதப்பட்டது. இத் தோம்பில் ஊர் ஊராகப் பிரித்து யாழ்ப்பாணக்குடாநாட்டில் உள்ள காணிகளின் விபரமும் அவற்றின் உரிமையாளரின் விபரமும் அவற்றின் பரப்பளவும் அரசுக்கு வரவேண்டிய வரிகளும் குறிப்பிடப்பட்டதோடு, அக் காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்த சாதிகளும், அச் சாதிகள் அரச பிரதானிகளுக்கும், தங்களுக்கு மேலுள்ள சாதிகளுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும், செலுத்த வேண்டிய வரிகளும் பற்றிய விபரங்களும் விரிவாக எழுதப்பட்டன.

தமிழரசர் காலத்தில் இருந்த தேசவழமை சட்டப்படியே போர்த்துக்கேயரும், நீதி செலுத்தி வந்தார்கள். தமிழரசர் காலத்தில் பெற்றோரின் சொத்துக்கள் ஆண் பிள்ளைகளுக்கே சேரும். பெண்களுக்கு சீதனம் மாத்திரமே உண்டு. தகப்பன் உயிருடன் இருந்து, வீட்டில் உள்ள பொருட்களில் பங்கு பிரித்தால் பங்கு கிடைக்கும். அசைவற்ற பொருட்களில் பங்கில்லை. தாய்க்குப்பின் தாய் வழிப் பொருட்களில் பங்குண்டு. பெற்றோருக்கு ஆண் பிள்ளைகள் இல்லாவிட்டாலும், அவர்கள் யாரையும் தங்களது சுவீகார புத்திரர்களாக தத்து எடுக்காவிட்டாலும், அவர்களது சொத்துக்கள் ஆண்வழி சகோதரர்களுக்கே சேரும். சுவீகாரம் செய்வதானாலும் அந்நியர்களின் பிள்ளைகளை சுவீகாரம் செய்ய முடியாது. சகோதரன் அல்லது சகோதரியின் பிள்ளைகளையே சுவீகாரம் செய்யலாம். சகோதரி பிள்ளையை சுவீகாரம் செய்வதானால், சகோதரர்களது அனுமதி பெறப்பட வேண்டும். உரிமைக்காரன் இல்லாது ஒருவர் இறந்தால் அவரது சொத்துக்கள் அரசுக்குரியதாகிவிடும். இறந்தவருக்கு ஆண் சகோதரர்கள் இருந்தால் அவர்கள் இறந்தவரது சொத்தின் பெறுமதிக்கு ஏற்ப வரி செலுத்தி அதை தமதாக்கிக் கொள்ளலாம். அப்படி அவர்கள் அந்தச் சொத்தை ஏற்காத பட்சத்தில் இறந்தவரின் உறவுக்காரர்கள் அச் சொத்தின் பெறுமதியின் அரைவிலையைச் செலுத்தினால் அவை அவர்களுக்கு எழுதிக் கொடுக்கப்படும்.

போர்த்துக் கேயர்கள், தீவிரமான சமயவெறி கொண்டவர்களாகவும், தங்களது சமயத்தைப் பரப்புவதற்காக மற்ற சமயங்களையும், அவற்றைக் காப்பாற்றிவந்த அரசுகளையும் தயவு தாட்சணியமின்றி அழித்தொழிப்பதில் அதிக அக்கறை காட்டியதால் பின்னால்வந்த காலனிய ஆட்சியாளர்கள்போல் பொருளீட்டுவதில் மட்டும் குறியாக இருக்கவில்லை. பெரும்பாலும் அவர்கள் இலங்கையிலும், இந்தியாவிலும் பெற்றுக் கொண்ட செல்வத்தின் பெரும்பகுதியை அங்கிருந்த சுதேச மன்னர்களுக்கு எதிரான யுத்தங்களுக்கே செலவு செய்தனர். இதனால் அக் காலத்தில் உலகைப் பங்கு போடுவதற்கு கடலில் ஆதிக்கம் செலுத்திவந்த பிரெஞ்சு, ஸ்பானிய, ஒல்லாந்து அரசுகளின் கடற்படைகளோடு அவர்களால் போட்டிபோட முடியவில்லை. தெற்காசியாவைப் பொறுத்த வரை அக் காலத்தில் பிரெஞ்சுக்காரரும் ஒல்லாந்தருமே அதிகளவு அக்கறை கொண்டவர்களாக இருந்தார்கள். ஆங்கிலேயர்கள் அப்போது அங்கே பெரிய அளவுக்கு தலைகாட்டவில்லை.

கி.பி 1595-ம் ஆண்டிலேயே ஒல்லாந்துக் கப்பல்கள் வியாபார நோக்கமாக இலங்கைக் கடற் பிராந்தியத்திற்கு வந்து போகத் தொடங்கின. கி.பி. 1602-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி ஸ்பில்பேர்க் (Spil Berg) என்னும் ஒல்லாந்துக் கப்பற்படைத் தலைவன் மட்டக்களப்பில் வந்து தரையிறங்கி, அங்கிருந்த வன்னியச் சிற்றரசனின் உதவியுடன் அப்போது கண்டி அரசனாக இருந்த விமலதர்மசூரியனைச் சந்தித்தான்.

ஒல்லாந்தரின் உதவியைப் பெற்று போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்தலாம் என்று நினைத்த விமலதர்மசூரியன், அவனை வரவேற்று அவனுடன் வியாபாரம் செய்யவும், அவனது நாட்டவர்கள் விரும்பிய இடங்களில் கோட்டைகளைக் கட்டவும் ஒத்துக்கொண்டான். ஆனால் அதற்கு அடுத்த வருடம், விமலதர்மசூரியன் மட்டக்களப்பிற்கு விஜயம் செய்தபோது அப்போது அங்கிருந்த ஒல்லாந்துப் படைத் தலைவன் அவனுக்குரிய மரியாதையைச் செலுத்தாமல் அவரியாதையாக நடந்துகொண்டான். இதனால் கோபம் கொண்ட அவன், அந்தப் படைத்தலைவனை தலை வெட்டிக் கொன்றுவிட்டான். இச் 'சம்பவத்தின்பின் ஒல்லாந்தர் சிறிதுகாலம் இலங்கைக்கு வராது இருந்தனர்.

அதன்பின் கண்டியில் விமலதர்மசூரியனின் ஆட்சி முடிவுக்கு வந்து டோனா கத்தரீனா என்ற பெண் அரசியானதும், கி.பி 1609ம் ஆண்டு ஒல்லாந்த அரசன் பொஸ்கூவர் (Boscover) என்னும் படைத்தலைவனை அவளிடம் தூதாக அனுப்பினான்.

கத்தரீனாவின் சமூகத்திற்கு வந்த ஒல்லாந்துத் தூதுவன், தமது முன்னோர்கள் நடந்து கொண்ட விதத்திற்கு மன்னிப்புக்கேட்டதுடன், கண்டி அரசி தங்களுடன் மட்டுமே வர்த்தகம் செய்ய வேண்டும் என்றும், அதற்கு பிரதி உபகாரமாக போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து துரத்த அவளுக்கு தமது அரசர் படை உதவி வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தான். அக் காலத்தில் போர்த்துக்கேயரால் கண்டி அரசுக்கு பெரும் நெருக்கடி இருந்து வந்ததால் கத்தரீனா ஒல்லாந்த அரசனின் வேண்டுகோளை ஏற்க முடிவு செய்தாள். அதே ஆண்டு போர்த்துக்கேயருக்கு விரோதமாக கண்டி அரசும், ஒல்லாந்து அரசும் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டன. இந்த ஒப்பந்தத்தில் கண்டி அரசின் சார்பில் அரசி டோனா கத்தரீனாவும், அவளது கணவன் செனரத்தும் - ஒல்லாந்து அரசின் சார்பில் அரச தூதுவன் பொஸ்கூவரும் கையொப்பம் இட்டுக் கொண்டனர்.

**- நக்கீரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுகதை

# காசரா... லேசா!

என். எஸ். வாகீசன்

'உங்களுக்கு மினிஸ்றியிலையிருந்து 3 கோடி 30 லட்சம் ரூபா வருதாம். உங்கடை சம்பளமும் கிடைக்கும் போலை' தான் படித்துக் கொண்டிருந்த பேப்பரைக் கையில் வைத்திருந்தவாறே கிளாக்கர் சொன்னார். ஆசிரியர்களின் சம்பளப் பணத்தைப் பற்றி வந்த செய்தியை அவர் அப்போதுதான் வாசித்திருக்க வேண்டும்.

'ஓம்! இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கான ஆயிரம் ரூபா முற்பணச் செக் எடுக்க எத்தினைநாள் பொம்பர் ஹெலிகளுக்குள்ளாலை உச்சிக் கொண்டு கல்விக் கந்தோருக்கு அலைஞ்சன் எண்டது எனக்கும் என்ரை சைக்கிளுக்கும்தான் தெரியும் அதைக் காசாக்க எத்தினையிடம் சுத்தித் திரிஞ்சிருப்பன்? வாறகிழமை மிச்சத்துக்குச் செக் தந்தால் இன்னும் ஒரு செக்கை வைச்சு சுத்த வேண்டியதுதான்.'

'ஏன். காசோலை அனுப்பிறதெண்டில்லையே? காசாயனுப்பிறோம் எண்டுதானேயிருக்கு?'

'அப்படித்தான், யூன் மாத அகதி முற்பண ஆயிரம் ரூபா செக்கை தந்துவிட்டு அதை வங்கியிலை மாத்தலாம் எண்டு கதைவிட்டவை. அதை வைச்சு நான் பட்டபாடு எனக்கெல்லோ தெரியும்.'

நேரடியாக வங்கியில் மாற்றித்தர மாட்டார்கள் என்றறிய இரண்டு நாட்கள் சென்றன. கடையேறியிறங்கி இரண்டு நாட்கள் கழிந்தன. கடைசியாக நேற்று, ஊரில் உள்ள சொந்தக்காரர் ஒருவரின் எக்கவுன்டில் அந்தக் காசோலையை வைப்புச் செய்து அவருடைய காசோலையில் காசெடுக்க வங்கிக்குப் போயிருந்தேன். வெளியில் காசெடுக்கிற கூட்டம் அலைமோதிக் கொண்டிருந்தது. உள்ளே ஈயாடவில்லை.

'டிப்போசிற் பண்ணவேணும்'

செக்குறுட்டி முகமெல்லாம் பல்லாகி 'காசோ' என்றார்.

'இல்லை செக்.'

'சரி போம்!' வெறுப்போடு ஓரமாய் ஒதுங்கிநின்று இடந்தந்தார்.

எனக்கு சற்று முன் உள்ளே நுழைந்த ஒருவர் 'நீர்தானே சுந்தர மண்ணையின்ரை பெறாமகன் யோகேஸ்வரன்ரை சகலன்' என்று குசலம் விசாரித்துக் கொண்டிருந்தார். இப்போது அவரையும் என்னையும் தவிர, முழுமையும் வெறிச்சோடித்தான் கிடந்தது.

வெளியே என்னவோ பரபரப்பு. உள்ளுக்கு ஓடிவந்த செக்குறுட்டி மீண்டும் அவசரமாய் வெளியே ஓடினார். வெளியே மீண்டும் சலசலப்பு; கோயில் சுண்டலுக்கு சின்னப்பிள்ளைகள் போடுகிற மல்யுத்தமும் நடந்தது. திடீரென்று என்னதான் அதிசயமோ தெரியவில்லை.

கவுண்டரிலிருந்தவர் குசலம், விசாரித்தவரிடம் 'ஓம்! இப்ப என்ன வேணும்?' என்றார்.

'இல்லை கொஞ்சம் காசெடுக்க வேணும். நான்வந்து சுந்தரமண்ணையின்ரை.....'

'உங்கை வெளியிலை விழுந்தடிக்கிற சனத்தைப் பாத்தனீங்ளெல்லே. இவ்வளவு நேரமும் நம்பர் குடுக்கேல்லை. இப்பத்தான் ஆரோ காசு டிப்பொசிட் பண்ண வந்ததெண்டு நம்பர் குடுக்கப் போயிருக்கினம். இந்தமாதிரி உள்ளாலை அலுவல் பாத்து காசெடுக்கிறதை இப் போதைக்கு நினைக்காதையுங்கோ. முடிஞ்சா நம்பரை எடுத்துக் கொண்டு ஒழுங்கா வாருங்கோ' என்று செருப்பால் அடித்த மாதிரி சொல்லிவிட்டார்.

குசலம் செருப்படியைத் தடவினாற்போல முகத்தை அழுத்தித் துடைத்துக் கொண்டு, அப்படியிருந்தும் இன்னமும் அசடுவழிய, வெளியேறினார். நான் அவரைப் பின்தொடர்ந்து அவசரமாய் ஓடினேன்.

செக்குறுட்டி இடைமறித்தார் 'என்னண்ணை, செக் டிப்பொசிட் பண்ணப்போறன் எண்டு போட்டு உள்ளை வந்தியள், வந்த வேகத்திலை திரும்பி ஓடுறியள்?'

'காசெடுக்கிறதெண்டா நம்பராம்; அதுதான் எடுக்கப் போறன்.'

'அது நூறு பேருக்குக் குடுத்து முடிஞ்சது; பிந்தி வந்த மிச்சச்சனம் இன்னமொரு உறுமீன் வராதோ எண்டு பின்கியூவிலை ஒற்றைக்காலிலை நிக்கினம்.' கியூ வளைந்து வளைந்து மலைப்பாம்பென நீண்டு கிடந்தது.

செக்குறுட்டி சால்வையை கமக்கட்டி சொருகிக் குனியும் பாவனையில் 'வாருங்கோ வாருங்கோ' என்று வராதது போல வந்த அந்த உறுமீனை வரவேற்றார். உறுமீன் சைக்கிளை விட்டுவிட்டு கம்பீர நடையில் அப்போதுதான் உள்ளே வந்து கொண்டிருந்தார். நம்பர் வாங்கிய கியூவினர் மகிழ்ச்சிக் கொந்தளிப்பில் செங்கம்பள வரவேற்பொன்றில்லாத குறையாக அவருக்கு வழிவிட்டனர்.

'உண்மையிலை ஒரு லட்சம் ரூபா டிப்பொசிட் பண்ணிறியளோ?' என்று ஆச்சரியமாய் கேட்டார் செக்குறுட்டி.


'ஓம்' மிடுக்குடன், காசுதரும் திமிரில் கருமித்தனமாக ஒரு சொல் பதிலை அருளினார் உறுமீன்.

'இல்லை... இந்தக் காலத்திலை இப்பிடித் தொகையைக் கட்டவாறியள்; அது தான் கேட்டன்.'

'மகனை இஞ்சை வைச்சிருக்கேலாது. வெளிநாடனுப்ப வேணும். ட்ராஃப்ட் எடுத்துக் கொண்டு கொழும்புக்கு போறதுக்கு வந்தனான். மூத்தவங்கள் சுவிஸிலையும், பிரான்சிலையும், யூகேயிலையும் இருக்கிறாங்கள். இவனையும் ஆனுப்பிவிட்டா நான் நிம்மதியா இஞ்சையிருந்து என்னாலை முடிஞ்ச ஊர்த் தொண்டைச் செய்து காலம் கழிக்கலாம்.'

தன் சுயபுராணத்தை அத்தனை பேர் முன்னாலும் சொல்லக் கிடைத்த வாய்ப்பை தவறவிட அவர் விரும்பவில்லை. சொன்ன வேகத்தில் உள்ளே போனார்! செக்குறுட்டி உடன் சென்று, நேரே மனேஜர் அறைக்குள் அனுப்பி வைத்தார். மனேஜர் முகம் மலர, ஆசனத்தைக் காட்டி அமரச் செய்தார்.

சோர்வுடன் வெளியே நான், இன்னொரு உறுமீனைக் காத்திருக்க விரும்பாமல், நன்கு தெரிந்த ஒரு கடைக்காரரிடம் கடைசி முயற்சியாகச் சென்றேன். முதலில் தரமுடியாதென்ற மறுத்த இடம் தான். இந்த விசயத்தில் மதியாதார் தலைவாசலில் எத்தனைதரம் வேண்டுமென்றாலும் ஏறி இறங்கலாம். அவர் மனமிரங்கி தவணை முறையில் நூறு, இருநூறாய்த் தர இணங்கி முற்பணம் முன்னூறு ரூபா தந்தார். அதற்கே நான் போட்ட சலாம்... இப்போது நினைத்தாலும் வெட்கம் தாளவில்லை.



படித்த காலத்தில் தமிழாசிரியர் சொல்கிற அந்தச் சிலேடைதான் நினைவுக்கு வந்தது: 'காசா லேசா!: காசாலே சா.'

கிளாக்கர் படித்து முடித்த பேப்பரை மடித்து மூஞ்சையில் எறிகிற மாதிரி மேசையில் போட்டுக் கொண்டு 'பேப்பரிலை ஒண்டுமில்லை' என்று எரிந்து விழுந்தார்.

'இப்ப ஒண்டரை மணித்தியாலமா என்னமோ பாடமாக்கினியள்' என்றேன், அந்தளவு நேரமாவது அந்நாளின் தொண தொணப்பு இல்லாமல் நான் என் கற்பனா ரதத்தில் உலவ முடிந்ததே என்ற எண்ணத்தோடு, நானும் ஏதோ ஒரு பேப்பரை மேய்ந்து கொண்டுதான் இருந்தேன். – எல்லாம் நுனிப் புல்லுத்தான்.

'பின்னையென்ன, கவலையும், ஆழ்ந்த கவலையுந்தானே இந்தியா சொல்லிக் கொண்டிருக்குது.' கிளாக்கரின் உள்மனம் இந்தப் பதிலுக்குப் பிறகுதான் வெளித்தெரிந்தது. கடைசிப் பேப்பராவது 'இதோ இந்தியா இரட்சிக்க வர இருக்கிறது' என்று அவருடைய திருப்திக்காக எழுதியிருக்கக் கூடாதா?

'ஆனா, மாநிலச் செய்தியில் இலங்கைத் தமிழ் பிரதேசம் எண்டு சொல்லுறதை இப்ப நிப்பாட்டி 'தமிழீழம்' எண்டு சொல்லத் தொடங்கியிருக்கினமாமே! இந்தப் பேப்பரில கிடக்குப் பாருங்கோ'

எனக்கு அருகிலிருந்தவர் ஆதாரத்தோடு காட்டினார்: கிளாக்கர் பாய்ந்தடித்து வாங்கிப் படித்தார்.

'அதுதானே கருணாநிதி மறத்தமிழன் எங்களை மறந்து போவாரோ, இந்தியா கட்டாயம் வரும்.'

இருக்க முடியாமல் நான் வாயைத் திறந்தேன் 'நாங்கள் விரட்டியடிச்சு இன்னம் முழுசா அரைவருசம் முடியேல்லை.'

'அது ஜே.ஆர்.கேட்டு, ராஜீவ் அனுப்பினது: அதாலை தான் அடாவடித்தனமா நடந்தவை. கருணாநிதி படை அனுப்பினால் தமிழீழம் காணத்தான் அனுப்புவார்.' கிளாக்கர் குரலில் சூடேறி இருந்தது.

அவருடைய கொதி எனக்குச் சுவாரசியமாய் இருந்தது. அதைவிட அவருடைய விருப்பம் வியப்பை அளித்தது. விடாமல் சீண்டினேன். 'கருணாநிதியும் இந்திய மத்திய அரசாங்கக் கட்டுப்பாட்டில இருக்கிற அதே இராணுவத்தைத்தான் அனுப்ப முடியும்.'

'இந்திய இராணுவம் சிறீலங்கா இராணுவத்தைப் போல இல்லை. அது ஓடருக்கு கட்டுப்படுகிற பழக்கம் உள்ளது. ராஜீவின்ர ஓடருக்கு அப்பிடி நடந்தது. கருணாநிதி கேட்டு, வி.பி.சிங் குடுக்கிற ஓடருக்கு அதுக்குரிய முறையில நடக்கும்.'

அருகிலிருந்த விசுவாசியும் சும்மா இருக்க விரும்பவில்லை. 'ஏன் மாஸ்டர், அப்பவும் ஐ.பி.கே.எஃப் ஆடர் வரல்லை.... ஆடர்வரல்லை எண்டு எத்தினைநாள் பொறுத்தவங்கள் எண்டதை மறந்து போனியளே!' என்று என்னைப்பார்த்துக் கேட்டார்.

ஓ.... அந்த 'இனிய நாட்கள்' என் கண்முன்னே விரிந்..... பயப்பட வேண்டாம்! அதை இங்கு விரித்துரைக்கப் போவதில்லை. நான் அந்தளவு போக பக்கத்துணைகள் உதவவில்லை. கற்பனாரதம் அச்சுடைந்து வீழ்ந்தது. கிளாக்கர் ஏறி மிதித்தார்.

'எத்தினை வீரர் இருந்தாலும் ஒரு எட்டப்பன், ஒரு காக்கை வன்னியன் போதாதே தமிழன் நாசமாய்ப் போக...'

'உண்மைதான்: எங்களை ஒரு பாட்டம் அழிச்சுப் போட்டும், போனவையை மறுபடியும் மாலை போட்டுக் கூப்பிட நினைக்கிற உங்களைப்போல இரண்டு பேர், வேண்டாம், நீர் ஒருவரே போதும்.....'

துள்ளி எழுந்தார் கிளாக்கர். வாசிகசாலை வாங்கு பின் சரிந்து விழுந்தது. நானும் அடுத்த பக்கத் துணையும் எழுந்து விட்டோம். கிளாக்கர் எனக்கு விளாசி விடக் கூடாது என்று முன் எச்சரிக்கை நடவடிக்கையாய் பக்கத் துணை மேசையைச் சுற்றிப் போய் கிளாக்கரைப் பிடித்துக் கொண்டுவிட்டார்.

சுவர்களில் தொங்கிய 'நூலகத்தில் அரசியல் கதைக்க வேண்டாம்: 'அமைதி' என்ற போர்டுகளில் படிந்திருந்த அழுக்கு, போர்டின் வாசகங்களை மறைத்து வாசிகசாலையின் கௌரவத்தை பாதுகாத்துக் கொண்டிருந்தது. நான் முன் எச்சரிக்கையுடன் மேசை விளிம்பைப் பிடித்திருந்ததால் கிளாக்கரின் மூசலில் பறந்துவிடாமல் என் கௌரவத்தைப் பாதுகாத்துக் கொண்டேன்.

அந்த நேரம் அவசரமாய் வந்து சயிக்கிளிலிருந்து குதித்து இறங்கிய கிளாக்கரின் மச்சான் மூச்சிரைக்க கத்தினார். 'என்னத்தான் இஞ்சை கூத்தடிச்சுக் கொண்டு நிக்கிறீயள். அங்கை அக்கா ஒப்பாரி வைச்சுக் கொண்டிருக்கிறா.... சுதா ஓடிவிட்டாளாம்.'

கிளாக்கர் தடுமாறிப் போய்விட்டார். 'ஆரோடை?'

எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. கிளாக்கரின் மகள் சுதாவுக்கு இப்பதான் 15 வயசு! அதுக்குள்ளை...?

(தொடர்ச்சி 18-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1996 லண்டன் இலத்தீன் அமெரிக்க திரைப்பட விழா:

## புரட்சி அதிகாரம் அந்நியமாதல்

## கியூப இயக்குனர் தோமஸ் கிதெராஸ் அலியா:

தோமஸ் கிதெராஸ் அலியா (Tomas Guiteras Alea) *1996-ம்* ஆண்டு ஏப்ரல் *16-ம்* நாள் அவரது *68*-வது வயதில் மரணமுற்றார். கிதெராஸ் அலியா முக்கியமான கியூப / இலத்தீனமெரிக்க இயக்குனர் மட்டுமல்ல, உலகின் புரட்சிகர சினிமாவின் இறவா மானுடன் அவன்.

*1928-ம்* ஆண்டு டிசம்பர் *11-ம்* நாள் ஹவானாவில் பிறந்தவர் அலியா, வசதி படைத்த கத்தோலிக்கக் குடும்பம் அவருடையது. இசையை முறைப்படி கற்றவர். ஹவானாப் பல்கலைக் கழகத்தில் பிடல் காஸ்ட்ரோவின் தோழனாகச் சட்டம் பயின்றவர். ரோம் திரைப்படக் கழகத்தில் சினிமா பயின்றார். இவரது சக மாணவர்கள் இலத்தீனமெரிக்க சினிமாவிலும் இலக்கியத்திலும் சாதனை படைத்தவர்களாகவும் இருந்த மூவர். கியூப இயக்குனர் ஜூலியோ கார்ஸியா எஸ்பினோயா, ஆர்ஜன்டைன் இயக்குனர் பெர்னிடோ பிரி, கொலம்பிய நாவலாசிரியர் கேப்ரியல் கார்ஸியா மார்க்யூஸ் போன்றவர்கள் அவர்கள். மார்க்வீஸ் இன்றளவும் கியூபப் புரட்சியின் ஆதரவாளர்; பிடல் காஸ்ட்ரோவின் நெருங்கிய நண்பராகவிருக்கிறார்.

*1951-ம்* ஆண்டு திரைப்படம் எடுக்கத் தொடங்கிய கிதெராஸ் அலியா பிரான்ஸ் காப்காவின் சிறுகதையான An Every, Contusion வை *10* நிமிடப் படமாக உருவாக்கினார். தெற்கு ஹவானாவில் வாழும் ஜபா-ட்டா தொழிலாளர்களைப் பற்றி இவர் எடுத்த படத்தில் பொலிசின் ஒடுக்குமுறைக்கு உள்ளானார் அலியா. பாடிஸ்டா போலிசினால் படம் பறிமுதல் செய்யப்பட்டது. பிடல் காஸ்ட்ரோவுடன் சேர்ந்து மார்க்சியம் படிப்பதிலும் அரசியல் நடவடிக்கையிலும் ஈடுபட்டார் அலியா.

*1958-ம்* ஆண்டு டிசம்பர் இரவு *31-ம்* நாள் கொடுங்கோலன் பாடிஸ்டா ஹவானாவை விட்டுத் தப்பியோடினான். பிடல் காஸ்ட்ரோவும் குவேராவும் அவர்களது தோழர்களும் கியூபாவின் அதிகாரத்தைக் கைப்பற்றி ஹவானாவுக்குள் நுழைந்தார்கள்.


பிடல் காஸ்ட்ரோவின் நண்பரும் இயக்குனருமான ஆல்பிரயோ குவேரா (Affredo Guevara) வின் முன் முயற்சியில் உடனடியாக புரட்சியின் முதல் கட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக கியூப திரைப்படக் கழகம் (Cuban Industry of Cinema to graphic Art and Industry, ICAIC) தொடங்கப்பட்டது. கார்ஸியோ எஸ்பினாஸோ, கிதெராஸ் அலியா போன்றவர்கள் தோற்றப் பிதாமகர்கள் ஆனார்கள். கழகத்தின் பொறுப்பை ஆல்பிரோ குவேர ஏற்றார். இந்தக் கியூபத் திரைப்படக் கழகத்தின் மூலம் தான் கிதெராஸ் அலியாவின் அனைத்துப் படங்களும் தயாரிக்கப்பட்டன.

புரட்சி வாகை சூடியவுடன் முதல் நடவடிக்கையாக புரட்சியின் வரலாற்றைப் படமெடுக்க முடிவு செய்யப்பட்டது. ஆஸ்பிரடோ, சே, அலியா போன்ற மூவரும் விவாதத்தில் ஈடுபட்டார்கள். வரலாறு மூன்று கட்டங்களாகப் படம் பிடிக்கப்பட்டது.

1. **1957-ம் ஆண்டு அதிபர் மாளிகையின் மீதான தாக்குதல் (Attack on Presidential Palace) முதல் கட்டம்.**
2. **சேகுவேராவின் நினைவு மீட்புகளாகச் சொல்லப்பட்ட புரட்சிகர யுத்த அனுபவங்கள் இரண்டாவது கட்டம்.**
3. **ஸான்யி கிளாரா போராட்டமும் புரட்சியின் இறுதிக் கட்டம் வெற்றி வாகை சூடுவதும் மூன்றாவது கட்டம்.**

குடிரெஸ் அலியா தொடக்கம் முதலே மிகுந்த நகைச்சுவை உணர்வு தொனிக்கப் படமெடுத்தவர். காஃப்காவின் சிறுகதை தொடங்கி The Twelve chairs, The death of a Bureaucrat என வளர்ந்து அவரது இறுதிப் படமான Guntenamara வரை அவரது நகைச்சுவை உணர்வைக் காணலாம்.

இலத்தீனமெரிக்காவின் புகழ்பெற்ற நாவலாசிரியர் கேப்ரியல் கார்ஸியா மார்க்வெஸின் படைப்புகளை சினிமாவாக எடுக்கும் கூட்டு முயற்சியொன்றை இலத்தீனமெரிக்க இயக்குனர்கள் அனைவரும் மேற்கொண்டார்கள். கிதெராஸ் அலியா இத் தொடரில் எடுத்த படம், Letters from the Park. இது ஒரு பெண்ணுக்குக் காதல் கடிதம் எழுத பிறிதொருவனிடம் செல்லும் ஆண் மகன் பற்றியது. கரதல் கடிதம், அதற்குப் பதிலாக வரும் பெண்ணின் கடிதத்துக்குப் பதில் கடிதம் என எழுதப்போக, கடிதம் எழுதுபவனே அப் பெண்ணின் மீதான காதலில் வீழ்ந்த கதை அது. மார்க்வெஸீக்கு மகிழ்ச்சியளித்த சினிமாவாகவும் அது திகழ்ந்தது.



*தனது மனைவி மித்ரா இபராவுடன் கிதெராஸ் அலியா*

ஐரோப்பிய நாடுகளில் பரவலாகத் திரையிடப்பட்ட அலியாவின் படங்கள் ஐந்து:

1. **1966:** Death of a Bureacrat *(ஒரு அதிகார வர்க்கத்தவனின் மரணம்)*
2. **1968:** Memories of underdevelopment *(குறை வளர்ச்சி குறித்த நினைவுகள்)*
3. **1970:** The Last Supper *(கடைசி விருந்து)*
4. **1993:** Starawbery and Chocolate *(ஸ்ட்ராபெரியும் சாக்லேட்டும்)*
5. **1995:** Guntenamara *(குண்டனமேரா)*

அவரது படங்களிலேயே உலக சினிமாக் காவியங்களில் ஒன்றாக, திரைப்படக் கலையின் சாதனையாகப் பேசப்படும் படமாகத் திகழ்வது Memories of Underderelopment. Edmundo Desnoes எனும் கியூப எழுத்தாளரின் In Consolable memories (ஆற்றமுடி முடியாத நினைவுகள்) எனும் நாவலின் அடிப்படையில் எடுக்கப்பட்ட படம் இது.

The Last Supper படம் *18-ம்* நூற்றாண்டின் கறுப்பு அடிமைகளின் கலகம் பற்றியது. யேசுநாதரின் கடைசி விருந்தை ஞாபகப்படுத்தும் தலைப்பு. அடிமைகள் நிலப்பிரபுவால் விருந்துண்ண அழைக்கப்பட்டு, அந்த விருந்தே கடைசி விருந்தாகி விடுதலை நோக்கிய கலகமாக வெடிக்கிறது.

Death of a Bureacrat படம் புரட்சிக்குப் பின்னால் கியூப சமூகத்தில் தோன்றிய அதிகார வர்க்கம் பற்றிய கடுமையான விமர்சனங்கள்கொண்ட நகைச்சுவைப் படம். இப் படம் வெளியான இரண்டு நாட்களில் கிதெராஸ் அலியா சந்தோசப்படும் காரியமாக பிடல் காஸ்-ட்ரோ அதிகார வர்க்கத்தின் மீதான காட்டமான விமர்சனத்தை வெளிப்படையாக முன்வைத்தார்.

இப் படத்தின் பின் வெளியான பல்வேறு படங்கள் ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் திரையிடப்பட்ட போதும், இப் படத்தை அங்கு திரையிட மறுத்தார் அலியா. தோன்றிய சூழல், அவசியம் போன்றவற்றை மறைத்துவிட்டு கியூப எதிர்ப்புப் படமாக இப் படத்தை ஆக்கிவிடும் போக்கு அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் நிலவியதாலேயே திட்டமிட்டு அறிவுபூர்வமாக இந் நிலைப்பாடு மேற்கொண்டார் அலியா.

ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் *1990*களில் மிக அதிகமாகப் பேசப்படும் அலியாவின் படம் Strawbery and Chocolate. சோசலிச சமூகங்கள் / புரட்சிகர சமூகங்களால் ஒதுக்கப்பட்டு நிராகரிக்கப்படும் சமப்பாலுறவாளர்கள் பற்றிய பரிவுணர்ச்சியை வேண்டும் படம் இது. பாலுறவு, பாலியல்பு பற்றிய புரட்சியாளர்களின் பொய்மையைத் தோலுரிக்கும் படம் இது.

அவரது இறுதிப் படம் *1995* இல் வெளியான Guantanamera. குண்டெனமெரா கியூபாவின் பல்வேறு பிரதேசங்களில் ஒன்று. நமது நாடுகளின் மாவட்டம், மாநிலம் போல தனிப் பிரதேசம் அது. அந்த மண்ணின் கலாச்சாரத்தில், இசையில் வேரூன்றி, கியூபாவின் அனைத்து நிலப்பரப்பும் தழுவி ஹவானாவரை நீண்டிருக்கும் அதிகார வர்க்க போலித்தனம் பற்றிப் பேசும் படம் இது.

இந்த ஐந்து படங்களில் The Last Supper, Death of a Bureaucrat படங்களை பிரிட்டன் தொலைக்காட்சி நிறுவனம் தனது *1992-ம்* ஆண்டு இலத்தீனமெரிக்க திரைப்பட வரிசைத் திரையிடலில் காண்பித்தது. மற்ற மூன்று படங்களான Memoris of uader development, Strawbery and Chocolate, மற்றும் Guantanamera படங்கள், கிதெராஸ் அலியாவின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக, லண்டனில் *1996* செப்டெம்பர் முதல் மூன்று வாரங்கள் நடைபெற்ற ஏழாவது இலத்தீனமெரிக்க திரைப்பட விழாவில் காண்பிக்கப்பட்டது. இந்த ஐந்து படங்களையும் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது என்னளவில் ஆர்வமான நிகழ்வு மட்டுமன்று, அது எனது பாக்கியம்.

இந்த ஐந்து படங்களில் Strawbery and Chocolate படம் வீடியோவில் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் கிடைக்கிறது. பாலியல்பு குறித்த ஆழமான மார்க்ஸிய விவாதங்கள் இப் படத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இப்படம் கிதெராஸ் அலியாவின் சுயசரிதையின் அடிப்படை கொண்டது. இவரது இன்னொரு படமான / இறுதிப் படமான Guantanamera விலும் இப் படத்திலும் கதாநாயகியாக நடித்திருப்பவர் அலியாவின் துணைவியாகிய மார்த்தா இபரா.

இப் படங்களில் மிகுந்த சமகாலத் தன்மை கொண்டதும் விமர்சனத்துக்கு உரியதுமான காத்திரமான படங்களாக நான் கருதும் படங்கள் மூன்று தான்:

1. Memories of Underdevelopment
2. Strawbery and Chocolate
3. Guantenamera

இந்த மூன்று படங்களையும் பற்றி விரிவாகப் பார்த்துவிட்டு, தொடர்ந்து இவை எழுப்பும் விவாதங்களுக்கு உள்ளும் சென்றுவிட்டு அதைத் தொடர்ந்து இப் படங்கள் இன்றளவும் தமக்குள் கொண்டிருக்கும் புரட்சிகர சினிமா குறித்த கோட்பாட்டுப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவோம்.

கிதெராஸ் அலியா மிகுந்த ஆழமான மார்க்ஸீயப் படிப்பும், கியூபப் புரட்சிகர சமூகத்தின் மீது தீவிரமான நேசமும் கொண்டவர். கியூப சமூக அமைப்பைப் பற்றி கடுமையான விமர்சனங்கள் கொண்ட அவர், அவரது இறுதி நாட்கள் வரை கியூபாவிலேயே வாழ்ந்தார். அமெரிக்க ஏகாதிபத்தியம் மட்டுமல்ல எவரது தலையீட்டையும் கடைசிவரை எதிர்த்தவர். தனது தேசத்தின் அடையாளத்துக்கும் இறையாண்மைக்கும் தொடர்ந்து போராடிய கலைஞன் புரட்சியாளன் கிதெராஸ் அலியா.

*யமுனா ராஜேந்திரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(16ம் பக்கத் தொடர்ச்சி)

## காசா... லேசா!

'தனியத்தான்'

'என்ன பகிடி விடுறியே? தனிய என்னெண்டு ஓடுறது?'

'மூண்டு பெட்டையளாய்ப் போறதெண்டு தான் திட்டம் போட்டவையாம். மற்ற இரண்டு பேரும் மாறிவிட்டாளவை. இந்தப் பேய்ப் பெட்டை தனியப் போய்விட்டாள்.'

இதைக் கேட்டதும் கிளாக்கர் முன்னையக் காட்டிலும் இடிந்த போய் விட்டார். விழுந்து போய்விடப் பார்த்தவரை நானும் பக்கத் துணையும் கைத்தாங்கலாகத் தாங்கிக் கொண்டோம்: கிளாக்கரைப் பொறுத்தவரை இதுக்கு 'அது' மேல்.

போனவருஷம், ஐ.பி.கே.எஃப் காலத்திலை, சுதாவின் அண்ணாவிடம் இப்பிடி ஒரு அசுமாத்தம் தெரிஞ்சவுடனேயே, கவனமாய், முள்ளில்பட்ட



சீலையை பெயர்ப்பது போல நிதானத்தோடு கழட்டிக் கொண்டு கொழும்புக்கு ஓடிப்போய், கையோட கனடாவுக்கு அனுப்பிவிட்டு வந்தவர்.

'அடுத்தவள் சுதா ஒரே ஒரு பெட்டை எண்டதாலை பயமில்லை; இதுகளை கடைசிவரை யோசிக்க மாட்டாள். மற்ற ரண்டுக்கும் பதின் மூன்றும், பதினொண்டும்தானே!' என்று மூத்தவனை மீட்டதில் புத்திசாதுரியமாய் தான் நடந்த கொண்டது பற்றி இடையே லீவில் ஊருக்கு வந்த என்னிடம் கிளாக்கர் வீறாப்புப் பேசியது நினைவில் வந்தது.

கிளாக்கரின் மச்சான் நிமிர்த்தி வைத்த வாங்கில், கிளாக்கரை இருக்க வைத்தோம்.

'இப்பிடி மற்றப் பெட்டயள் ஓடேக்கை, தின்னக் குடிக்க வழியில்லாததுகள் தான் ஓடுதுகள் எண்டவள், இப்ப ஏன் தானே ஓடினவள்? இவளுக்கு என்ன குறை? இவளின்ரை போட்டோவை பார்த்துவிட்டே கனடாவிலை இரண்டு மூண்டு பெடியள் மூத்தவனிட்டை ஆள் விட்டவங்களாம் கனடாவுக்கு கூப்பிடச் சொல்லி.

நான் ஒரு இரண்டு வருசம் போகட்டும் எண்டு பார்த்தது பிழையாய்ப் போச்சு.' கிளாக்கர் தனக்குள் புலம்பத் தொடங்கிவிட்டார்.

'இப்ப என்னத்தான், எங்க போவிடுவள். அங்கை கார் பிடிச்சுக் கொண்டுவர அண்ணை போயிட்டார். எப்பிடி எண்டாலும் பெற்றோல் எடுத்துக் கார் ஓட வீட்ட வருவர். உங்களைக் கூட்டிக் கொண்டுபோகத்தான் நான் வந்தனான். வாருங்கோ போவம்.'

மச்சானின் நம்பிக்கையில் கொஞ்சம் கிளாக்கருக்கும் ஏறியது. எழுந்தார், 'இன்று போய் நாளை வா' என்ற விடுவிப்புப் பத்திரத்தோடு களம் நீங்கிய இராவணன் போல நிலத்தைப் பார்த்து நடந்தார்.

என்றாலும் நெஞ்சு நிமித்தி நடந்தார்! 'ஒரு கிழமைக்குள்ளை கொண்டுவந்து, என்ன பாடுபட்டும் கொழும்பு போய், அவளை கனடா அனுப்பிப் போட்டு வந்த இந்த நிலத்தில மிதிக்கேக்க என் கூந்தலை முடிவேன், இல்லை, தலை நிமிர்வேன் என்ற சபதம் அந்த நெஞ்சில் வேரோடி வளர்ந்திருக்கக் கூடும்.

அவர் செய்வார்! அவருக்கென்ன குறை! காசா லேசா?

நாங்கள் காசாலே சாகாமல் எங்களை காபாந்து பண்ண ஏதும் செய்தால் எங்களுக்கு விடுதலையை மட்டுமல்ல, அவசிய மற்ற ஒரு சிலேடையை உடைத்த பெருமையையும் தட்டிக் கொள்வோம். அடுத்தடுத்த சந்ததிகள் சொல்லாதோ, முன்னமொரு காலத்திலை இப்படி ஒரு சிலேடை இருந்ததென்று?

நன்றி: ஏன்?
ஓகஸ்ட், 1990

---


(14ம் பக்கத் தொடர்ச்சி)

### துரத்தியடிக்கப்பட்டு....

இதனால் இசைக்குப் பல கெடுதல்களே விளைந்துள்ளன. இதை இசையரங்குகளிலிருந்து விலக்கிவருகின்றனர்

### ஜலதரங்கம்

பீங்கான் கிண்ணங்களில் பல அளவில் நீர் வார்த்துச் சுருதி அமைத்துக்கொண்டு ஒரு சிறு கழியால் தட்டி வாசிக்கும் ஒருவகை வாத்தியமே இது.



இத்தனை இசைக் கருவிகளுமே தமிழர்களின் வாழ்வியல் முறையில் கலந்த ஒன்றாகக் காணப்படுவது சிறப்புத் தன்மை வாய்ந்ததாகும். நமது கலைக் கழகங்கள் தமிழர்களது பாரம் பரிய இசைக் கருவிகளையே பயில வேண்டும். இசைக் கருவிகளைப் பொருட்காட்சியிலும் இசை மாநாடுகளிலும் வைத்து விளம்பரப்படுத்த வேண்டும். பழைய கூத்துக்கள், நாடகங்கள், ஓவியங்கள், சிற்பங்கள் முதலிய விஷயங்களில் நமது ஊக்கம் வளருவதைப் போல் பண்டைய இசைக் கருவிகளிலும் ஊக்கம் செலுத்த வேண்டும். பண்டை இசைக் கருவிகளைப் பாதுகாப்பதைவிட அவற்றைப் புதுப்பிப்பதும் காலத்திற்கேற்ற முறையில் சீர்திருத்தி உருமாற்றி அமைப்பதும் கடமையாகும்.

நன்றி: [illegible]

---

## அன்பின் தம்பிகளுக்கு:

வெள்ளிப்பனி முகடுகளை
கொட்டிக்கிடக்கும் பனிப்பூக்களை
ஓங்கிய தேவாலய கூர்நுனிகளை
செவிப்பறையில் முட்டிமோதும்
அந்நிய ஒலிகளை
உள்வாங்க முடியாமல்...

உலகில் அடிமுடிகளைத் தேடியதை
பிரித்ததை — ஆண்டதை
செவ்விந்திய இரத்தம் பருகியதை
கறுப்பு மலர்களை கசக்கி எறிந்ததை
என்றெல்லாம் —இவர்கள்
வாழ்வும் வரலாறும்
நீண்டும்
அவையெல்லாம்
எனக்கு நன்றாக நினைவிலிருந்தும்

உயிர்தப்பிய 'வாழ்வு
உடலின் இச்சைகள்
நாணயமதிப்புக்கள்
நம்பிக்கை மோசடிகள்
துணையை அழைக்கும்
சந்ததி சேர்க்கும்
தற்காலிக சுகங்கள் வேண்டி
தலையைப் புதைக்கும்

காலதேவன் கணித்ததே
வரையறைகளுடன் கூடிய வளாகச் சிறை
இந்தச் சிறையிலே தானே அகதியின் இருப்பு
போராட்டத்தில் போராட்டமாய்
சிறைக்குள்ளேயே சிறையாய்
என் வாழ்வு கழியும்.

- நடராஜா முரளிதரன்

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

அன்றும் போல் இன்றும் இங்கும்
எல்லாமே நிகழ்ந்தது
குறுக்குத் தடைகள், வழிமறிப்புக்கள்
அதே காவலர்கள், கரங்கள், கைத்துப்பாக்கிகள்
குரல்வளை நெரிபட மணிக்கட்டு தெறிபட

ஆழ்துயிலில் சுகம் பயின்ற பிஞ்சுகள் அலறின
கதவுகள் உடைந்திட
காலடிச் சத்தங்கள் நெஞ்சுக்கூட்டை இடித்தன
அன்றும் போல இன்றும்
ஆண்கள் பிரிக்கப்பட்டனர் - பெண்களிடமிருந்து

ஒப்பந்தங்கள் என்றுமே எமக்குத் துயர் தரும்
கிழிந்தும், அழிந்தும்
எம்தலைவிதியை நிர்ணயிக்கும்
வரலாறு தன்பக்கங்களை
சருகுகளாய் உதிர்த்துச் சொரியும்

ஆயினும்
உங்கள் வாழ்வும் என் வாழ்வும்
இணைந்தும் பிணைந்தும்
ஒன்றாய்ப் பலவாய் என்றும் போலவே

நடராஜா முரளிதரன்
சுவிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம்

# அனுபவங்கள் சிதறியது ஏன்?

சிறிதுகால இடைவெளிக்குப் பின் நமது புகலிடக் கலைஞர்கள் தமது மௌனத்தைக் கலைத்துள்ளார்கள். முகத்துக்குப் பின் 'மௌனம்' வந்தது. இனி மௌனத்தைத் தொடர்ந்து 'தலைமுறைகள்' வெளிவரப் போவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

எத்தனையோ பல நடைமுறைச் சிக்கல்களுக்கு மத்தியிலும், விமர்சனங்களுக்கு (சம்மந்தப் பட்டவர்கள் அதனை ஆரோக்கியமாக கருதத் தவறும் பட்சத்திலும்) மத்தியிலும் புகலிட சினிமா தயாரிப்பாளர்கள் சலிக்காத ஒரு தொடர் முயற்சியினை மேற்கொள்வதானது புகலிடச் சினிமா தாமதமாக வேனும் தனக்குரிய இலக்கை அடையமுடியும் என நம்பிக்கை கொள்ள வைக்கின்றது.

பொழுது போக்கு வர்த்தகச் சினிமா, மாற்றுச் சினிமா என இரண்டுவகையான முரண்பட்ட போக்குகள் பொதுவான சினிமா முயற்சிகளுக்குள் இருப்பது போல் புகலிடச் சினிமாவுக்குள்ளும் இந்தப் போக்குகள் விதிவிலக்காக இருக்கவில்லை.

யதார்த்தச் சினிமாவை, எம் அகதி வாழ்வின் பதிவுகளை சினிமாவாக்கியிருக்கிறோம் என்றபடி எடுக்கப்படுகின்ற சினிமாக்களில் கற்பனைக் குதிரைகளைத் தட்டிவிட்டு அது புழுதி கிளம்ப தறிகெட்டு ஓடி ஈற்றில் எங்காவது பள்ளத்தில் விழுந்து நொண்டிக் குதிரையாகிப்போகும் அனுபவங்களையே பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

தொழில்நுட்பம் பற்றி புகலிடச் சினிமாவை சார்ந்தவர்களின் அக்கறைகள் திருப்தி தருவதாக இன்னும் அமையவில்லை எனலாம். இரட்டை வேடத்தில் நடிப்பதற்கான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தியளவுக்கு மற்றைய துறைகளில் தொழில்நுட்பம் பற்றிய அக்கறைகள் வெகு குறைவாகவே உள்ளதென்பது கவலை தரும் ஒரு உண்மைதான்.

சின்னத்திரைக்கான படத்தை எடுத்து அகலத் திரைக்கு மாற்றுவதில் உள்ள சிக்கல்களில் இருந்து இன்னமும் முழுமையாக விடுபட, தொழில்நுட்பங்களை சரியான முறையில் நாம் அமைத்துக்கொள்ள முடியவில்லை என்பது ஒருபுறமிருக்க, சாதாரணமாக அடிப்படையான திரைக்கதையையும் கோட்டை விடுகின்றோம்.

மௌனத்தை எடுத்துக் கொண்டால், மேற்தட்டு வாழ்க்கை வாழ்ந்த இளம் பொறியியலாளன் பிரச்சினைகளினால் பிரான்சுக்கு வருகிறான்; ஒரு ஸ்ரேசனில் குளிரில் படுத்திருக்கும்போது முன்னர் அவனுக்கு வாகனச் சாரதியாக இருந்தவர் தனது வீட்டுக்கு கூட்டிவருகிறார். ஒரு நேரச் சாப்பாடு கொடுக்க வழியில்லாதபடி ஏழ்மை; லூட்ஸ் மாதாவுக்கான உண்டியல் உடைபடுகிறது; வயிறாற சோறுகிடைக்கிறது. இனப் பிரச்சினை பற்றி ஒரு பிரச்சார சொற்பொழிவு, காதலியின் நினைவு, பின்னர் பாரதியின் புத்தகங்களுடனும், கமராக்களுடனும் அறிமுகமாகும் நண்பர்கள், பிரெஞ்சுப் பெண்ணின் உதவியால் பொறியியலாளராகி மாளிகையில் வசிக்கும் நிலைக்கு உயர்கிறான் நாயகன். இடைக்கிடை காதலியின் ஞாபகம்வரும், கனவும் கனவில் பாட்டுக்களும்.

ஒரு ரம்மியமான பொழுது; காதலி ஈபிள் கோபுரத்தை முதன் முறையாகப் பார்த்து வியந்துபோய் நிற்கிறாள். உடனே காதலன், அது எத்தனையாம் ஆண்டு, எத்தனை கிலோ உருக்கில், எத்தனை அடி உயரத்துக்கு, எத்தனை பேரைக் கொண்டு கட்டப்பட்டதென்று பொறியியல் விளக்கம் தெரிவிக்கிறான்.



ரசனையற்ற காதலன்; பாவம் காதலி.

இடையில் நாயகனின் வளர்ச்சி பற்றி பத்திரிகை மூலம் மக்களுக்குத் தெரியப்படுத்தி தும்புத்தடியுடன் காலத்தைக் கழிப்பவர்களும் முன்னேற வேண்டும் என ஆதங்கப்படும் பத்திரிகையாளன்.

காதலி பிரான்ஸ் வருகிறாள். காதலன் ஆபிரிக்காவில். நண்பர்களில் ஒருவன் சந்தேகத்தை விதைத்து விடுகிறான். அவனைச் சந்திக்காமல் அவள் இருக்கிறாள். ஆபிரிக்காவிலிருந்து வரும் காதலனுக்கு அவனது நண்பன் மூலம் காதலி மாறிவிட்டாள் என்பதை அப்பிள் பழத்தை மிதித்து சூசகமாக காட்டுகிறார் இயக்குனர்.

இறுதியில் காதலிக்கு, காதலனின் நண்பனின் கெட்ட நோக்கம் புரிகிறது. அவரைக் காண ஏக்கத்துடன் ஓடிவருகிறாள். பிரெஞ்சுப் பெண்ணும் அவனை மணம் செய்யும் விருப்பத்தைத் தெரிவிக்கிறாள். இருவரும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் அவனைச் சந்திக்க வருகின்றனர்.

காரில் வந்து இறங்கும் பிரெஞ்சுப் பெண்ணும் பட்டுச் சேலை உடுத்தி கொண்டை போட்டு பூச்சூடி, நெற்றிப் பட்டம் அணிந்து தமிழ்க் கலாச்சாரத்துடன் (?) வரும் பெண்ணுமாக அவனை நெருங்குகின்றனர்.

அவனுக்கு தர்மசங்கடம். இருவரையும் மாறிமாறிப் பார்த்துவிட்டு மயங்கிவிழுகிறான். இதில் அவன் யாரை ஏற்பது? என்ற கேள்வியுடன் பார்வையாளர்களின் எந்தத் தீர்ப்பும் சம்மதம் என்ற குறிப்புடனும் இந்த மாபெரும் வாழ்க்கைச் சிக்கலுக்கு தீர்ப்புக் கூறும் பொறுப்பு ரசிகர்கள் தலையில் சுமத்தப் பட்டதுடன் வணக்கம்.

குறிப்பிடத்தக்க அளவுக்கு கமராவின் முன்னேற்றம் தெரிகிறது. இசையும், பாடல்களும் தெளிவாக இருக்கவில்லை. இருந்தும் அனுபவமுள்ள இயக்குனரும் நடிகர்களும், ஏதாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தயாரிப்பாளரும் இணைந்தும் கூட 'சுமார்' என்பதற்கு மேலாக ஒரு படைப்பைத் தரமுடியாமல் போனதற்கு காரணம் என்ன? 'அகதிவாழ்வின் அனுபவச் சிதறல்' எனக் குறிப்பிட்டுவிட்டு, குறிப்பிடத்தக்க எந்த விதமான அனுபவத்தையும் உள்வாங்க முடியாத ஒரு படைப்பாக மௌனம் அமைந்தது ஏன்?

புகலிடச் சினிமா என்பது குழந்தையின் தவழும் முயற்சியிலேயே இன்றும் இருக்கின்றது என்ற வாதத்தை முன்வைக்காமல், சினிமா பற்றிய நியாயமான அக்கறை கொண்டவர்கள் கூட ஆளாளுக்கு போலித்தனமாக பாராட்டுப் பத்திரம் வழங்கி விழா எடுத்து கொண்டிருக்காமல், இமயம், சிகரம், அற்புதம், அபாரம் என ரசிகர்களின் பெயரால் துண்டுப்பிரசுரம் வெளியிடுவதையும் நிறுத்திவிட்டு, இந்தப் படைப்புக்கள் ஏன் தோல்வியைத் தழுவுகின்றன என்ற கேள்விக்கான உண்மையான விடையைத் தேட முன்வரவேண்டும்.

கதை, திரைக்கதை, காட்சிப்படுத்தல், தொழில்நுட்பம் என்பவற்றில் நாம் எங்கு நிற்கிறோம்? அதற்கான காரணம் என்ன என்பதை திறந்த மனத்துடன் அலசினால் விடைகிடைக்கும்.

பெரும்பணச் செலவுடன் எடுக்கப்படும் புகலிடச் சினிமாக்கள் இப்படிச் சீரழிந்து போகின்றதே என்ற நியாயமான வருத்தத்துடன் சில குறிப்புக்களை எழுதினால், யார் அந்த விமர்சகன் என குறைகளைச் சுட்டிக் காட்டுபவனைத் தேடிக் கண்டுபிடித்து நேரடியாக அல்லது மறைமுகமாக திட்டித் தீர்ப்பதைவிட, தமது திறைமைகள், கலைச் சேவைகள் குறைவாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என புலம்பித்திரிவதை விட குறிப்பிட்ட குறைகள் வரக் காரணம் என்ன? அதனை நீக்க என்ன செய்யவேண்டும் என ஆராய்வதும் அதனை நிவர்த்தி செய்வதுமே நல்லதொரு படைப்பைத் தரும். அதைவிடுத்து இந்தக் கலைஞர்களுக்கு கிழுகிழுப்பை உருவாக்க பத்திரிகை மூலம் ஆகா...! அற்புதம்...!! என புழுகுவது புகலிடச் சினிமாவையோ அன்றி அக் கலைஞர்களையோ வளர்ச்சி நோக்கில் நகர்த்தாது. இந்தப் பிரச்சினைகளை மனந்திறந்து விவாதித்து நியாயமான பரிகாரம் காண முற்படாதவரைக்கும் புகலிடச் சினிமா என்ற பெயரில் தமிழக கோடம்பாக்க குப்பைகளே இங்கும் உற்பத்தி செய்யப்பட்டு எம்.ஜி.ஆர், சிவாஜி, கமல், ரஜனி சகாப்தங்கள் உருவாகினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

- அபிநயன்

ORIENT TEXTILIEN & SCHMUCK
KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836
* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 158,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள் , * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்!
(ADV)
தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!
தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கௌதமாலாவில் சமாதான ஒப்பந்தம் படைக்கான ஒதுக்கீட்டைக் குறைக்க அரசு இணக்கம்

கடந்த 35 வருடங்களுக்கு மேலாக கௌதமாலாவில் நடந்து வரும் போருக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் அங்கு போராளிகளுக்கும் அரசுக்கும் இடையே சமாதான ஒப்பந்தம் ஒன்று கடந்த 19.09.96 வியாழக்கிழமை கைச்சாத்தாகியுள்ளது.

1954-ம் ஆண்டு சீ.ஐ.ஏ இன் உதவியுடன் நடாத்தப்பட்ட இராணுவப் புரட்சியைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்ட கிளர்ச்சிப் போர் இது வரை ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோரைப் பலி கொண்டுள்ளது. இப் போரினால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சந்ததி, போர் ஏன் ஆரம்பித்தது, போராட்டத்தின் ஆரம்ப கோரிக்கைகள் என்ன என்பதை தெளிவாக அறியாதவர்களாகவே உள்ளனர். கெரில்லா அமைப்புக்குள் ஊடுருவிய சீ.ஐ.ஏ கெரில்லாத் தலைவர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் கடந்த வருடம் வெளியாகி இருந்தது.

தற்போது கெரில்லாத் தலைவரான Rolando Moran செய்து கொண்ட சமாதான ஒப்பந்தப்படி அரச படைகளுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவதோடு, அரச படையினரின் எண்ணிக்கை மூன்றில் ஒரு பங்காகக் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீ.ஐ.ஏ இனால் அமர்த்தப்பட்ட ஆட்சி மாற்றம் பற்றியோ, போர் நிறுத்தம் பற்றியோ ஒப்பந்தத்தில் எதுவும் குறிக்கப்படவில்லை எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# பெனாசிர் பூட்டோவின் சகோதரர் சுட்டுக் கொலை

பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் சகோதரர் MURTAZA BHUTTO (வயது 42) பொலிசாருடன் நடைபெற்ற மோதலின் போது கராச்சியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக கடந்த 20.09.96 வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டுள்ளது.

தனது சகோதரி பெனாசிர் பூட்டோவின் ஆட்சியைக் கலைக்கக் கோரி ஊர்வலம் ஒன்று நடாத்த முற்பட்ட போதே பொலிசாருடன் இம் மோதல் ஏற்பட்டதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எனினும் பொலிசாரின் திட்டமிட்ட செயல் இது என அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர். அவர் மீது ஆறு தடவைகள் பொலிசார் சுட்டுள்ளனர் எனவும் இவரது நண்பர்கள் ஆறுபேரும் இவருடன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் நேரில் பார்த்த சாட்சிகள் தெரிவித்துள்ளனர். இவர் 16 வருடங்கள் சிரியாவில் வாழ்ந்து விட்டு 1993-ம் ஆண்டு பாகிஸ்தான் திரும்பினார் என்பது குறிப்பிடத் தக்கது.

# ஜெல்சினுக்கு இருதய அறுவைச் சிகிச்சை சாத்தியப்பாடுகளில் சந்தேகம் !

ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சினுக்கு நடக்க இருக்கும் இருதய அறுவைச் சிகிச்சை ஜெல்சினின் உயிருடன் மட்டுமல்ல, ரஷ்ய அரசியலுடனும் சம்பந்தப்பட்டதென ரஷ்ய செய்தி ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன. அவருக்கு சத்திர சிகிச்சை செய்ய இருக்கும் டாக்டர் Renatakchurian கருத்து வெளியிடுகையில் இச் சத்திர சிகிச்சை குறித்து தான் கருத்து எதுவும் தெரிவிக்க முடியாது எனவும் இது ஜெல்சினின் தனிப்பட்ட விவகாரம் எனவும் தெரிவித்துள்ளார்.



ஜெல்சினின் வைத்தியர்

இந்த இருதயச் சிகிச்சையின் முடிவுகள் ரஷ்ய அரசியலில் மாற்றம் கொண்டு வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆயருக்கு 15 வயதில் குழந்தையா? பிரித்தானியாவில் கத்தோலிக்கர்கள் கவலை

பிரித்தானியாவில் Argyll பிரதேச கத்தோலிக்க தேவாலயத்தின் ஆயரான Rodrick Wright (வயது 55) இற்கு 15 வயதில் ஒரு ஆண் குழந்தை உண்டென்ற இரகசியம் கடந்த 20.09.96 வெளிக்கிழமை அம்பலத்துக்கு வந்துள்ளது.

மேற்படி ஆயர் 45 வயதாக இருக்கும் போது விவாகரத்துச் செய்த மூன்று பிள்ளைகளின் தாயாரான திருமதி. Kathleen Macphee என்பவருடன் இரகசிய உறவு வைத்திருந்தார் என்றும் இந்த உறவால் பிறந்த குழந்தையே தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ள குழந்தை என்றும் தெரிய வருகின்றது. மேற்படி ஆயருக்கும் தனக்கும் ஏற்பட்ட உறவால் பிறந்த குழந்தை தொடர்பான தகவலை அப் பெண்மணி பி.பி.சி பேட்டி ஒன்றில் தெரிவித்தார். ஆயர் உடனடியாக தேவாலயக் கடமைகளில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அதிர்ச்சி தரும் இச் செய்தியால் கத்தோலிக்க சமூகம் மிகவும் கவலை அடைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

# அல்ஜீரியாவில் பிரபல பாடகர் கொலை

அல்ஜீரியாவின் பிரபல பாடகர்களில் ஒருவரான Cheb Aziiz கடந்த 20.09.96 வெள்ளிக்கிழமை கடத்திக் கொல்லப்பட்டுள்ளார். இவர் இஸ்லாமிய மதத்தின் புனித நூலான குர்ஆனுக்கெதிராக தனது பாடல்கள் மூலம் மக்களைத் திசை திருப்ப முயன்றதாலேயே இத் தண்டனை வழங்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதே வேளை அல்ஜீரியப் பாதுகாப்புப் படையினர் இவரது கொலைக்கு இஸ்லாமிய அடிப்படைத் தீவிரவாதிகளே காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

# அகதிமுகாமுக்கு தீவைத்தவர் மீதான விசாரணை ஆரம்பம்



ஜேர்மனியில் உள்ள Lubeck நகரில் வெளிநாட்டு குடியேற்றக்காரக்கள் வசித்த மாடித் தொடருக்கு தீவைத்து 10 பேரின் மரணத்துக்குக் காரணமாக இருந்த Safan Eid (நடுவில் உள்ளவர்) மீதான விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன. இவர் நீதி மன்றத்துக்கு அழைத்து வரப்பட்டபோது அங்கு திரண்டிருந்த மக்கள் அவருக்கெதிரான கோஷங்களை எழுப்பினர்.

# அகதிகளை பலவந்தமாகவேனும் திருப்பி அனுப்புவோம்

## ஜேர்மன் உள்நாட்டமைச்சர் அறிவிப்பு

பொஸ்னியாவில் தேர்தல் நடைபெற்று ஜனநாயகம் திரும்பிவிட்டது எனவே ஜேர்மனியில் உள்ள அகதிகள் உடனடியாக தமது நாட்டுக்குத் திரும்ப வேண்டும் என ஜேர்மன் உள்நாட்டமைச்சர் Manfred Kanther அறிவித்துள்ளார்.

இத் திருப்பி அனுப்புதல் ஒக்டோபர் முதலாம் திகதியில் இருந்து அமுலுக்கு வருகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். இத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக சுதந்திரமான முடிவுகளை எடு-க்க ஒவ்வொரு மாநிலத்துக்கும் சுதந்திரம் உண்டு என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் இம் முடிவு அகதிகள் மத்தியில் பதட்டத்தையும், பீதியையும் உண்டாக்கும் என Alliance 90, The Green ஆகிய கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். அகதிகளுக்கான ஐ.நா. செயலகமும் இம் முடிவைக் கண்டித்துள்ளது.

# சரணடைந்தவர்களுக்கு பதவிகள் கிடையாது

கெமர் ரூஷ் இயக்கத்தில் இருந்து விலகி கம்போடிய அரசிடம் சரணடைந்த கெமர் ரூஷ் சிரேஸ்ட தளபதிகளுக்கு கம்போடிய அரசிலோ அல்லது இராணுவத்திலோ பதவிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என துணைப் பிரதமர் ஹுன் சென் தெரிவித்துள்ளார்.

போராட்டத்தைக் காட்டிக் கொடுத்து அரசுடன் இணைந்த இவர்கள் நிலை தற்போது கவலைக்கிடமாகி வருகின்றது. இவர்கள் கம்போடிய அரசில் மூன்றாவது சக்தியாக உருவெடுக்கலாம் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வதிவிட அனுமதியற்றோர் நாடுகடத்தலை எதிர்த்து ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம்

பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, போன்ற ஐரோப்பிய நாடுகள் கடைப்பிடிக்கும் வதிவிட அனுமதியற்றோர் நாடுகடத்தல் முறையை கண்டிக்கும் வகையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தீர்மானம் ஒன்று கடந்த வாரம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்தீர்மானத்தில் இரண்டாவது சரத்தின்படி நாடுகடத்தப்படும் ஒருவரின் பாதுகாப்பு, அவருக்கு அந் நாட்டில் மறுவாழ்வு என்பன உறுதிப்படுத்தப்படும் பட்சத்திலேயே நாடுகடத்த முடியும். மேலும் அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது நாடுகடத்தப்படும் ஒருவர் குறிப்பிட்ட நாட்டில் வாழ்வதற்கான வீடு, அவர் வாழ்வதற்கான வருமானம் என்பனவற்றை திருப்பி அனுப்பும் நாடுகள் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத் தீர்மானத்துக்கு ஆதரவாக 117 வாக்குகளும் எதிராக 11 வாக்குகளும் கிடைத்தன. 627 அங்கத்தவர்களைக் கொண்ட ஐரோப்பிய பாராளுமன்றத்தில் பெரும் பகுதியினர் விவாதத்தில் கலந்து கொள்ளவில்லை. தீர்மானத்தை முன்நின்று நிறைவேற்றியவர்கள் சோசலிசக் கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.


இத்தீர்மானத்தின் மூலம் நாடுகடத்தல் உத்தரவு பெற்றவர்கள் ஐரோப்பிய நீதிமன்றத்திடம் நியாயம் கோரும் உரிமையைப் பெற்றுள்ளார்கள் என தீர்மானத்தை ஆதரித்த கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

## பிரான்சில் பாப்பரசரின் சுற்றுப் பயணம் பூர்த்தி ஜனவரியில் மீண்டும் வருகின்றார்

பிரான்சில் கடந்த நான்கு நாட்களாகச் சுற்றுப் பயணம் செய்து கத்தோலிக்க பக்தர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கியதுடன் Colvis மன்னனின் ஞானஸ்னானத்தின் 1500 ஆவது நினைவு விழாவிலும் பாப்பரசர் கலந்து கொண்டார்.

மத சார்பற்ற (LAIQUE) குடியரசான பிரான்சில் கல்விக் கூடங்கள் உட்பட அனை-த்து அரச நிறுவனங்கலும் மத சார்பு விழாக்களை எடுப்பதில்லை. இது 5 ஆவது பிரெஞ்சுக் குடியரசின் சட்டம். இப்படியிருக்க அரச பணத்தை செலவு செய்து எப்படி ஒரு விழா எடுக்க முடியும் என கேள்வி எழுப்பிய 5000 இற்கும் மேற்பட்ட பிரெஞ்சு மக்கள் கடந்த 23.09.96 ஞாயிற்றுக்கிழமை குடியரசுச் சதுக்கத்தில் (பிளஸ் டி லா றிபப்ளிக்) இருந்து ஊர்வலமாகச் சென்றனர்.

இது ஒரு புறமிருக்க Tours என்னுமிடத்தில் தங்கியிருந்து தனது நான்கு நாள் சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட பாப்பரசர் Reims நகரில் தனது இறுதி கலந்து கொள்ளலை நடாத்தினார்.



அடுத்த வருடம் பாரிசில் நடைபெற உள்ள சர்வதேச கத்தோலிக்க இளைஞர் ஒன்று கூடலில் கலந்து கொள்ளும் பொருட்டு பாப்பரசர் மீண்டும் பிரான்ஸ் வருவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த நான்கு நாட்களிலும் 4 இலட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் பாப்பரசரின் தரிசனத்தைப் பெற்றனர்.

## அமெரிக்க அரசுக்கும் முன்னாள் படைவீரர்களுக்கும் முரண்பாடு

வளைகுடாப் போரில் பங்கு கொண்ட அமெரிக்கபடை வீரர்களுக்கும் அமெரிக்க இராணுவத் தலமையகத்துக்கும் இடையே இழுபறி நிலையில் இருந்து வரும் வளைகுடா போர் "மர்ம வியாதி" தொடர்பாக எவ்வித மான முடிவுகளும் எடுக்கப்படாததையிட்டு அவ் வீரர்கள் கவலையடைந்துள்ளனர்.

வளைகுடாப் போரின்போது சவூதி அரேபியத் தளத்தில் இருந்து ஈராக்குக்குள் நுழைந்த இந்தப் படைப் பிரிவு ஈராக்கிய இராணுவத்தின் இரசாயன ஆயுதத்தின் தாக்குதலுக்குள்ளானதாலேயே இந்த மர்ம வியாதியால் தாம் பீடிக்கப்பட்டதாக படைவீரர்கள் தெரிவித்த போதிலும் பென்ரகன் அதிகாரிகள் இதை முற்றாக நிராகரித்துள்ளனர்.

ஈராக்கின் இராசாயனத் தாக்குதலுக்கு இந்தப் படைப்பிரிவு உள்ளாவதற்கு எந்விதமான ஆதாரங்களும் இல்லை எனவும் ஈராக்கிய ஆயுதக் கிடங்கொன்று வெடித்ததினால் ஏற்பட்ட நச்சுவாயுத் தாக்குதலுக்கு இவர்கள் உள்ளாகியிருக்கலாம் எனவும் தெரிவிகப்படுகின்றது.

## இத்தாலிய உயரதிகாரி கைது

இத்தாலிய அரசின் புகையிரத் திணைக்கள தலைவர் கடந்த 16.09.96 திங்களன்று கைது செய்யப்பட்டுள்ளார். இவர் மீது குற்றவியல், ஊழல், அதிகார துஷ்பிரயோக குற்றசாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

1992 ஆம் ஆண்டு இத்தாலியில் நீதியரசர்களின் நேரடிக் கண்காணிப்பில் ஆரம்பிக்கப்பட்ட ஊழலுக்கெதிரான நடவடிக்கையின் அடிப்படையிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பொஸ்னியத் தேர்தல் சர்வதேச கண்காணிப்புக் குழு கண்டனம்

அண்மையில் நடாத்தப்பட்ட பொஸ்னியத் தேர்தலின் நம்பகத் தன்மை குறித்து சர்வதேச கண்காணிப்புக்கு குழு தனது அதிருப்தியைத் தெரிவித்துள்ளது. இந்த தேர்தலில் வாக்களிக்க தகுதியுள்ள பலரும் வாக்களிக்காததையிட்டு அந் நிறுவனம் தனது கவலையை வெளியிட்டுள்ளது. இதேவேளை இந்த தேர்தல் சிறப்பாக நடைபெற்றுள்ளதாக ஐ.நா சபை கருத்துத் தெரிவித்துள்ள போதிலும் முறையான ஜனநாயக தேர்தல் நடாத்தப்பட இது பொருத்தமான காலம் அல்ல இந்த சர்வதேசக் குழு தெரிவித்துள்ளது.

## மெக்சிக்கோவில் தலையெடுக்கும் புதிய கெரில்லாக்கள்

மெக்சிக்கோவில் அண்மையில் லையெடுத்துள்ள வன்முறைக்கு பின்னணியில் EPR எனப் பெயர் கொண்ட மக்கள் இராணுவம் பின்னணியில் இருப்பதாக மெக்சிக்கோ ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மார்ஸ்சிய கொள்கையைக் கொண்ட தாம் ஓர் மக்கள் ஆட்சியை உருவாக்க போராட்டம் நடாத்துவதாக மேற்படி EPR இயக்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

## வாரக் குறிப்பு

**16.09.96 திங்கட்கிழமை**

- வளைகுடாச் சுற்றுப் பயணத்தை மேற் கொண்ட அமெரிக்க பாதுகாப்பு அமைச்ரின் சுற்றுப் பயணம் எதிர்பாத்த வெற்றி இன்று முடிவுற்றது.
- வடகொரிய வான் எல்லைகள் சர்வதேச போக்குவரத்துக்கு ஒக்ரோபர் மாதத்தில் இருந்து திறக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- பெல்ஜிய அரசு விடுத்துள்ள அறிக்கையில் முன்னாள் துணைப் பிரதமர் கொலை தொடர்பாக இரு துனிசியப் பிரசைகளுக்கு சர்வதேச பிடியாணை பிறப்பித்துள்ளது.
- சுவிஸ் வங்கிகளில் இடப்பட்ட போர்க்கால வைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்க சுவிஸ் அரசு இணக்கம்.
- இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள Reunion பிரதேசத்தில் நடைபெற்ற தேர்திலில் பிரெஞ்சுத் துணைஅமைச்சர் கம்யூனிஸ்ட் வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டுள்ளார்.

**17.09.96 செவ்வாய்க்கிழமை**

- நைஜீரியாவில் கொலரா நோய்க்கு 120 பேர் பலி. இவர்களில் பெரும் பகுதியினர் சிறுபான்மை ஒகோனி இனப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.
- பிரித்தானியாவில் காணப்பட்ட பைத்திய மாடு நோய் தற்போது சுவிற்சிலாந்துக்கும் பரவியுள்ளது. இந்நோய் காரணமாக இன்று 205 மாடுகள் பிரான்சில் கொன்றெரிக்கப்பட்டுள்ளன.
- பிரான்சில் உள்ள இனவாதக் கட்சியின் இனவிரோத போக்கை பாரிஸ் பேராயர் கடுமையாகக் கண்டித்துள்ளார்.
- தென்கொரிய அரசு கிளர்ச்சி செய்த 438 மாணவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளது.
- இந்திய முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் சுக்ராம் ஊழல் தொடர்பாக புது டில்லிப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

**18.09.96 புதன்கிழமை**

- இஸ்லாமியரான Izetbegovic ஒன்றுபட்ட பொஸ்னியாவில் நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.
- பிரித்தானிய விமான சேவையான பிரிட்டிஸ் எயர் வேஸ் எதிர் வரும் 18 மாதங்களில் 5000 பேரை வேலை நீக்கம் செய்ய உள்ளது.
- சீன அரசு Hainan தீவில் பாரிய சர்வதேச விமான நிலையம் ஒன்றை அமைக்க அங்கீகாரம் அளித்துள்ளது. இதற்கான செலவு 271 மில்லியன் அமெரிக்க டொலர் ஆகும்.
- ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மண்ணில் 1800 புதிய குடியேற்றங்களை அமைக்கப் போவதாக பிரதமர் நெட்டன்யாகு அறிவித்துள்ளார்.
- சர்வதேச சரக்கு போக்குவரத்தில் பாரிய திருட்டுக்களை மேற்கொண்ட 60 பேரை அமெரிக்க எப்.பி.ஐ நிறுவனம் கைது செய்துள்ளது.

**19.08.96 வியாழக்கிழமை**

- வானில் 188 நாட்களைக் கழித்து உலசாதனை படைத்த பெண் செல்வி LUCID பூமிக்குத் திரும்பியுள்ளார். 438 நாட்களை வானில் கழித்த Valary polyakov என்ற ரஷ்யரே உலக சாதனை படைத்த ஆணாகும்.
- வியட்னாமில் ஏற்பட்ட பாரிய வெள்ளப் பெருக்கினால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் வீடுகளை இழந்தனர்.
- திபெத்திய போராட்டத் தலைவர் தலாய் லாமா தொடர்பான சர்ச்சையில் அவுஸ்திரேலியாவை சீனா எச்சரித்துள்ளது.
- இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் சிமோ பெரெஸ் விடுத்துள்ள அறிக்கையில் 2000 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலில் தான் போட்டியிடப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.
- சஹாரா பாலைவனத்தில் ஏற்பட்ட யூ.ரி.ஏ நிறுவனத்துக்குச் சொந்தமான டி.சி 10 விமான விபத்து விசாரணைகள் முடிவு. மேலும் இரு லிபியர்களுக்கு சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**20.09.96 வெள்ளிக்கிழமை**

- பெண் சிறைக் கைதிகளையும் ஆண் சிறைக் கைதிகளைப் போல் சங்கிலியால் பிணைத்து சிறையில் அடைக்கும் முறை அமெரிக்க Arizona மாநிலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது தொடர்பாக சர்ச்சை கிளம்பியுள்ளது.
- தென்கொரியாவுக்கு வடகொரியர்கள் ஊடுருவியுள்ளதாக தென்கொரியச் செய்திகள் தெரிவிக்கின்றன.
- எகிப்துக்கும் இஸ்ரேலுக்கும் இடையே சமாதான உடன்படிக்கை தொடர்பாக முரண்பாடு வலுவடைந்து வருகின்றது.
- முன்னாள் சோவியத்தின் நா்டுகளை நேட்டோ விஸ்தரிப்பது தொடர்பாக ரஷ்யா தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

**21.09.96 சனிக்கிழமை**

- அல்ஜீரியாவில் அமைச்சரவை மாற்றம் ஒன்றைக் கொண்டுவர உள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.
- தென் லெபனான் மீது இஸ்ரேலியப் படைகள் தாக்குதல். இஸ்ரேலியப் பிரதமர் அடுத்த வாரம் பிரான்சுக்கு சுற்றுப் பயணம் செய்ய உள்ள வேளையில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.
- செர்னோபில் புதிய அணுக் கசிவு தொடர்பாக எச்சரிக்கை கிளப்பப்பட்டுள்ளது.

**22.09.96 ஞாயிற்றுக்கிழமை**

- இஸ்பெயினில் பாஸ்க் போராளிகள் பல தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.
- செச்சேனிய போராட்டத் தலைவர் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெறும் செச்சேனியா தொடர்பான விவாதத்தில் கலந்து கொள்ள ஸ்நாஸ்பூர்க் வர உள்ளார்.
- கிரேக்கத்தில் பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் வாக்கெடுப்பு ஆரம்பம். ஆளும் சோசலிசக் கட்சி தோல்வியடையும் எனக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலத்தீன் அமெரிக்க தாக்குதல்கள் முதலாளித்துவத்துக்கு எதிரான போரின் புதிய வடிவமா?




## மெக்சிக்கோ

மெக்சிக்கோவின் மேற்கு மலைப் பகுதியில் அமைந்துள்ள சியாபாஸ் பிராந்தியத்தில் இயங்கிவரும் சபதிஸ்ரா தேசிய விடுதலை இராணுவம் அண்மைக் காலமாக தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தி அரச படைகளுக்கெதிராக தமது தாக்குதல்களை நடத்தி வருவது நாம் அறிந்ததே. ஆனால் கடந்த இரண்டு வாரங்களுக்கு முன் மெக்சிக்கோவின் குவேரேரோ, ஒக்சாக்கா மாநிலங்களில் அரச படைகளின் மேல் திடீரென ஓர் இரவில் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. சுமார் 200-க்கும் மேற்பட்ட கெரில்லாக்கள் நவீன ஆயுதங்களுடன் உருமறைப்புச் செய்தபடி நகரப் பகுதிகளுக்குள் நுழைந்தனர். மிகவும் கச்சிதமான திட்டமிடலில் சில மணி நேரங்களுக்குள் பல பொலிஸ் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தி 15 பேரைக் கொன்றுவிட்டு முப்பதுக்கும் மேற்பட்டவர்களைக் காயப்படுத்தினர். இத் துணிகரத் தாக்குதலை நடத்தியதன் பின் இரவோடிரவாக காடுகளுக்குள் பின்வாங்கியவர்கள், தாம் 14 அமைப்புக்களின் கூட்டமைப்பு என்றும் செல்வாக்கற்ற சர்வாதிகார ஏர்னஸ்டோ செடில்லோவின் அரசினை அகற்றி ஒரு சோசலிச இராச்சியத்தைத் தோற்றுவிப்பதே தமது நோக்கம் என்று அறிக்கை விட்டனர். தமக்கும் சப்பதிஸ்ரா கெரில்லாக்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்றனர்.




## கொலம்பியா

கொலம்பியாவின் மக்கள் இந்தத் தசாப்தத்தின் மிக மோசமான தாக்குதல்களை கடந்த மூன்றாம் திகதி சந்தித்தார்கள். 500-இற்கும் மேற்பட்ட கொலம்பிய புரட்சிகர இராணுவத்தின் (FARC) போராளிகள் பேரு நாட்டு எல்லைப் பகுதி ஊடாக அமேசன் பிராந்தியமான புடுமாயோவுக்குள் நுழைந்தவர்கள் மூன்று மணி நேரத்தில் அப் பகுதியில் இருந்த இராணுவ முகாமை தாக்கிக் கைப்பற்றி அங்கிருந்த இராணுவத்தினரில் 61 பேரைக் கொன்று, 67 பேரை சிறைப்பிடித்துக் கொண்டார்கள். அடுத்த சில தினங்களுக்குள் இப் பகுதியில் சுமார் 28 இராணுவ நிலைகள் இவர்களது தாக்குதல்களுக்கு உள்ளாகின. நாட்டின் 35 வருட கெரில்லா போரில் ஒரே தாக்குதலில் ஏற்பட்ட ஆகக் கூடிய இழப்பு இதுவென்று தெரிவிக்கப்படுகின்றது. சுமார் ஒரு வார காலம் வரை கொலம்பியாவின் மத்திய, மற்றும் கிழக்குப் பகுதிகளில் தாக்குதல்களை நடத்திய FARC கெரில்லாக்கள் நாட்டின் ரெயில், பெருந்தெருக்கள் போன்றவற்றைச் சீர்குலைத்துவிட்டு காட்டுக்குள் தலைமறைவாகிவிட்டனர்.


> **200—க்கும் மேற்பட்ட கெரில்லாக்கள் நவீன ஆயுதங்களுடன் உருமறைப்புச் செய்தபடி நகரப் பகுதிகளுக்குள் நுழைந்தனர். மிகவும் கச்சிதமான திட்டமிடலில் சில மணி நேரங்களுக்குள் பல பொலிஸ் இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களை நடத்தினார்கள்**

> **இதேவேளை வேறொரு கணிப்பீடு, மெக்சிக்கோதான் உலகின் நான்காவது ஆகக் கூடிய கோடீஸ்வர்களைக் கொண்ட நாடு என்று கூறுகின்றது**

இலத்தீன் மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளுக்கு நீண்ட கால கெரில்லா போராட்ட அனுபவம் இருக்கின்றது. அதிலும் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு விதமான முதலாளித்துவ அடக்குமுறைச் சரித்திரம் இருந்துள்ளது. 1960-களிலும் 70-களிலும் மிகவும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்த கெரில்லா போராட்டங்கள் 80-களின் ஆரம்பத்தில் இப் பிராந்தியத்தில் ஏற்பட்ட பல அரசியல் மாற்றங்களால் வேறு வடிவங்களுக்கு மாற்றம் கண்டன. சில நாடுகளின் விடுதலை அமைப்புக்கள் அரசியல் கட்சிகளாக புது வடிவம் எடுத்தன. இன்று மீண்டும் இப் பிராந்தியத்தில் பல நாடுகளில் கெரில்லா நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. நாம் மேற்கூறிய கொலம்பியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளைவிட பேரு நாட்டிலும் பல காலமாக இயங்கி வந்து, அதன் தலைவர் சுடப்பட்டதால் கடந்த இரண்டு வருடங்களால் இயங்காதிருந்த 'ஷைனிங் பாத்' அமைப்பு இவ் வருட ஆரம்பத்தில் மீண்டும் புத்துயிர் பெற்று தலைநகர் லீமாவிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பல தாக்குதல்களை அரசுக்கெதிராக நடத்தியுள்ளது.




ஏற்கெனவே முதலாளித்துவ அடக்குமுறைக்கு எதிராக போராட்டம் நடத்தி வெற்றி பெற்றிருந்த லத்தீன் அமெரிக்க மக்கள் மீண்டும் நீண்ட காலத்தின் பின் அதே வழியைத் தேர்ந்தெடுத்துள்ளது, இப் பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள புதிய முதலாளித்துவ அடக்குமுறையின் அடையாளமாகக் கருதப்படுகின்றது. கெரில்லாப் போராட்டத்தினால் லத்தீன் அமெரிக்காவில் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட்ட போது இருந்ததைவிட இன்றைய லத்தீன் அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் சீர்கெட்ட நிலையிலுள்ளதை இப் பிராந்திய பொருளாதார நிபுணர்களே ஒத்துக்கொள்கிறார்கள். லத்தீன் அமெரிக்காவின் புதிய அரசியல் பொருளாதார சீர்திருத்தக் கொள்கையே இப் பிராந்தியத்தின் இன்றைய, நிலைக்கு முக்கிய காரணமாகின்றது. புதிய பொருளாதார சீர்திருத்தத்தினால் பணக்காரனாக இருக்கும் ஒருவன் மேலும் பணக்காரனாகும் அதேவேளை, நடுத்தர வர்க்கத்தினர் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அப்படியானால் ஏழைகளின் நிலையைப் பற்றி கூறவே தேவையில்லை. இந்தப் பொருளாதார சீர்திருத்தமே இப் பிராந்தியத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகப்படுத்தியுள்ளது.


அரச எதிர்ப்பு போராட்டத்தின்போது காயம்பட்ட மெக்சிக்கோ விவசாயி

அத்துடன் பொகோட்டாவின் இளம் தலைமுறையினர் விபச்சாரத்தில் ஈடுபடுவதற்கும், தொழிற்சாலை அதிபர்கள் வாடகைக் கார் சாரதிகளாக மாற்றம் பெறுவதற்கும், பல விவசாய குடும்பத் தலைவர்கள் தமது குடும்பத்திற்கு உணவு கொடுக்க போதைப்பொருள் தாவரமான 'கொக்கா' பயிரிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவதற்கும் இதுவே காரணமாக உள்ளது. இப் பிராந்தியத்தின் 10 பேருக்கு 4 பேர் மிகவும் குறைந்த ஊதியத்திற்கே வேலை செய்வதாக அண்மைக்காலக் கணிப்பீடுகள் கூறுகின்றன. இதே வேளை வேறொரு கணிப்பீடு, மெக்சிக்கோதான் உலகின் நான்காவது ஆகக் கூடிய கோடீஸ்வர்களைக் கொண்ட நாடு என்று கூறுகின்றது.

இப்படியான இரண்டு வேறுபட்ட சமூக அமைப்புக்கள் இலத்தீன் அமெரிக்காவில் தோன்றியுள்ளதன் காரணமாக புதிய முதலாளித்துவ அடக்குமுறைக்கெதிராகக் கிளர்ந்தெழும் விடுதலை அமைப்புக்களுக்கு சாதாரண மக்கள் மத்தியில் பெருத்த ஆதரவு இருப்பதிலும் இம் மக்கள் மத்தியிலிருந்து தாக்குதல்களை நடாத்தும் அமைப்புக்கள் வெகு சீக்கிரத்திலேயே தலைமறைவாகி மக்களுக்குள் ஐக்கியமாவதிலும் வியப்பொன்றுமில்லையே.


மெக்சிக்கோ பொலிசார்

**உதயன்**

KANNA Imports & Exports Ltd.

(New Ambiha Supermarket)


198 Archway road, London N6 5B13 (Archway கோவிலுக்கு அருகாமையில்)

இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான, உங்களுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் மலிவாகவும் விரைவாகவும் உங்கள் வியாபார நிலையங்களுக்கு (ஐரோப்பிய நாடுகள் அனைத்திற்கும்) விநியோகிக்கப்படும்

தொடர்புகளுக்கு: Tel. & Fax: 0181-348 3356

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் சர்வோதயா அருச்சுனனை பல்கலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

## உங்கள் கை வண்ணம்

### இவ் வாரக் கைவண்ணம்




**செல்வன். வி. கிருசாந்தன்**

வயது: 11

இடம்: பாசல், சுவிற்சர்லாந்து

கிளி



பொதுவாக பறவைகளின் அழகைப் பார்த்துக் கொண்டே-யிருக்கலாம். பறவைகளில் பல இனங்கள் உண்டு. அவற்றில் கிளியும் ஒரு பறவை. பொதுவாக நாம் காணும் கிளிகள் பச்சை நிறம் உடையவை. அவற்றின் அலகுகள் வளைந்-திருக்கும். பழங்களையும், விதைகளையும் கொத்தி உண்பதற்கு ஏற்றவாறு அவற்றின் அலகுகள் அமைந்திருக்கின்றன. அவற்றின் கால்விரல்கள் வளைந்து இருப்பதால், கிளைகளைப் பற்றிக் கொள்ள இலகுவாக இருக்கும். கிளிகளை வீடுகளில் கூண்டில் அடைத்து வைத்திருப்பார்கள். கிளியில் பல இனங்கள் உண்டு. பஞ்சவர்ணக்கிளியில் ஐந்து நிறங்கள் உண்டு. கிளிகள் மரங்களில் கூடு கட்டி வாழும். இவற்றுக்கு பேசக் கற்றுக் கொடுத்தால், பேசும் இயல்புடையவை.




**செல்வி. ந. நனுஸா**

வயது: 10 (27.07.1985)

இடம்: Mulheim Rurr, Germany.





நிலா

நிலா நிலா ஓடி வா
தமிழ்க் தாய் குழந்தைகள்
தலைநிமிர்ந்து வாழ்ந்திட
அகதி என்ற சொல்லைவிட்டு
தமிழ் ஈழம் கொண்டுவா.

## திலீபன் அண்ணாவின் தியாகம்

பிள்ளைகளே! உங்களில் பலர் திலீபன் அண்ணாவைப் பற்றி அறிந்திருப்பீர்கள். இப்பொழுது தமிழீழ மக்களாலும், உலகெங்கும் வாழுகின்ற தமிழர்களாலும் தியாகச் சுடர் திலீபன் அண்ணாவின் நினைவாக பல நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

திலீபன் அண்ணா யார்?

தமிழீழ நாட்டையும், தமிழீழ மக்களையும் காப்பாற்றுவதற்காக சாகும் வரை ஒரு சொட்டு தண்ணீர்கூட குடிக்காமல் உண்ணாவிரதம் இருந்து உயிர் நீத்த தியாகியாவார். இவர் தமிழ் மக்களையும், தமிழீழ நாட்டையும் மிக உயர்வாக நேசித்தார். தமிழீழ சிறுவர்களும் குழந்தைகளும்கூட திலீபனை "மாமா... மாமா..." என அன்போடு சுற்றி வந்தார்கள்

1987-ம் ஆண்டு தாங்கள் 'அமைதிப் படை' என்று கூறிக்கொண்டு தமிழீழத்திற்கு வந்திறங்கிய இந்திய அந்நியப்படைகள் தமிழீழ மக்களைக் கொடுமைப் படுத்தின. இதனைப் பொறுக்காத திலீபன் அண்ணா, இந்தியப் படைகளுக்கு எதிராக அகிம்சைப் போர் தொடுத்தார்.




இந்திய அரசு திலீபன் அண்ணாவின் உண்ணாவிரதப் போராட்டத்தை கருத்தில் எடுக்காது மெல்ல, மெல்ல அந்த மாவீரன் சாவதைப் பார்த்துக் கொண்டிருந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் கதறியழ, 12 நாட்களின் பின் திலீபன் அண்ணா தியாக மரணம் அடைந்தார்.

எதிர்வரும் 26.09.96 திலீபன் அண்ணாவின் நினைவு தினமாகும்.

மருமக்களே! அந்தத் தியாகியை நாம் நினைந்து போற்றுவோமாக. உங்கள் அம்மா அப்பாவிடம் திலீபன் அண்ணாவைப் பற்றி மேலும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்.

## விடுமுறை நாட்கள்......

தனது விடுமுறை நாட்களைப் பற்றி எழுதி அனுப்பியவர்



**செல்வி. தீபா தியாகலிங்கம்**

வயது: 10 (18.04.86)

Mulheimander Ruhr, Germany.

நான் இம்முறை அம்மா, அப்பா, தம்பியுடன் சுவிஸ் லாந்துக்குச் சென்றேன். அங்கு கூரில் (Chur) உள்ள எனது அத்தார் வீட்டில் தங்கினேன். அங்கு வீமாலா (Viamala), அரோசா (Arosa), லுகானோ (Luano), ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபை, சபேசனில் (Sabesan) உள்ள நீர்வீழ்ச்சி இப்படிப் பல கண்ணுக்கு இனிமையான காட்சி-களைப் பார்த்தேன். அன்பின் சகோதர சகோதரிகளே உங்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் போது இவற்றையும் போய்ப் பார்க்கவும். இவற்றை நான் தமிழில் எழுது-வதற்கு உதவியாக இருந்த எங்கள் தமிழாலயத்துக்கு முதல் கண் நன்றியைத் தெரிவித்து விடை பெறுகின்றேன்

இப்படிக்கு:

தி. தீபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகலிட நிகழ்வுகள்

## தமிழீழம் இசைக்குழு பதக்கம் வென்றது

அனைத்துப் பிரிவுகளுக்குமிடையே நடைபெற்ற போட்டிகளில் இடம் பெற்றபாடல்களுக்கு ஜேர்மனி தமிழீழ இசைக்குழு இசைவழங்கியது. விடுதலைக்காகவே கானம் இசைக்கும் தமிழீழம் இசைக்குழு கலைஞர்கள் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தங்கப்பதக்கமும், பூச்செண்டும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். த.பு.கழக பொறுப்பாளர் திரு இ.ஆனந்தராஜா இவற்றை வழங்கினார்.

ஜேர்மனி தமிழீழ இசைக்குழு கலைஞர்களை ஜேர்மனி விடுதலைப் புலிகள் கலைபண்பாட்டுக்கழக பொறுப்பாளர் கா.சிவநாதன் பாராட்டிப் பேசினார். விடுதலைக் கானம்பாடி இசை நிகழ்ச்சி மொத்தத்தில் விடுதலை உணர்வை மேலோங்கச் செய்தது என்பதில் எவ்வித கருத்து வேறுபாடும் இல்லை.

## தமிழருவி இசைவிழா 96 போட்டி முடிவுகள்

**கடந்த 31.08.96 அன்று ஜேர்மனி எசன் மாநகரில் தமிழ் அருவிப் பத்திரிகை நடாத்திய ஐரோப்பா ரீதியிலான மாபெரும் இசைப் போட்டி முடிவுகள்.**

**சிறந்த இசைக்குழு : 1. சுப்பர் பிறின்ஸ் – ஜேர்மனி**
2. யாழிசை – நோர்வே
3. யங்ஸ்ரார்ஸ் – முன்சன்கிளட்பாக், ஜேர்மனி

**சிறந்த பாடகி: 1. செல்வி வனஜா கிறேகர் (யங்ஸ்ரார்ஸ்)**
2. செல்வி தருண்யா (பேர்லின் சஹானா)
3. திருமதி. சாந்தி தயாபரன் (சுப்பர் பிறின்ஸ்)

**சிறந்தபாடகர் 1. திரு அன்ரன் டேவிட் (யாழிசை – நோர்வே)**
2. செல்வன் எமிலியானுஸ் (பட்டு)
3. செல்வன் சுதன் (சுப்பர் பிறின்ஸ்)

**சிறந்த கீபோட் : செல்வன் பிறின்சன் ராஜா (சுப்பர் பிறின்ஸ்)**
சிறந்த கிற்றார் : திரு கணேஷ் (யாழிசை)
சிறந்த தபேலா : திரு.ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
சிறந்த ட்றம்மர் : திரு வி.சி. டானியல் (யுலாண்ட் டென்மார்க்)

**சிறந்த பாண்ட்வாத்தியம்: செல்வன் மதன் (யங் ஸ்ரார்ஸ்)**

**சுயமாக இசையமைத்துப் பாடிய இசைக்குழுக்களில் சிறந்த இசைக்குழுவாக யுலாண்ட் (டென்மார்க்) தெரிவானது.**

பாடியவர்களில்...

**சிறந்த பாடகர் 1. செல்வன் உதயன் (யங்ஸ்ரார்ஸ்)**
2. திரு பாக்கியராஜ் (யுலாண்ட் டென்மார்க்)
3. செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)

**சிறந்த குழந்தை நட்சத்திரங்கள்**
1.செல்வன் அசோக் குலதாசன் (முத்துக்கள் மூன்று)
2. செல்வி பிறஷ்லா ராஜா (சுப்பர் பிறின்ஸ்)
2. செல்வன் ஆனந்த் குலதாசன் (முத்துக்கள் மூன்று)

வெற்றியீட்டிய கலைஞர்களுக்கு தமிழருவிக் கேடயங்களும், பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சிகளில் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளும் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தமிழீழத்தில் யுத்தத்தினால் காயமுற்ற சிறுவர்களுக்காக நாலாயிரம் டொச் மார்க் கையளிப்பதாக அறிவிக்கப்பட்டது.

## ஜேர்மன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் விடுதலை கானம்பாடி-96

விடுதலை கானம்பாடும் பாடகர்களை ஒன்றுதிரட்டி மாபெரும் சாதனை ஒன்றை ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்தியுள்ளது. விடுதலைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்தும், பாட்டுப் போட்டிகளை நடத்தலாம் என்ற புதிய விதி ஒன்றையும் அது வகுத்துள்ளது.



ஜேர்மனி எசன் நகரில் நடைபெற்ற இப் போட்டியின்போது நான்கு பிரிவுகளிலும் விடுதலை கானம்பாடிகள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். முதலாவதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நான்கு பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கும் புனர்வாழ்வுக்கு கழக இலச்சினை பொறிக்கப்பட்ட தங்கப் பதக்கங்களும், சான்றிதழ்களும். பட்டயங்களும் வழங்கப்பட்டன. இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களுக்கு பட்டயங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் நடைபெற்ற இப் போட்டிகளில் நடுவர்களாக மாதினி சிறீஸ்கந்தராஜா, குமுதினி செல்வராசா, நாகேஸ்வரி பிரமானந்தா ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் மூவரும் ஜேர்மனி புனர்வாழ்வுக்கழகத்தின் சார்பில் திருமதி காங்கேயமூர்த்தியினால் மலர்ச்செண்டு கொடுத்து கௌரவிக்கப் பட்டனர்.

நடுவர்களில் ஒருவரான மாதினி சிறீஸ்கந்தராசா உரையாற்றும்போது, ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்மாதிரியைப் பாராட்டினார். சுதந்திரம் என்பது எல்லா தரத்தினருக்கும் பொதுவானது. சுதந்திரமாக வாழ அனுமதி மறுக்கப்படுமேயானால் போராட்டம் என்பது தானே உருவாகிவிடும். எமக்கென்று சில உரிமைகள் உண்டு. வெளி நாடுகளுக்கு வந்ததும் எமது கலாச்சாரங்களை விட்டுவிடுகிறோம். இந்தக் கானம்பாடி நிகழ்ச்சி எமது கலாச்சாரத்தை வளர்க்கின்றது, அத்துடன் இசைத்துறையில் புதிய பரிணாம வளர்ச்சியொன்றை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

கானம்பாடி போட்டியில் முதலில் கீழ்ப்பிரிவுக்கான போட்டியில் சிறுவர்கள் கலந்து கொண்டனர். விடுதலைப்



சேர்ந்துபாடல்: தேனுகா காந்தராசா, கமலாதேவி காந்தராசா

பாடல்களை வீரமுடன் பாடிய சிறுவர்களில் சிவராம் சிவன் ஜீவ் முதலிடத்தைப் பெற்றார். இணைகுரல் பாடற் போட்டியும் மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்றது. அவர்களில் கமலாதேவி காந்தராஜா, தேனுகா காந்தராஜா ஆகியோர் சிறந்த இணைக்குரல் பாடகர்களாக தெரிவாகினர்.


விடுதலைப் பெண் கானம் பாடி போட்டி கடுமையாக இருந்தது. எல்லோரும் நன்றாகப் பாடினராயினும் துஷியந்தி நவலேஸ்வரன் முதலாம் இடத்தைப் பெற்றார். ஆண்களுக்கான கானம்பாடி யார் என்பதில் நடுவர்களுக்கே சிக்கல் ஏற்படும் போட்டியாக அமைந்தது. அதிக எண்ணிக்கையில் போட்டியாளர்கள் கலந்து கொண்டபோதும் குணரத்தினம் குமாரச்சந்திரன் சிறந்த பாடகராகத் தெரிவானார்.

கானம்பாடிகளாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு த.பு. கழக பொறுப்பாளர் திரு இ.ஆனந்தராஜா பரிசில்களை வழங்கினார்.

## ஜேர்மனியில் உலகத் தமிழர் இயக்கம் நடாத்திய செய்தி மேசைப் பிரச்சாரம்



ஜேர்மனி உலகத் தமிழர் இயக்கம் பிறேமவேட நகரில் செய்தி மேசை ஒன்றை அமைத்து, ஈழத்தமிழர்களின் நிலை பற்றி ஜேர்மனியர் மத்தியில் பிரச்சாரம் செய்தது. மேற்படி நகரில் நடைபெற்ற வளர்ந்தோருக்கான உயர் கல்விக் கூடத்தின் திறப்புவிழாவின் போது ஏராளமான ஜேர்மன் பிரமுகர்களும், பொது மக்களும் ஒன்று கூடினார்கள். அங்கு உலகத் தமிழர் இயக்கம் தமிழர்கள் ஈழத்தில் படும் இன்னல்களை எடுத்




துக் கூறும் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தது.

ஜேர்மனியர்கள் ஆர்வத்துடன் அவற்றை வாசித்ததுடன் மேலதிக விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொண்டனர். ஈழத்தமிழர்களின் பிரச்சனை தீர தமிழீழமே ஒரே வழி என்ற கருத்து அங்கே முன்வைக்கப் பட்டது.

இந் நிகழ்ச்சியின் போது பிறேமவேட தமிழாலய நடன மாணவிகளான செல்விகள் சுபாஜினி. இரத்தினம், சுரேகா இரத்தினம், துளசி இந்திரன், சந்திரிகா சிவசுப்பிரமணியம், நிரூஜா சிவசுப்பிரமணியம் ஆகியோர் நடத்திய நடன நிகழ்ச்சி ஜேர்மனியர்களை பெரிதும் கவர்ந்தது.

(தொடர்ச்சி 25ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவிஸ் சைவத் தமிழ்ச் சங்கம்
## சனீஸ்வர விரதம்
## தாதுவருடம் - 1996

**விரத நாட்கள்**

21.09.96 முதலாம் சனிக்கிழமை
28.09.97 இரண்டாம் சனிக்கிழமை
05.10.96 மூன்றாம் சனிக்கிழமை
12.10.96 நான்காம் சனிக்கிழமை (பூர்த்தி)

அடியார்களின் நலன் கருதி ஆலயம் இவ் விரத தினங்களில் முற்பகல் 10.00 மணியிலிருந்து இரவு 21.00 மணிவரை திறந்திருக்கும். சனிபகவானிற்கு எள்ளெண்ணை தீபமேற்றுவதற்கு தேவையான பொருட்கள், அர்ச்சனைப் பொருட்கள் என்பன ஆலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

24.09.96 செவ்வாய் பிரதோஷ விரதம்
25.09.96 புதன் நடேசரபிஷேகம்
27.09.96 வெள்ளி தென்புலத்தார் என்று அழைக்கப்படும் பிதிர்களுக்கான மஹாளய பட்சாரம்பம்.

தொடர்புகளுக்கு: 01 462 13 49, 089 405 22 09.



## சுவிசில் மாபெரும் நாடகப் போட்டி

தமிழர் புனர்வாழ்வுப் கழக நிதிக்காக
சைவத் தமிழ்ச் சங்கம் நடாத்தும்
**'அற்றார் அழிபசி தீர்த்தல்'**

காலம்: 04.01.1997 சனிக்கிழமை
HOTEL LIMMAT
Limmat Str-118, 8005 Zurich இல் நடைபெறும்.
விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:
Saiva Thamil Sangam, Wehntaler Str-293, 8046 Zurich.
மேலதிக விபரங்களுக்கு: 089 40 52 209, 01 462 13 49, 01 362 27 55 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.





08.09.96 இல் சுவிஸ் ஜெனீவாவில் நடைபெற்ற புனர்வாழ்வுக் கழக முத்தமிழ் விழாவில் வில்லுப்பாட்டு (விடுதலைப் புலிகள் மகளிர் அணியினர் – சுவிஸ் கிளை)


## அதிர்ஸ்டலாபச் சீட்டிழுப்பு
**(நெதர்லாந்து)**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நெதர்லாந்துக் கிளையினரால் 21.09.96 ஞாயிறு புனர்வாழ்வுக் கலைமாலையில் மக்கள் முன் குலுக்கப்பட்டது.

**அதிர்ஸ்டசாலிகளின் பற்றுச்சீட்டு இலக்கங்கள்**

1ம் பரிசு 1701
2ம் பரிசு 0162
3ம் பரிசு 1484

20 ஆறுதல் பரிசுக்குரிய பற்றுச்சீட்டு இலக்கங்கள்:
1240, 0602, 1189, 1952, 0569, 0929, 1499, 1426, 0546, 1269, 1967, 1204, 0503, 1463, 0781, 1239, 1226, 1477, 0440, 1777

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்: 072-56 44442

*தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நெதர்லாந்துக் கிளை*


(24ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் அந்நிகழ்ச்சியின் போது லூஸ்மாஸ்டர் ஐசாக் இன் பராஜாவின் நகைச்சுவையும் இடம் பெற்றது. பாட்டுப் போட்டியின் இடையில் வந்து அனைவரையும் வயிறு குலுங்கச் சிரிக்க வைத்துக் கொண்டிருந்தார்.

பாட்டுப் போட்டியின் இறுதியில் அனைவரையும் மெய்மறக்கச் செய்யும் நடனம் ஒன்றை ஜேர்மனி விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக் கழகம் வழங்கியது. பண்பாட்டுக் கழக நடன ஆசிரியர்களான செல்வி. பவித்திரா செல்வகாந்தன், யாமினி சர்வானந்தன், சுகன்யா சிவசுதன் ஆகியோர் மேற்படி நடன அமைப்பை தயாரித்தனர்.

# சுவிசில் முரளியின் விடுதலை கோரி நடைபெற்ற பிரச்சாரப் போர்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சுவிஸ் பிரதிநிதி திரு.நடராஜா முரளீதரனை விடுதலை செய்யக் கோரி தமிழீழம் ஒருமைப்பாட்டு அமைப்பினால்

இப் போராட்டத்தின்போது முரளியின் விடுதலையின் அவசியம், கைதுக்கான பின்னணி போன்றவற்றை விளக்கும் வகையிலான 125,000 இற்கும் மேற்

அன்று மாலை 4.00 மணிக்கு முரளிதரன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிறைச் சாலைக்கு அண்மையில் நடத்தப்பட்ட ஒன்றுகூடலில் இப்




10.09.96 இல் சுவிஸ் சூரிச்சில் நடந்த பிரச்சாரப் போரில்... (முரளிதரனை விடுதலை செய்) (10.09.96 இல் இருந்து 16.09.96 வரை)

கடந்த 10.09.96 முதல் 16.09.96 வரை சுவிஸ் சூரிச் நகரில் நடாத்தப்பட்ட பிரச்சாரப் போரில் சுழற்சிமுறையில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். திரு. முரளிதரனின் படமும், அவரை விடுதலை செய்யக் கோரிய வாசகமும் பொறிக்கப்பட்ட ரீ சேட் அணிந்து புதிய முறையில் நடத்தப்பட்ட போராட்டத்தில் சுவிசின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் சுழற்சி முறையில் கலந்து கொண்டனர். இப் போராட்டத்தில் சில சுவிஸ் மக்களும் ரீ சேட் அணிந்து கலந்த கொண்டது குறிப்பிடத்தக்கது.

பட்ட துண்டுப் பிரசுரங்களும் சுவிஸ் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டதுன. நூற்றுக்கண்க்கான தமிழர் அல்லாத சுவிஸ் நாட்டு ம்க்களும் தமிழீம் ஒருமைப்பாட்டு அமைப்பில் அங்கத்தவர்களாக இணைந்து கொண்டதோடு, பல நூற்றுக்கணக்கான மக்கள், முரளிதரனின் நீதிக்குப் புறம்பான கைது மற்றும் தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

ஒரு வார காலமாக காலை 7.00 மணி முதல் மாலை 7.00 மணிவரை நடத்தப் பட்ட இப் பிரச்சாரப் போரின் இறுதி நாளான 16.09.96 திங்கட்கிழமை

பிரச்சாரப் போரின் அவசியத்தையும் வெற்றியையும் விளக்கும் வகையில் அமைப்பின் தலைவர் த.கெங்காதரன், தமிழீழ விடுதலைப் புலிகள் சுவிஸ் கிளை ஒருங்கிணைப்பாளர் த. மகேந்திரராசா, சூரிச் பணிப்பாளர் சி.கணேசதாஸ், சுவிஸ் அனைத்துத் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் தலைவர் அன்ரன் பொன்ராசா ஆகியோர் உரைநிகழ்த்தினர். இப் பிரச்சாரப் போரிற்கும் இறுதியாக நடைபெற்ற ஒன்று கூடலிற்கும் சில பத்திரிகைகளும், சூரிச் தொலைக் காட்சியும் முக்கியத்துவம் கொடுத்து செய்திகள் வெளியிட்டன.

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் – பிரான்ஸ் முதற் தடவையாக நடாத்திய 'தலைவர் வெற்றிக் கிண்ணம்–96' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒகஸ்ட் மாதம் 11ம் திகதி, பாரிஸ் 19ல் அமைந்துள்ள Stade Jules Lado-meque மைதானத்தில் நடைபெற்றது.

ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனத்தில் அங்கம் வகிக்கும் 9 கழகங்களைச் சேர்ந்த 11 அணிகள் கலந்துகொண்டன.

இறுதியாட்டத்தில் பாடும்மீன் விளையாட்டுக்கழக சிவப்பு அணியும் ஞானோதயா விளையாட்டுக் கழகமும் மோதின.

வழங்கப்பட்ட மேலதிக நேரத்தின்போது பாடும்மீன் சிவப்பு அணி 1 கோல் போட்டு வெற்றியீட்டிக்கொண்டது.

பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த பு. நிக்சன், ஞானோதயா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த ஜெகன், பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த லூசியன் ஜெயதாஸ் ஆகியோர் முறையே 1ம், 2ம், 3ம் இட சிறந்த வீரர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டனர்.

ஈழவர் விளையாட்டுக்ழகத்தைச் சேர்ந்த உமாபாலன் சிறந்த குறைந்த வயது வீரர் வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றார்.

திரு. திருமதி சந்திரக்குமார் அவர்கள் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீர அஞ்சலி

வீரப் பிறப்பு: 21 - 07 - 1965

வீரச் சாவு: 25 - 09 - 1992



மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி

## லெப். கேணல் சுபன்

(விநாசித்தம்பி சுந்தரலிங்கம் - கள்ளியடி, இலுப்பைக்கடவை, மன்னார்)

இவருடன் வீரமரணமடைந்த
லெப்டினனட் தமிழேஸ்வரன், லெப்டினனட் அறிவுடையான், இரண்டாம் லெப்டினனட் பன்னீர்ச் செல்வன், இரண்டாம் லெப்டினனட் சுருளி, வீரவேங்கை வெடியரசன்வ வீரவேங்கை இயல்வாணன் ஆகியோருக்கும்

## எமது வீர அஞ்சலிகள்

மாவீரரே!
உம் அன்னை மடியில்
இறுதி முத்தம் பதித்தீரோ
இலட்சிய வேள்விக்காய்
இறுதித் துளி இரத்தமும்
கொடுத்தீரோ!

எம் மன்னவரே
உங்கள் பொன்முகம்
நினைத்துச் சொல்கிறோம்
உங்கள் அன்னைமண் விரைவில்
விடுதலை பெறும்! அதில்
உங்கள் கல்லறை நிமிர்ந்தெழும்!

– குடும்பத்தினர் (பிரான்ஸ்)
47 81 97 86

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பெண்கள் பலவிதம்

## அலர் அகவைப் பருவத்தில் தாய்மை அடையலாமா?

உடலியற் தொழிற்பாட்டின் படி ஒரு பெண்ணானவள் பருவமடைவதானது அப் பெண் தாய்மை அடைவதற்கு தயாரான நிலைமையை அறிவிக்கின்ற போதிலும் மருத்துவ ரீதியான காரணங்கள் அச் சிறிய வயதிலே தாய்மை அடைவதனை எச்சரிக்கின்றன என்றே கூறமுடியும்.

இதன் காரணமாகத்தான் சட்டப்படி பெண்கள் திருமணம் புரிவதற்கு வயதுக் கட்டுப்பாடு உண்டு. தற்போது 18 வயதினை திருமண வயதெல்லையாக கொண்டிருக்கும் நாடுகள் கூட அவ்வெல்லையை 21 வயதாக உயர்த்துவதற்கு ஆலோசித்து வருகின்றன.

மருத்துவ ரீதியான காரணங்கள் இதற்கு ஆதாரமாக முன்வைக்கப்படுகின்றன. அலர் அகவைப் பருவத்திலோ அல்லது 21 வயதிற்கு முன்னரோ ஒரு பெண் தாய்மையடையும் போது பல்வேறான பேற்றுச் சங்கடங்களையும் எதிர்நோக்க வேண்டிவரும். இவ்வாறான கர்ப்பிணிகளிடம் கருச்சிதைவு, இரத்த அழுத்தம், அதீத இரத்தச் சோகை, பேற்றுத் திணறல் போன்றன அதிகமாகக் காணப்படுகின்றன.

புள்ளிவிபரங்களின்படி இள வயது கர்ப்பிணிகளில் 46 சதவீதத்தினர் பேறு காலத்தின் போது அவஸ்த்தைகளுக்கு உள்ளாவதாகவும் இதில் 23 சதவீதத்தினர் அறுவைப் பேறுக்கும் ஆளாகின்றனர். அத்துடன் அவர்களுக்கு பிறக்கும் சிசுக்களும் பாதிப்படைகின்றன.

இவ்வகையான பிரசவத்தின் போது தாயின் உடல் நிலை கருதியோ அன்றி சேயின் உயிர் காக்கும் நோக்குடனேயே அறுவைப் பேறு மேற்கொள்ளப்படுகின்றது. அறுவைப் பேறு மேற்கொள்வதினால் கருப்பை பலவீனமாகிவிடுகிறது என பலரும் எண்ணிக்கொள்கிறார்கள் அது தவறான விளக்கமாகும். ஆனால் தாயினதும், சேயினதும் நலன் கருதி அடுத்த குழந்தை பிறப்பதற்கு சில ஆண்டுகள் குறைந்தது 3 ஆண்டுகள் இடைவெளி விட்டே ஆகவேண்டும்.

இவ்வாறான சிக்கல்களை முற் கூட்டியே தவிர்க்க வேண்டுமானால் இருபதுகளின் நடுப் பகுதியில் குழந்தை பெற்றுக் கொள்வதே சிறப்பானதாகும்.

அமெரிக்கா போன்ற நாடுகளில் அலர் அகவை பருவப் பேறுகள் வகைதொகையின்றி பெருகி வருகின்றன. இதில் பெரும்பாலானவை சட்டவிரோதமாகவே நடைபெறுகின்றன. கல்வி கற்க வேண்டிய பருவத்தில் பலர் தாயாகி விடுவது பெரும் பூதாகாரமான நிலைமைகளை தோற்றுவிக்கின்றன. இவ்வாறான சீரழிவுகள் எம்மிடையே இல்லாவிடினும் அலர் அகவை திருமணங்கள் சில பெற்றோர்களினால் நடாத்தி வைக்கப்படுகின்றன. எனவே மருத்துவ ரீதியான காரணங்களை முன்வைத்து தாய்மை அடைவதற்கு உரிய காலத்தின் போது கருத்தரிப்பது தாய்க்கும், சேய்க்கும் நன்மை விளைவிக்கும்.

**தொகுப்பு:**
***வர்ஷிகா - வைஷ்ணவி***

## அழகுராணிப் போட்டியை எதிர்க்க பெண்கள் தற்கொலைப் படை



அடுத்தமாதம் கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூரில் உலக அழகு ராணிப் போட்டி நடத்துவதையிட்டு பெரும் எதிர்ப்புக்கள் கிளம்பி வருகின்றன. கர்நாடக பெண்ணுரிமைச் சங்கங்கள் முழுமூச்சாக இப் போட்டி நடைபெறுவதை எதிர்க்கின்றன.

இதில் முன்னணி அமைப்பான எம்.ஜே. அணி இதற்காக தற்கொலைப் படைப்பிரிவு ஒன்றையும் உருவாக்கியுள்ளது. திட்டமிட்டபடி பெண்களை இழிவு செய்து அவர்களை அரைகுறை ஆடையுடன் வலம் வர வைக்கும் இவ்வாறான அழகுராணிப் போட்டி நடைபெறுமேயானால் இத் தற்கொலைப் படைப் பிரிவினர் ஆங்காங்கே தம்மைத்தாமே தீமூட்டித் கொள்வார்கள் எனவும் இச் சங்கம் எச்சரித்துள்ளது.

இச் சங்கத்தின் பேச்சாளரான சசிகலா கருத்துத் தெரிவிக்கையில் 'இந்தியக் கலாச்சாரத்தை காப்பதற்காக நம்மை நாமே தீமூட்டப் போகிறோம்' என்றார்.

இதே வேளை இப் போட்டியை முன்னின்று நடத்தப் போகும் பிரபல நடிகர் அமிதாப்பச்சனுக்கும் பெண்கள் அமைப்புக்கள் கடுமையான கண்டனங்களை தெரிவித்துள்ளன. அமிதாப்பச்சன் அந்நிய கலாச்சாரத்தின் ஏவல் எனவும் அவர்கள் வர்ணித்துள்ளனர்.

இந்த அழகுராணிப் போட்டியை முன்னின்று நடத்தும் அமிதாப்பச்சன் மீதும் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் பெண்கள் அமைப்புக்களிடம் குவிந்து வருகிறதாம்.

## அரசியலில் கலைஞருக்கு ஆலோசனை கூறுவேன்

### - தயாளு அம்மாள்

பிரபலமானவர்களின் பின்னால் பெண்களின் பங்கு கணிசமான அளவு உண்டு. ஆனால் அவர்களுக்கு உரிய இடம் சமூகத்தில் வழங்கப்படாமல்போவது துரதிஷ்டவசமானது.



தமிழக முதல்வர், கலைஞர் கருணாநிதியின் துணைவியார் தயாளு அம்மாள் ஆவார். ஒரு சிறப்பான குடும்பத் தலைவியாக தனது குடும்பத்தை வழிநடத்திச் செல்லும் இவர், அரசியலில் கூட கலைஞருக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த தயாளு அம்மாள் தந்தை பெரியார் மீதும் திராவிட கழக கொள்கைகளிலும் அபிமானம் கொண்டிருந்த காரணத்தால் கலைஞரைக் கரம்பிடித்தார்.

பேரறிஞர் அண்ணாத்துரையின் பிறந்தநாளே தமது திருமண நாளாக இருப்பதில் தயாளு அம்மாளுக்கு இரட்டிப்பு மகிழ்சியாம். இவரிடம் மாமியார், மருமகள் உறவு பற்றிக் கேட்ட போது தனது மாமியாருக்கு தன் மீது வெறுப்போ கருத்து வேறுபாடோ இருந்ததில்லை என்றும் அவ்வாறே மகன் ஸ்டாலினின் மனைவி துர்க்காவிடமும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது எனவும் வெளிப்படையாகவே கூறுகிறார்.

இவர் ஏழாம் வகுப்புவரையே கல்வி கற்றிருந்தாலும் கலைஞர் எழுதிய புத்தகங்களையும், சஞ்சிகைகளையும் விரும்பிப் படிக்கிறாராம். கலைஞரிடம் உங்களை கவர்ந்தது அரசியலா? இலக்கியமா என்று கேட்டதற்கு அவரது தமிழ்ப் பற்று ஒன்றே தனக்குப் பிடிக்கும் என்று கூறும் தயாளு அம்மாள், கலைஞருக்கு பிடித்த விடயம் எது என்றால் பொறுமை என்ற ஆபரணம் என்று கூறிச் சிரிக்கிறார் தமிழக முதற் பெண்மணி.


மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஸ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

**பிறப்பு: 15.05.1930**
**இறப்பு: 22.09.1996**

## முருகேசு குணரத்தினம்

**(ஓய்வுபெற்ற ஆசிரியர்)**


ஏழாலை வடக்கை பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு குணரத்தினம் அவர்கள் 22.09.96 அன்று பதுளையில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும், பவானி (ஆசிரியை - கொழும்பு), மாலினி (ஆசிரியை - யாழ்ப்பாணம்), வாசுகி (ஆசிரியை - பதுளை) குணரூபன் (சுவிஸ்), ஜெயரூபன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காருண்யாவின் பேரனுமாவார்.

இவரின் ஈமச் சடங்குகள் பதுளையில் 23.09.96 அன்று நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

குணரூபன் (சுவிஸ்) 062 72 39 165
ஜெயரூபன் (சுவிஸ்) 077 730 711

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



## கப்டன் சியாம் மாஸ்ரர் (சங்கிலியன்)
## தியாகராஜா உதயகுமார்

**வீர உதயம்: 08.08.1968** **வீர ஈகம்: 03.10.1995**

*சுதந்திர காற்றை சுவாசிப்பதற்காக*
*புலிவீரர் அணியில் புயலென பாய்ந்தவன்*
*தன்மான உணர்வுக்கு விலை பேசி வந்தவனை*
*களப்போரினிலே கதறிட வைத்தவன்*
*தமிழீழத்தின் விலை உயிர் ஈகம் என்றான் - அதனால்*
*ஈர்ந்து கொடுத்தான் - தன்னுயிரை சூரியக்கதிர் போரினிலே*
*தமிழீழ விதைக்கு உரமாக்கி சென்றுவிட்டான்*
*சுமக்கின்றோம் உன்கனவை நாமும்*
*உணர்வுடனே...*

அம்மா, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், பெறாமக்கள், மருமக்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள்.

தகவல்: T.வசந்தகுமார்
JODOKSGASSE - 586, 84028 LANDSHUT, GERMANY

# மணலாற்றுச் சமரில் வீரமரணம்

**பிறப்பு: 01.04.1978**
**வீரமரணம்: 27.08.1996**

## வீரவேங்கை இனியவன்

**(கனகரட்ணம் செல்வகுகன்)**

தெல்லிப்பளையைச் சேர்ந்த கனகரட்ணம் செல்வகுகன் அவர்கள் மணலாற்றுச் சமரில் வீர மரணமடைந்துள்ளார்.

இவர் கனகரட்னம், பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், செல்வகுமாரின் அன்புத் தம்பியும், இந்திராணியின் அன்பு மைத்துனரும், விசயனின் ஆசைச் சித்தப்பாவும், இராசரட்ணம் சகுந்தலாதேவி (யாழ்ப்பாணம்), செல்வரட்னம் சாரதாதேவி (கனடா) ஆகியோரின் பெறாமகனும், காலம் சென்ற ஐயாத்துரை பரமேஸ்வரி மற்றும் திருமதி பொன்னம்பலம் மகேஸ்வரி (கனடா), திரு. திருமதி காராளபிள்ளை இராஜேஸ்வரி (கனடா), திரு. திருமதி இராசலிங்கம் கனகேஸ்வரி (கனடா), திரு. திருமதி பத்மநாதன் இந்திராதேவி (கனடா) ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி. பொன்னையா சோதிப்பிள்ளையின் பேரனுமாவார்.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: அப்பா P.கனகரட்ணம்
Rott Str-4, 44793 Bouham, GERMANY.
தொலை பேசி இல: 0234 65508

# மரண அறிவித்தல்



**அன்னையின் அன்பு மடியில்: 17.10.1956**

**ஆண்டவனின் அவசர அழைப்பில்: 20.09.1996**

## திரு. கணேசு சரவணபவா (சரவணை)

**(புங்குடுதீவு - 4, தமிழீழம்)**

புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவருமான **திரு. கணேசு சரவணபவா** அவர்கள் பாரிஸில் 20.09.1996 அன்று மரணமானார் என்பதை ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர் காலஞ்சென்ற திரு. குமரேசு கணேசு, திருமதி. கணேசு நல்லம்மா (இராசமணி) ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. ஏரம்பு தம்பிப்பிள்ளை, திருமதி.தம்பிப்பிள்ளை சரோஜினிதேவி (முரசுமோட்டை) ஆகியோரின் அன்பு மருமகனும், திருமதி. சகுந்தலாவின் அன்புக் கணவரும், செல்வன். சிலம்பரசன், செல்வன். கவியரசன், செல்வி. ஆர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், திரு. மகாலிங்கம் (இன்னப்பெற்றல், ஜேர்மனி), திருமதி. மல்லிகாதேவி (கனடா), திருமதி. மகாலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி. காரின் (யேர்மனி), திரு. சொக்கலிங்கம் (கனடா), திரு. ஸ்ரீதரன், திருமதி. நடேஸ்வரி, திரு. பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. ஜெகதீசன், திருமதி. சாதனா ஆகியோரின் சகலனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் உற்றார், உறவினர்கள், நண்பர்களின் பார்வைக்காகவும், அஞ்சலிக்காகவும் தினசரி பகல் 1.00 மணி முதல் 3.30 மணி வரை 26.06.96 அன்று வரையும் Hopital Pite Salpetriere, 22, Rue Bruant, 75013 Paris. M°: Chevaleret என்ற முகவரியில் வைக்கப்படும். 27.06.96 காலை 7.30 மணியில் இருந்து 10 மணி வரை அதே முகவரியில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பின்னர் அங்கிருந்து தகனக் கிரியைக்காக (Crematorium de Père Lachaise, 75020 Paris. M°: Gambetta) மைதானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு 10.30 மணிக்கு தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: *குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்* தொடர்புகளுக்கு: *98, Rue J.P.Timbaud, 75011 Paris. Tel: 43 55 42 37*


(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உலகை உள்ளங்கைகளுக்குள் கொண்டுவரும் தொலைத்தொடர்புச் செய்மதிகள்

செய்மதி மூலமான தொலைபேசித் தொடர்புகளின் அவசியம் பற்றி அன்று மக்கள் பெருமளவில் அறிந்திருக்காத வேளையில் 19.07.1962ல் அமெரிக்காவினால் முதலாவது தொலைத் தொடர்புச் செய்மதி TEL STAR விண்வெளிக்கு ஏவப்பட்டது. இன்று பூமியை சுற்றி விண் வெளியில் 150 வரையிலான தொலைத் தொடர்பு செய்மதிகள் வலம்வந்து கொண்டிருக்கின்றன.




உலகின் முதலாவது தொலைத் தொடர்புச் செய்மதி

இவைகளின் மூலம் உலகின் ஒரு மூலையில் நடந்து கொண்டிருக்கும் ஒரு நிகழ்ச்சி, போர் போன்றவை உடனுக்குடன் மற்றைய பகுதிகளுக்கும் ஏன் உலகின் பெரும்பான்மையான மக்களும் கூட அறிந்துகொள்ள முடிகின்றது. இவைகளுடன் தொலைபேசிப் பரிவர்த்தனை, ஈ மெயில் எனப்படும் கணணித் தந்தி முறை, இன்ரர்நெட் தகவல் வலை போன்றவற்றிற்கு அத்திவாரமிட்டதே இந்தத் தொலைத் தொடர்புச் செய்மதிகள்தான்.

முதலில் 'டெல் சற்' செய்மதி விண்ணுக்கு ஏவப்பட்ட காலத்தில் அதன்மூலம் ஒரு நாளுக்கு சிலமணிநேரத் தொலை பேசித் தொடர்புகளே பெறக்கூடியதாக இருந்தது. இச் செய்மதியின் சக்தியை அதிகரிக்க முடியாத நிலையில் செய்மதிகளின் மூலம் அதிகரித்த பலனை அடைய வேண்டுமாயின் வேறு செய்மதிகள் அனுப்பப்பட வேண்டும் என்ற காரணத்தால் பரீட்சார்த்த ரீதியில் SYN COM-1 என்னும் செய்மதி ஏவப்பட்டது. ஆனால் அந்த முயற்சி தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து SYN COM-2 என்னும் செய்மதி 1963-ம் ஆண்டு யூலை 23-ம் திகதி ஏவப்பட்டது.

தொடர்ந்து இந்த வரிசையில் மூன்றாவது செய்மதி ஏவப்பட்ட போதுதான் உலகம் அதன் பலன்களை முதல் தடவையாகப் பெற்றுக் கொண்டது. இச் செய்மதியின் உதவியுடன் ஜப்பானில் நடந்த ஒலிம்பிக் போட்டியின் காட்சிகளை உலகம் அதிசயத்துடன் பார்த்தது. அன்று தொடங்கிய தொலைத் தொடர்புச் செய்மதிகளின் யுகம் இன்று உலகளாவிய ரீதியில் பல பில்லியன்கள் வருமானத்தை ஏற்படுத்தும் ஒரு வர்த்தகத் துறையாக மாறியுள்ளதுடன் தொலைத் தொடர்புத் துறையிலும் பாரிய சாதனைகளை ஏற்படுத்தி வருகின்றது.

60 களிலும் தொடர்ந்து வந்த காலங்களிலும் இன்டல் சற், இயூட்ல் சற் போன்ற செய்மதி தொடர்பு நிறுவனங்கள் உலகளாவிய ரீதியில் பல தொலை பேசி நிறுவனங்களின் உதவியுடன் தொலைபேசித் துறையை நவீன மயப்படுத்தியதுடன், சர்வதேச ரீதியில் தொலைத் தொடர்புப் பரிவர்த்தனையை மிக இலகுவாக்கின.



இரண்டு வெவ்வேறு விதமான உயரங்களில் சுற்றும் செய்மதிகள்


இந்த தொலைத் தொடர்பு முறைகளின் வரிசையில் தற்போது புதிதாக அறிமுகப்படுத்தப் பட்டுள்ள முறையான VSAT யினால் உலகெங்கும் உள்ள வர்த்தக நிறுவனங்கள் பெரும் பயனை பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பல நிறுவனங்களின் தலைமை அலுவலகங்களிலிருந்து இவ் VSAT முறையால் நேரடியாக செய்மதிகளுக்கு அனுப்பப்படும் செய்திகள், மிகவும் பின்தங்கிய கிராமங்களில் உள்ள தமது கிளைகளுக்கு கூட நேரடியாக உடனுக்குடன் அனுப்பப் படுகின்றன.

உதாரணத்திற்கு இந்தியாவை எடுத்துக் கொண்டால் மின்சார வசதிகள் இல்லாத, தரை ரீதியான தொலைபேசி வசதிகள் சரியாக இல்லாத கிராமங்களில் கூட VSAT முறையிலான செய்தித்தொடர்பு கிடைக்கக் கூடியதாக இருக்கின்றது. இன்று உலகில் பல தனியார் நிறுவனங்களும், அமைப்புக்களும் தமது சொந்தச் செய்மதிகளை விண்வெளியில் வைத்துள்ளன. இவை தவிர பல நாடுகளின் இராணுவ, உளவு நிறுவனங்கள் ஏராளமான உளவுச் செய்மதிகளையும் அண்ட வெளியில் உலாவ விட்டுள்ளன.

செய்மதிகளின் பலனை அனுபவிப்பவர்களை விடுத்து அதனை ஏவுபவர்களை எடுத்துக் கொண்டால் ஐரோப்பிய ஆரியான் விண்வெளி ஆய்வு நிறுவனம் முன்னணியில் நிற்கிறது. விண்வெளிக்கு ஏவப்படும் செய்மதிகளில் 60 வீதத்தை இந் நிறுவனமே அனுப்புகின்றது.

இதற்கு அடுத்த படியாக அமெரிக்க மக்டொனால்ட் டக்ளஸ், லொக்கீட் நிறுவனங்கள் நிற்கின்றன. நாடுகளைப் பொறுத்த வரையில் பிரான்ஸ், அமெரிக்கா, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு அடுத்தபடியாக செய்மதிகளை ஏவுவதில் சீனா, ஜப்பான் போன்றவை உள்ளன. ஒரு செய்மதியின் விலை 100 தொடக்கம் 120 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருக்கும் அதேவேளை அதை ஏவுவதற்கு 80 மில்லியன் டொலர்கள் கூலியாகப் பெறப்படுகின்றது.

பாரிய பிரதேசங்களை உள்ளடக்கக்கூடிய செய்மதிகளை விட தற்போது குறுகிய பிரதேசங்களை உள்ளடக்கக் கூடிய ஏராளமான செய்மதிகள் விண்வெளியில் வலம்வரத் தொடங்கியுள்ளன. இவற்றை Low Earth Orbit செய்மதிகள் என அழைக்கிறார்கள். பாரிய பிரதேசங்களை உள்ளடக்கும் செய்மதிகள் பூமியிலிருந்து 35 ஆயிரம் கிலோ மீற்றர் உயரத்தில் வலம் வரும் அதேவேளை, இந்த LEO செய்மதிகள் பூமியிலிருந்து 1000 கிலோ மீற்றர் உயரத்தில் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இச் செய்மதிகளின் செயற்பாடுகளினால் தொலைபேசித் துறையே அதிக லாபங்களை அடைய உள்ளன. அதாவது இதன் மூலம் செய்மதித் தொலை பேசிகளின் பாவனை அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அண்மையில் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள 'நேரா உலகத் தொலை பேசிகள்' உலகின் எப்பகுதிகளிலும் உள்ள தொலை பேசிகளுடன் நேரடியாக மிக இலகுவாக தொடர்பு கொள்ள வழி ஏற்படுத்தியுள்ளது. இத் தொலைபேசி விண்வெளியில் மிக உயரத்தில் உள்ள செய்மதிகளின் தொடர்புகளினால் இயக்கப்படுகிறது. இதன் மூலம் பெறப்படும் இணைப்பிற்கான கட்டணமோ சாதாரண சர்வதேச தொலைபேசி இணைப்பிற்கான கட்டணத்தைவிட மிகவும் குறைவானது எனச் சொல்லப்படுகிறது. இதேவேளை அமெரிக்க 'மோட்டோ றோலா' நிறுவனம் குறைந்த உயரத்தில் அதாவது பூமியிலிருந்து 780 கிலோ மீற்றர் உயரத்தில் செயற்படக்கூடியதாக 66 செய்மதிகளை செலுத்த இருக்கிறது. இதனால் பூமியில் உள்ள எந்த ஒரு அஞ்சல் நிலையத்தினதும் தொடர்பு இல்லாமல் நேரடியான தொடர்புகளை இச் செய்மதிகளின் மூலம் ஏற்படுத்திக் கொள்ள முடியும். 1998ம் ஆண்டு செலுத்தப்படும் இச் செய்மதிகளின் வருகையால் 2000 ஆண்டளவில் செய்மதித் தொலைபேசிகள் தற்போதைய கைத் தொலைபேசியின் அளவிற்கு தயாராகி மிகக் குறைந்த விலையில் பாவனைக்கு வரும் அதே நேரம் தொலைபேசிப் பரிவர்த்தனைக்கான கட்டணங்கள் கூட மிக மலிவாகவே இருக்கும் என கணிப்பிடப் பட்டுள்ளது.




நவீன செய்மதித் தொலைபேசி

**- துவாரகன்**

## அண்டவெளியையும் அசுத்தமாக்கும் மனிதன்

அண்மையில் ஒரு ஆய்வு நிறுவனம் மேற் கொண்ட கணிப்பு ஒன்றின்படி அண்ட வெளியில் மனிதனால் தயாரிக்கப்பட்டு ஏவப்பட்ட 8060 பொருட்கள் காணப்படுகின்றன என்று கூறுகின்றது. இவைகளில் 2500 வரையிலானவை செய்மதிகளாகவும், விண்கலங்களாகவும் வேறு ஆய்வுப் பொருட்களாகவும் இருக்கும் அதேவேளை, எஞ்சியவை வான்வெளிக் குப்பை என கூறும் 'கோடாட்' விண்வெளி ஆய்வு நிறுவனம் இவைகள் ஒன்றுடன் ஒன்று எவ்வகையிலேனும் மோதினால் அதனால் அண்டவெளியில் ஏற்படக்கூடிய ஆபத்து மிகப் பெரிதாக இருக்கும் என்று அச்சம் தெரிவிக்கின்றது.

ஸ்பெஷல் குரு பீடா

பாரிசில் பிரபல்யமான கடைகளில் கிடைக்கும்!

உங்கள் தேவைக்கு என்றும் கேட்டு வாங்குங்கள்

தொடர்புகளுக்கு:
அம்பாள் வீடியோ -
26, Rue Perdonnet, 75010
Paris. M°: La Chapelle
Tel: 42 09 33 81
(ADV)

வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கள வைபவங்களுக்கும், லூர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;



நித்தி

Tel: 43 03 07 08 / 48 05 02 14 / 49 23 97 32 - பிரயாண வசதி
கருதி: 07 34 80 51
(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரநினைவாகி எம் நெஞ்சமதில்.....

மண்டைதீவில் வித்தாக
வீரவேங்கை
**ராஜ்**



பிறப்பு:
26.08.1976

வீரச்சாவு:
25.08.1990

தங்கவேலாயுதம்
ஜெயராஜ்



திரு. தங்கவேலாயுதம்

பிறப்பு:
09.09.1946
துரோகிகள் அழிப்பில்:
19.06.1989
(தாளையடி மயிலிட்டி)

மணலாற்றில் வித்தாக
கப்டன்
**வரதப்பா**

பிறப்பு:
15.12.1972

வீரச்சாவு:
24.09.1991



(கந்தக்கண்ணன்)
தங்கவேலாயுதம்
விஜயராஜ்

தமிழிற்கொரு காவியம் உண்டு
தமிழனுக்கொரு தரணி உண்டா?
தமிழனுக்கில்லையா? ஆட்சி,
ஆட்சி வேண்டிடவே
வேண்டும் எமக்குப் புரட்சி
என எழுந்தீரோ

வாழ்க்கையிலும் மரணம் வாழும் இறப்பதில்லை
மரணத்திலும் மலர்ந்திடுவோம் இறப்பதில்லை
வாசகத்தாலும் ஈழத்தை விடிவிற்கு
ஈர்த்து விட்டு
வான்வரை சென்றுவிட்டீர்
உங்கள் இலட்சியம் அது நிறைவேற
எமது பயணம் தொடரும்.....

தகவல்: உதயராஜ் (சுவிஸ்) Tel: 061-361 66 42

திருப்பூர் மயிலை மக்கள் (தமிழீழம் மயிலிட்டி)

(ADV)

# மரண அறிவித்தல்

## திருமதி முத்துப்பிள்ளை மூத்ததம்பி
## (சிறுப்பிட்டி கிழக்கு)



சிறுப்பிட்டி கிழக்கைச் சேர்ந்த திருமதி முத்துப்பிள்ளை மூத்ததம்பி அவர்கள் கடந்த 17.09.96 செவ்வாய்க்கிழமை சிறுப்பிட்டியில் காலமானார்.

இவர் பிரபல வர்த்தகர் மூத்ததம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு, திருமதி ஆறுமுகம் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு, திருமதி சரவணமுத்து - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராஜா (பாரிஸ்), சிவராஜா (ஜேர்மனி), சிறீஸ்கந்தராஜா (சிறீ - ஜேர்மனி) தர்மராஜா (பாரிஸ்), செல்வராஜா (பாரிஸ்), தவமணிதேவி (இலங்கை), துரைராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இந்திராணி (பாரிஸ்), சரஸ்வதி (ஜேர்மனி), திலகேஸ்வரி (கலா- ஜேர்மனி), ஜீவா (பாரிஸ்), யோகநாதன் (யாழ் போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும்.

பகீதரன், சோபிகா, ரோகினி, சுரேகா, சிந்துஜா, கௌசல்யா, சாருஷன், சராஜகன், அஸ்வின், கார்த்தீபன் ஆகியோரின் அன்புப் பேத்தியாரும், காலஞ்சென்ற பொன்னையா, இரத்தினசபாபதி, சிதம்பரநாயகி, சுப்பிரமணியம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி செல்லமுத்து (இலங்கை), காலஞ்சென்ற கார்த்திகேசு, தங்கமலர், மனோரஞ்சிதமலர் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் கடந்த 18.09.96 சிறுப்பிட்டியிலுள்ள குடும்ப மயானத்தில் நடைபெற்றது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
நடராஜா (பாரிஸ்): 49 83 75 34 / தர்மராஜா (பாரிஸ்): 43 94 38 44 / சிவராஜா (ஜேர்மனி): 0421 420 765 / சிறீ (ஜேர்மனி): 07154 29253 / துரை (சுவிஸ்): 091 682 14 10

(ADV)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பை குழப்பத்தால் மட்டுநகரில் பெரும் பரபரப்பு

மட்டக்களப்பு நகரத்தின் போக்குவரத்து நெருக்கடி மிகுந்த பிரதேசத்தில் அநாதரவாக கிடந்த கைப்பை ஒன்று பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

கடந்த திங்கட்கிழமை 22.09.96 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் மட்டக்களப்பு லொயிட்ஸ் அவனியூவிலுள்ள தனியார் தபால் நிலையத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றின் மீது பெண்களின் கைப்பை ஒன்று பல மணிநேரமாக தேடுவாரற்று கிடந்தது.

இந்தப்பை மீது சந்தேகம் கொண்ட சிலர் அதில் குண்டு இருக்கலாமென பொலிஸாருக்கு தகவல் கொடுக்க சிறிது நேரத்தில் அந்தப் பகுதி பெரும் பரபரப்புக்குள்ளாகியது. மக்களெல்லாம் சிதறி ஓடினர். வர்த்தகர்கள் கடைகளை இழுத்துப் பூட்டிக் கொண்டு ஓடினர். வாகனங்கள் அந்த வீதியைத் தவிர்த்து வேறு வீதியால் சென்றதால் மட்டக்களப்பு நகரத்தில் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது.

இறுதியில் இராணுவத்தினர், குண்டு செயலிழக்கவைக்கும் படைப் பிரிவுடன் அங்கு விரைந்து வந்து அந்தக் கைப்பையை பத்திரமாக அப்புறப்படுத்தி அருகிலுள்ள ஆற்றங்கரைக்கு கொண்டு சென்று வெடிக்க வைத்தபோது அதில் குண்டு எதுவும் இருக்கவில்லை எனத் தெரியவந்தது. அதற்குள் இருந்த அடையாள அட்டை அடையாளம் காணமுடியாத நிலையில் உருகிப்போயிருந்தது. அதற்குள் இருந்த பணம் எரிந்த நிலையில் காணப்பட்டது.

# கிழக்கில் புதிய இராணுவ முகாம்

கிழக்கு மாகாணத்தில் புதிய இராணுவ முகாம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை 22.09.96 அன்று அமைக்கப் பட்டுள்ளது.

வாழைச்சேனைக்கு வடக்கே ஆற்றுக்கு அப்பால் உள்ள இக் கிராமத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய முகாம் மூலம் தற்போது இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் புலிகளின் வசம் செல்லாமல் தடுக்க முடியும் என கிழக்கு பிராந்திய இராணுவத் தலைமைப்பீடம் கருதுவதாக சொல்லப் படுகிறது.

முல்லைத்தீவு இராணுவத் தளத் தாக்குதலுக்குப் பின்பு புலிகளின் அடுத்த தாக்குதல் கிழக்கு மாகாணத்திலாக இருக்கலாம் என இராணுவத் தலைமைப்பீடம் எதிர்பார்த்திருப்பதாகவும், கடந்தவாரம் கிழக்கிலுள்ள தமது உறுப்பினர்களை வன்னிக்கு வருமாறு புலிகள் அழைத்ததை அவர்களது வானொலி தொடர்பை ஒட்டுக் கேட்டதன் மூலம் தெரிந்துகொண்ட அவர்கள் இவ்வாறு புலிகள் பெருமளவில் வன்னிக்கு அழைக்கப்படும் பட்சத்தில் கிழக்கில் ஒரு பாரிய தாக்குதலை தாம் நடத்தவே தற்போது நாசிவன்தீவு முகாம் அமைக்கப் பட்டதாக கொழும்புச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

# பொலிஸ் நிலையம் புலிகளிடம் வீழ்ந்தது

## இரு பொலிஸார் பலி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள எல்லைக் கிராமத்தில் அமைந்துள்ள பொலிஸ் நிலையம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலால் பொலிஸ்நிலையம் புலிகள் கைகளில் வீழ்ந்தது. இரு பொலிஸார் பலியானதுடன் பலர் படுகாயமடைந்தனர். ஆயுதங்களையும், போர் தளபாடங்களையும் கைப்பற்றிய விடுதலைப்புலிகள் எவ்வித இழப்புமின்றி தளம் திரும்பினர்.

கடந்த 15-ம் திகதி பொலிஸ் நிலையத்தை சுற்றி நிலையெடுத்துக் காத்திருந்த புலிகள் தாக்குதலுக்கான வேளை வந்ததும் பொலிஸ் நிலையத்தின் மீது மோட்டார்த் தாக்குதலையும், துப்பாக்கிப் பிரயோகத்தினையும் மேற்கொண்டவாறு பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர். புலிகளின் தாக்குதலை சமாளிக்க முடியாத பொலிசார் இறந்தவர்களின் சடலங்களையும் விட்டுவிட்டு காயமடைந்தவர்களைத் தூக்கிக்கொண்டு ஓடித்தப்பினர்.

பொலிஸ் நிலையத்தை தமது கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவந்த புலிகள் T56 துப்பாக்கிகள் உட்பட பல ஆயுத தளபாடங்களைக் கைப் பற்றியுள்ளனர்.

# எல்லைக் கிராமங்களில் அமுக்க வெடிகள்

எல்லைப்புறக் கிராமங்களில் விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காக அப்பகுதியெங்கும் சிறிலங்கா இராணுவத்தினர் பெருந்தொகையான அமுக்க வெடிகளைப் புதைத்து வைத்துள்ளனர்.

கடந்த வாரம் பொலநறுவை மாவட்டத்தில் கடவத்தைமடு என்ற இடத்தில் ஒரு அமுக்க வெடி வெடித்ததில் ஒரு படையினன் இறந்து பொதுமக்களில் ஒருவர் காயமடைந்துள்ளார். புலிகளுக்காக புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இப்போது இராணுவத்தினரையே பதம்பார்க்கத் தொடங்கியுள்ளன என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஈழமுரசு சந்தா விண்ணப்பப் படிவம்

பெயர்: ..............................

முகவரி: ..............................

..............................

தொலை பேசி எண்: ..............................

பிரான்சுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 250 பிரெஞ்சு பிராங்குகள் ☐

12 மாதம் → 500 பிரெஞ்சு பிராங்குகள் ☐

பிரான்ஸ் தவிர்ந்த ஏனைய நாடுகளுக்கான சந்தா (தபாற் செலவுடன்)

6 மாதம் → 260 பிரெஞ்சு பிராங்குகள் ☐

12 மாதம் → 520 பிரெஞ்சு பிராங்குகள் ☐

காசுக்கட்டளை, காசோலையை, 'ஈழமுரசு' என்ற பெயருக்கு அனுப்பவும். நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"EELAMURASU"

22, Rue Perdonnet, 75010 Paris.

TEL: 40 37 63 63 / FAX: 40 37 64 64

(32ம் பக்கத் தொடர்ச்சி)

## யாழ்ப்பாணத்தை...

கப் பட்டுள்ளன.

விடுவிக்கப்பட்ட பகுதியில் உள்ள ஒருவர், தனக்கு மிக அருகிலுள்ள விடுவிக்கப்படாத பகுதியில் இருக்கும் தனது உறவினர் ஒருவரைப் பார்க்க விரும்பினால் விசேட அடையாளப் பத்திரத்துடன் பல மைல் தூரமுள்ள இந்த வேலி அருகாகச் சென்று இராணுவக் காவலரணைக் கடந்துதான் செல்ல வேண்டி உள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் இராணுவம் தனது நடவடிக்கைகளை வைத்திருக்கும் அதே வேளை, விடுவிக்கப்படாத பகுதி எங்கும் விடுதலைப் புலிகள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

இந்தத் தகவல்களை முன்பு அரசுக்கு சார்பாக கருத்து வெளியிட்டுவந்த மனித உரிமைகளுக்கான யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர்சங்கம் கொழும்பிலிருந்து தெரிவித்துள்ளது.


COMPUTER CLASSES
IDP




நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொம்பியூட்டர் வகுப்புக்களுடன் புதிய கொம்பியூட்டர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| Programmation | : VISUAL BASIC 3.0 |
| Windows | TURBO C++ 3.0 |
| Base de Données | : DBASE , ACCESS |
| Publication Assistée | : PAGEMAKER |
| Par Ordinateur | CORELDRAW |
| Bureautique | : WINDOWS 95 |
| | MS PUBLISHER |
| | WORD 7, EXCEL 7 |

விரிவுரையாளர்

JAFFNA IDP யின் பிரபல கொம்பியூட்டர் விரிவுரையாளர்

MR . T . SOORIYAKUMAR

(இவர் Parisல் கடந்த 5வருடங்களாகவும் Jaffna IDPயில் 4வருடகாலமாகவும் விரிவுரையாளராக கடமையாற்றியவர் குறிப்பாக யாழ்பல்கலைக்கழக மாணவர்களுக்கு)

தமிழ் எழுத்துகளை மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

வகுப்புகள் ஒவ்வொரு மாத நடுப்பகுதிகளிலும் ஆரம்பமாகும்

கொம்பியூட்டர் வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

மேலதிக தொடர்புகளுக்கு

Tel : 42 . 09 . 37 . 54

வகுப்புகள் நடைபெறும் இடம்

A.I.D.P

41 , Rue De La CHAPELLE,

75018 PARIS.




Metro : Marx Dormoy or Porte De La CHAPELLE

Bus N° : 60 , 65 , 350

## கடை விற்பனைக்கு / வாடகைக்கு

NILAN STORE

C.C. Porte de La Ville, 95140 GARGE LES GONESS

என்னும் முகவரியில் உள்ள கடை,வாடகைக்கு, அல்லது விற்பனைக்கு உள்ளது.


மேலதிக விபரங்களுக்கு:

Tel: 39 86 96 12 காலை 9.30 மணி - மாலை 7.30 மணிவரை.

Tel: 39 93 83 74 இரவு 8.30 - 10.00 மணிவரை.


## மரண அறிவித்தல்

மண்ணில்: 17 - 04 - 1972



விண்ணில்: 23 - 09 - 1996

### சின்னப்பொடி ஜெயசங்கர்

(அளவெட்டி)

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்சை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்டிருந்த செல்வன். சின்னப்பொடி ஜெயசங்கர், 23.09.96 அன்று அதிகாலை பாரிசில் அகால மரணமானார்.

இவரின் பூதவுடல் 24.09.96 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை Institut Medico-Légal de Paris - 2, Place Mazas Paris, 75013 Paris. M°: Qaui de la Rapée-இல் அஞ்சலிக்காக வைக்கப்படும். தகனக் கிரியைகள் பற்றிய அறிவித்தல்கள் பின்னர் அறியத் தரப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்: நண்பர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழமுரசு
Eelamurasu Weekly
அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 40 37 63 63
Fax: 40 37 64 64

உங்கள் தேவையறிந்து எங்களின் சேவை
Kumars Shop S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 35 10
Fax: 42 59 35 00
K.T.C. Jewels
193, Rue du Fg. S'Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 42 05 41 36

குமார்ஸ்
Kumars Jewels S.A.R.L.
80, Bld. Barbes,
75018 Paris.
M°: Marcadet Poissonniers
Tél: 42 59 11 52
Fax: 42 59 35 00

# வெளியார் மத்தியஸ்தத்துக்கு சந்திரிகா தயாராம்

சிறீலங்கா அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்ய மூன்றாவது நாடு ஒன்று முன்வருவதை ஏற்கத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சென்னையிலிருந்து வெளிவரும் புறொண்ட் லைன் ஆங்கிலச் சஞ்சிகைக்கு அவர் அளித்த பேட்டியில் பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும், ஆனால் ஒரு மூன்றாவது பிரிவினர் தலையிட்டு பேச்சு வார்த்தை நடப்பதானால் இந்த நிபந்தனையைக் கைவிட்டு வேறு சில நிபந்தனைகளின் அடிப்படையில் பேச்சு வார்த்தை நடத்தலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

## புலிகளைப் பலவீனமாக்குவதற்கே தடைசெய்ய யோசிக்கிறார்களாம்

விடுதலைப் புலிகள் இயக்கத்தை சர்வதேச ரீதியில் பலவீனமாக்குவதற்கே சிறீலங்கா அரசாங்கம் தடைசெய்வது பற்றி ஆலோசித்து வருவதாக இந்தியாவிற்கான சிறீலங்காவின் உயர் ஸ்தானிகர் மங்கள முனசிங்கா தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம், மேற்கு வங்காளத் தலைநகரான கல்கத்தாவில் பெளத்த சிங்கள அறிஞரான அநாகரிக தர்மலாபாவின் சிலையைத் திறந்துவைத்து உரையாற்றிய அவர் இந்தத் தடைமூலம் லண்டன் போன்ற நகரங்களில் உள்ள புலிகளின் அலுவலகங்களை மூடவைக்கலாம் எனத் தாம் நம்புவதாகவும், புலிகளைத் தடைசெய்த இந்தியாவின் நடவடிக்கையை தாங்கள் வெகுவாகப் பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டு நிலமைபற்றி கருத்துத் தெரிவித்த முனசிங்கா அண்மையில் இடம்பெற்ற சட்டசபை, பாராளுமன்றத் தேர்தல்களில் புலிகளையும், தமிழீழக் கோரிக்கையையும் ஆதரித்தவர்கள் படுதோல்வி அடைந்ததானது தமிழக மக்கள் புலிகளையும், தமிழீழக் கோரிக்கையும் ஏற்கவில்லை என்பதை எடுத்துக் காட்டுகின்றது என்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரச்சினை சிங்களவருக்கும், தமிழருக்கும் ஆன பிரச்சினை அல்ல என்றும் கடந்த 13 வருட காலத்தில் பாரிய பதட்ட நிலைகள் இருந்தபோதும் எந்த ஒரு தமிழரும் அழிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

## யாழ்ப்பாணத்தை பிரிக்கும் இராணுவ வேலி

யாழ்ப்பாணக்குடாநாடு, விடுவிக்கப்பட்ட பிரதேசம், விடுவிக்கப் படாத பிரதேசம் என இரண்டாகப் பிரிக்கப் பட்டுள்ளது. இப் பிரதேசங்களைப் பிரிக்க பலமைல் நீளமான வேலியும் சுவரும் எழுப்பப் பட்டுள்ளது.

அனேகமான பகுதிகளில் அலுமினியம் மற்றும் கூரைத் தகடுகள் போன்றவற்றாலும், பல ஆயிரக்கணக்கான பனை மரங்களைத் தறித்தும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. அது போல் இடித்துத் தகர்க்கப் பட்ட வீடுகளின் கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் எழுப்பப்பட்டுள்ளது.

விடுவிக்கப் படாத பகுதிகளுக்குள் கந்தரோடை மேற்கு, உடுவில், நாச்சிமார்கோவிலடி, வட்டுக் கோட்டை, சங்கானை, மானிப்பாய் போன்ற இடங்கள் அடங்குகின்றன.

விடுவிக்கப் பட்ட பகுதிகளுக்குள் கற்கோவளம், வறாத்துப்பளை, மந்திகை, புத்தூர், கொடிகாமம் போன்ற பகுதிகள் அடங்குகின்றன. விடுவிக்கப்படாத பகுதியில் முட்கம்பி வேலிகளும், கண்ணி வெடிகளும் இராணுவத்தால் அமைக்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

பிரான்சில் வதிவிட அனுமதி கோரி பல மாதங்களுக்கும் மேலாகப் போராடி வரும் அகதிகளுக்கு ஆதரவாகவும், மற்றும் வதிவிட அனுமதி அற்றவர்களுக்கு அனுமதி கோரியும், அகதிகளை நாடுகடத்துவதற்கு எதிராகவும், அகதிகளுக்கெதிரான சட்டங்களை எதிர்த்தும் நாடுதழுவிய மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவுள்ளது.

பிரான்சிலுள்ள 55க்கு மேற்பட்ட மனித உரிமை அமைப்புக்கள் இவ் ஊர்வலத்தில் எல்லா நாட்டவர்களையும் கட்டாயமாக பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

காலம்: 28.09.96
பிற்பகல் 3.00 மணி
ஆரம்ப இடம்:
Place de la République

## புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் படையினர் எத்தனை பேர்

தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் சிறீலங்கா பாதுகாப்பு படையினர், மற்றும் சிங்கள பொதுமக்கள் எத்தனைபேர் என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பில் பத்திரிகையாளர்களுக்கு கருத்து வெளியிட்ட செஞ்சிலுவைச் சங்க அதிகாரி ஒருவர், விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் 20 இராணுவத்தினரும், 2 கடற்படையினரும், 16 மீனவர்களும், ஜரிஸ் மோனா ஊழியர்கள் 8 பேருமாக மொத்தம் 46 பேர் இருப்பதாகவும், அவர்களைக் கடந்தவார இறுதியில் மூன்று தடவை சென்று சந்தித்தாகவும் தெரிவித்துள்ளார்.

அவர்கள் நலத்துடன் இருக்கிறார்களா? என்று ஒரு பத்திரிகையாளர் கேட்போது புலிகள் அவர்களை நல்ல முறையில் கவனிப்பதாக அவர்கள் கூறியதாகவும், தங்களை விடுவிக்கும் விடயத்தில் அரசாங்கதரப்பில் போதிய முயற்சி எடுக்கப்படவில்லை என்ற குறையே அவர்களுக்கு இருப்பதாகவும் அந்த அதிகாரி கூறினார்.

## வன்னிப்பகுதியில் உணவுத்தட்டுப்பாடு உச்சக்கட்டத்தை அடைந்துள்ளது

வன்னிப் பெருநிலப் பகுதியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு உச்சக்கட்ட நிலையை அடைந்துள்ளது.

சிறீலங்கா அரசாங்கம் கிளிநொச்சி மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படும் உணவுப் பொருட்களில், 1200 மெற்றிக் தொன் உணவுப் பொருட்களை குறைத்துள்ளது. கிளிநொச்சி மாவட்டத்திற்கு 18 ஆயிரம் மெற்றிக் தொன் உணவு தேவையாக இருக்கும் போது 5240 மெற்றிக் தொன் உணவு வகைகளே வந்து சேர்ந்துள்ளதாக கிளிநொச்சிச் செயலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் 27589 குடும்பங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 13442 குடும்பங்களும் அகதிகளாக புலம் பெயர்ந்து வந்துள்ளதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனாலும் இன்னும் ஏராளமான குடும்பங்கள் காடுகளிலும், வீதி ஓரங்களிலும் இருந்து வருவதாகவும், இவர்கள் பற்றிய விபரங்கள் இன்னும் செயலகத்திற்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வன்னிப் பகுதியில் மழைக் காலம் ஆரம்பித்துவிட்டதால் தெருவோரங்களிலும், காடுகளிலும் வசிக்கும் மக்களின் நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளதென்று தொண்டர் நிறுவனங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

தமிழ் வீடியோ, ஓடியோ கசட், கொம்பக் டிஸ்க் மற்றும் புடவை வகைகள், மளிகைச் சாமான்களுடன் கடல் உணவுகள், மரக்கறிகள் போன்ற உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
S.K.TRADING
Gasometer Street 31,
8005 Zurich,
Switzerland
Tel: 01-2724336
077-782201
Fax: 01-2732377

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org